GOOD WISHES FOR HAPPY PONGAL TO ALL OUR PATRONS

The only House in the City proudly presenting the products acclaimed as Second to none in the World.

EKCO RADIOS & RADIOGRAMS

R. C. A. RADIOS & RADIOGRAMS

COLUMBIA

Gramophones & Records

H. M. V. Gramophones

- and Records -

Refrigerators, Air Conditioner, "HAMILTON" Watches, PLASTIC Novelties, Radio and Gramophone accessories.

(RADIO & GRAMOPHONE SERVICING A SPECIALITY)

Please visit:— **GUPTHA AGENCIES**

(GUPTHA'S MUSICAL HOUSE)

208/10, High Road, TRIPLICANE, MADRAS

—AND—

GUPTHA CORPORATION

Automobile Dealers

P. B. No. 35 : : SALEM

நல்ல படங்கள்தான் தேவை!

நாங்கள் தருகிறோம் நான்கு மணிகள்

ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட்

மதராஸ் & திருப்பூர்

நாடகப் புரவலர், நாடகக் கலாமணி,

வைரம் அருணாசலம் செட்டியார் அவர்களின்

பூரண உரிமைபெற்ற நாடகம்

பக்த நந்தனார்

★

ஸ்ரீ ராம பால கான வினோத சபையார்

★

சென்னை மவுண்ட் ரோட்

S. V. S. நியூ தியேட்டரில்,

27—1—48 முதல்

★

தினசரி மாலை 6-15 க்கும்,

வியாழன் மாலை 9-15 க்கும்

திங்கள்தோறும் நாடகம் இல்லை

★

டிக்கட்டு விவரம் :—

ரூ. 3—8—0 ; 2—12—0 ; 1—10—0 ;

ரூ. 1—3—0 ; 0—10—0.

குதூகல பொங்கல் வெளியீடு
சுகுமாரின் தேவதாஸி
திரையிடத் தயார்
கண்ணன்
லீலா
கிருஷ்ணன்
மதுரம்
★
டைரக்ஷன் :
M.L. டாண்டன்
ஸ்ரீகுமார் பிக்சர்ஸ் லிமிடெட், வேபபேரி, சென்னை

ஜீத் ப்ரொடக்ஷன்

பர்வாணா

(ஹிந்தி)

சைகாலின் கடைசிப் படம்

OFFICE OF THE REGISTRAR OF BO
13 FEB 1948
MADRAS

சைகால், ஸுரையா, நஜ்மா

நடித்தது.

மதருஸ் சிடி, தமிழ் நாடு, மலபார், சிலோன்

உரிமையாளர் :

குமரன் பிக்சர்ஸ்

71, ஐயப்ப செட்டித் தெரு, :: மதருஸ் 1.

Remember!
4037



FOR ALL KINDS of
PRINTING
BLOCK MAKING
DIE STAMPING.
etc

'Grams: 'PRINTHOUSE'
Post Box 1569

COMMERCIAL PRINTING &
PUBLISHING HOUSE
46, ARMENIAN ST., ...MADRAS 1.



பொங்கல் வாழ்த்து
எமது அபிமானிகள் ஆதர வாளர்கள் எல்லோருக்கும் மனப்பூர்வமான பொங்கல் வாழ்த்துக்கள்!
பாசரசு—கலை
ஸ்டேஜ் & ஸ்க்ரீன்
ஸுபா

சினிமா நடிகர்

எம். கே. ராஜகுமார்

சொல்லுகிறார்.

கலையில் வெளியாகும் அறிஞர்களின் கட்டுரைகள், சினிமா நக்ஷத்திரங்களின் பேட்டியில் காணப்படும் கருத்து நிறைந்த விஷயங்கள், 'கேளுங்கள்' பகுதியில் வெளியாகும் கண்யமும் குத்தலும் நிறைந்த பதில் முதலியன மிகவும் சுவாரஸ்யமாயிருக்கின்றன. தவிர புதிய முகங்களுக்கு ஆதரவு காட்டும் பத்திரிகை கலை என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. 'கலை'யை நான் ஆர்வமுடன் படிக்கிறேன். கலையில் சம்மந்தப்பட்ட ஒவ்வொருவரும் 'கலை' பத்திரிகையைப் படிப்பது அவசியம்.

M. K. ராஜகுமார்.

பாசரகு காரியாலயம் :: சென்னை - 1.



சரசுவதி ஓவியம் "கலாவதி"

பாசரசு

ஆசிரியர்கள்

எம். எஸ். பாசு

சரசுவதி பாசு

மலர் 1 | ஜனவரி '48 | இதழ் 8

இந்த மாதம்

	பக்கம்
மக்கள் சர்க்காரும் சிகப்பு நாடாவும் ...	10
வாழ்க்கைப் பாதையில் ...	17
சோமுவின் சோகம் ...	28
சிதைந்த மனம் ...	34
அரங்கேற்றம் ...	39
ஆறுதல் ...	48
நெஞ்சிலே நெருப்பு ...	51
விடுதலை ...	59
மைதிலி ஜகந்நாதன் ...	65
சங்கீத வித்வான்கள் ...	73
நளினியின் புன்முறுவல் ...	81
மிஸ் ஷாகுந்த் ...	89
அவன் மறதி ...	112
மடிந்த காதல் ...	117
நல்ல சிக்கனம் ...	126
புயல் ...	129
மனோரதம் ...	132
விளக்கிச் சொல்லுங்கள் ...	141

பாசரசு - சென்னை 1

இம்மாத அட்டை அழகி—ரஜினி

"பாசரசு" வில் வரும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனை.

விலை ரூபாய் ஒன்று

மக்கள் சர்க்காரும் சிகப்பு நாடாவும்

கனம் மந்திரி எம். பக்தவத்சலம்

மக்களுக்காகத்தான் அரசாங்கம் இருக்கிறது. பொது ஜனத்தின் பிரதிநிதிகளால் நடத்தப்படும் சர்க்காரைத்தான் மக்களின் சர்க்கார் என்று சொல்லுவார்கள். தம்முடையதென சொல்லிக் கொள்ளக் கூடிய சர்க்கார் ஒன்று மக்களுக்கு மிக மிகத் தேவையானது. அவர்களுடைய தேவைகளை அனுசரித்துப் பூர்த்தி செய்யும் அரசாங்கம்தான் மக்களுடைய அரசாங்கமாகும். இந்தப் பணியை ஏற்று செவ்வையாக நடத்திக் கொடுக்க திறமை வாய்ந்த நிர்வாகம் இன்றியமையாதது. நெடு நாட்களாகக் குதிர்ந்து வந்திருக்கும் இந்நிர்வாகத்தின் அடிச்சுவட்டுகளை திடுதிப்பென கைவிட்டு விட முடியாது. இத்தகைய சமுகமான நிர்வாகத்தின் பழம் பண்புகளில் ஒன்று சிகப்பு நாடா. இந்தப் பழக்கத்தை ஒட்டி உராய்ந்தாற் போல மக்களின் அரசியலை வகுத்துச் செல்லும் வகை ஆராயத்தக்கதே.

முன் குறிப்புகளைக் கொண்டு மேலே ஆவனவற்றை செய்ய வேண்டுவது என்பது எந்த நிர்வாகத்திலும் காணக் கிடைக்கும். அப்பொழுது தான் எந்த வேலையையும் அரை குறையாக விடாமல் தொடர்ந்து நடத்திச் செல்ல இயலும். பொறுப்பு வாய்ந்தோர் அவ்வேலைகளை மேற் கொள்ளும் போது தம் சித்தாந்தத்திற் கேற்றபடி எந்த முடிவையும் வகுத்துக் கொள்ள முடியும். மக்களுடைய அரசியலில் நடைபெறும் ஒவ்வொரு காரியமும் அவர்களுடைய நன்மையை அனுசரித்தேதான் செய்யப்படுகின்றன என்று அறிந்து கொள்ள வேண்டும். ஆனால் இந்த நிர்வாக முறை எவ்வளவு முக்கியமானதாக இருப்பினும் இதைப் பற்றி சாதாரணப் பிரஜை கொஞ்சம் கூட கவலைப்படுவதில்லை. அவனுக்கு வேண்டியதெல்லாம் தன் குறைகளை நேரடியாக மேலிடத்திற்கு அறிவித்து உடனடியான நிவாரணம் பெறுவதைத் தான் பொறுத்திருக்கிறது. இந்தக் குறுக்குப் பாய்ச்சலுக்குப் பெருந்தடையாக நிற்பதுதான் சிகப்பு நாடா. எனவே அவன் அதைப் பற்றி மிகவும் குறைப்பட்டு சபிப்பது தவிர்க்க முடியாததாகும்.

'செல்வமும் செல்வாக்கும் படைத்த மக்களுக்குத்தான் சர்க்காரிலிருந்து எத்தகைய சலுகையும் சுலபமாகக் கிடைத்து விடுகிறது. இந்தச் சிகப்பு நாடா

208429

வின் தொல்லை அவர்களைக் கட்டுப் படுத்துவதில்லை' என பகிரங்கமாக சர்க்காரைக் குற்றம் சாட்டுகிறான் சாதாரணப் பிரஜை. தன் நிலத்திற்கு மிக அவசரமாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருக்கிறது, ஒரு குடியானவனுக்கு. இன்றேல் அவனுடைய விளைவு பொசுங்கிப் போய் நாசமடைந்து விடும். அணைக்கட்டுத் தேக்கத்தில் ஏராளமான ஜலம் இருக்கிறது. கண்ஜுமாயைத் திறந்து விட்டுத் தண்ணீரை தன் நிலத்திற்குக் கொண்டு செல்ல அவனுக்கு ஒரு பர்மிட்' (அனுமதிச் சீட்டு) தேவையாக இருக்கிறது. ஸ்தல அதிகாரியை நேரில் கண்டோ, அல்லது ஓர் விண்ணப்பத்தின் மூலமாகவோ தன் நிலத்திற்கு நீர் பாய்ச்ச வேண்டிய அவசியத்தைப் பற்றி எடுத்துரைத்துக் கேட்கலாம் அவன். ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் எந்தக் கண்ஜுமாயையும்திறந்து ஜலத்தை கீழே செல்லவிடக் கூடாது என்று ஒரு நிரந்தரமான உத்தரவு அல்லது 'தடை இருக்கக் கூடும். எனவே ஸ்தல அதிகாரி அவ்வேழை விவசாயின் குறையை நிவர்த்திக்க இயலாதவராக இருக்கிறார். இதைப் பற்றி மேலதிகாரிகளிடம் சிபார்சு செய்யக் கூடிய சக்தியோ, கூட அவருக்குக் கிடையாது.

எனவே விவசாயின் உடனடித் தேவை பூர்த்தியாகாமலேயே நின்று விடுகிறது. நியாயமாக அவனுக்குத் தேவையாக விருந்த தண்ணீர் சமயத்தில் கிடைக்காமற் போவதால் அவனுடைய மகசூல் நஷ்டமாகிப் போகிறது. தன் தேவைக்கும் அவசரத்திற்கும் உதவாத சர்க்கார் தன்னுடையதல்ல என்னும் உள்ளுணர்வு தானாகவே ஏற்படுகிறது அவனுக்கு.

சர்க்காரின் சிகப்பு நாடாவினுள் கட்டுப்பட்டுக் கிடக்கும் நிர்வாக இயந்திரம் ஒரு விவசாயின் குறையை நிவர்த்திப்பதில் குறுக்கே வந்து நின்றது என்பது என்னமோ வாஸ்தவம்தான். எந்தெந்த காலங்களில் எவ்வளவு ஜலம் விடக்கூடும் என்பதைப் பற்றி சர்க்கார் ஏற்கெனவே ஓர் கணக்கெடுத்து நிர்ணயித்து விட்டிருக்கும். இதை மீறி ஒரு சாராருக்கு ஜலம் தேவை என்பதற்காக அவர்கள் கேட்டவுடன கண்ஜுமாய்களைத் திறந்து விடுவதினால் பிறிதோரிடத்திலுள்ள பலருக்கு இது கெடுதியை விளைவிப்பதாயிருக்கலாம். மனம் போனபடி அவரவர்கள் வேண்டும்போது தேக்கத்திலிருந்து ஜலத்தை விட்டுக்கொண்டே போவதினால் நியாயமாக ஜலம் பாய்ச்சப் பெற வேண்டிய பலருக்கு அவர்களுக்குத் தேவையான காலத்தில் ஜலம் கிடைக்காமலேயே போய்விடக்கூடும். இதனால்தான் ஏற்கெனவே வகுக்கப்

பட்டுள்ள கட்டு திட்டங்களுக்குட் பட்டுத்தான் எதையும் பிரயோகம் செய்ய வேண்டிய அவசியம் புலனாகிறதல்லவா?

ஸ்தல அதிகாரிக்கு பாய்ச்சல் நிலங்களின் தண்ணீர்த் தேவையே அறிந்து வழங்கும் உரிமையை நேரடியாக அளித்திருந்தால் அவர் விவசாயியின் உடனடித்தேவையைஉணர்ந்து அதனை உடனே நிவர்த்தித்திருப்பார் என்பது என்னவோ திண்ணம். ஆனால் விவசாயியின் தேவையைப் பற்றி ஸ்தல அதிகாரி மேல் இன்ஜினீயருக்கெழுத, அவர் அந்த சிபார்சை தனக்கு மேலதிகாரியான பெரிய என்ஜினியரிடம் அனுப்ப, அடுத்தபடியாக அவர் தன்னுடைய அபிப்பிராயத்தையும் சேர்த்து எழுதி தலைமை இன்ஜினியருக்கு அனுப்பி வைப்பார். இந்த நிர்வாக 'ரோதா'வில் விவசாயின் விண்ணப்பம் மிதந்து வந்து தலைமை அதிகாரியின் 'உண்டு' அல்லது 'இல்லை' என்னும் பதிலைப் பெறுவதற்குள்ளாக விவசாயியின் பயிர் பாய்ச்சலுக்காக ஏங்கிக் காத்து காய்ந்து பொசுங்கி நாசமாகி விட்டிருக்கும். கொஞ்சம் வசதியுள்ள பேர் வழி என்றால் அந்த இலாக்கா இன்ஜினீயரையே நேரில் கண்டு பேசி வருவார். அவருக்குக் கொஞ்சம் செல்வாக்கும் கூட சேர்ந்திருந்தால் ஸ்தல இன்ஜினீயரை விட்டுத் தலைமை அதிகாரிக்கு தந்தி மூலம் தன் தேவையைக் குறிப்பிட்டு நிவாரணமும் தேடிக்கொள்ளக் கூடும். ஆனால் சாமானியக் குடி ஒருவனால் இந்தக் காரியத்தைச் சுலபமாகச் சாதித்துக் கொள்ள முடியாது. அதற்குத் தகுந்த வசதியும் அவனிடம் கிடையாது. எனவே, அவனுடைய குறை நிவர்த்திக்கப் படாமலேயே நின்று விடுகிறது. இந்தச் சிறு குறையைத் தீர்த்துக் கொடுக்காத சர்க்கார் சாதாரணப் பிரஜையிடமிருந்து தனக்கு உரித்தான மக்களின் சர்க்கார் என்னும் பெருமையை இழந்து விடுகிறது.

மற்றுமோர் உதாரணம் தருகிறேன். ஓர் இடத்திலுள்ள மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான தேவை ஒன்று ஏற்பட்டு விடுகிறது. என்னுடைய (விளம்பர இலாக்கா) இலாக்காவைச் சேர்ந்தது என்றுதான் வைத்துக்கொள்ளுங்களேன். நானாகவே நேரில் இந்தக் குறையை கவனித்து வந்திருக்கிறேன். இனி அக்குறை தோன்றா வண்ணம் இருப்பதற்கான முயற்சியையும் செய்து கொண்டிருக்கிறேன். இந்தப் பிரச்னையைப் பற்றிய நிலைமையையும் நன்கு உணர்ந்திருக்கிறேன் நான். சட்ட சபையில் இப் பிரச்னையில் அக்கறை கொண்ட மெம்பர் ஒருவர் இது சம்பந்தமாக நான் என்ன செய்திருக்கிறேன் என வினவுகிறார். அதே மெம்பர் இக்

கேள்வியை என்னிடம் தனிமையில், சட்ட சபைக்கு வெளியே சந்தித்துக் கேட்டிருப்பாரானால், இது சம்பந்தமாக நான் செய்திருக்கும் ஏற்பாடுகளைப் பற்றியும் கூடிய சீக்கிரத்தில் அக்குறை தீர்வதற்கான அறிகுறிகளைப் பற்றியும் விரிவாகக் கூறியிருப்பேன். அவர் மூலம் சம்பந்தப்பட்ட மக்களும் தங்கள் குறையின் நிவாரண சம்பந்தமாக நடைபெற்று வரும் அலுவல்களைப் பற்றியும் அறிந்து கொள்ள முடியும். ஆனல் சட்ட சபையில் என்னுடைய சொந்த ஹோதாவில் இப் பிரச்னை பற்றி எடுக்கப் பட்டிருக்கும் நடவடிக்கைகளைப் பற்றி கூற முடியாதவனுக இருக்கிறேன் நான். சட்ட சபை நீதியின்படி இப் பிரச்னை சம்பந்தப் பட்ட இலாக்கா நிர்வாகியின் கவனித்திலிருப்பதாகவும், இது சம்பந்தமாக அவர் கடிதப் போக்குவரத்து செய்து கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்படும். ஆகையால் மெம்பர் விரும்பிய பிரச்னையின் முழு விபரமும் இன்னும் தயாராகி கைக்கு வரவில்லை என்றே நான் சபா நாயகரிடம் தெரிவிக்க வேண்டி வருகிறது. உண்மையான நிலைமையையும் பதிலைப் பற்றியும் நான் கூறத்தக்க நிலையிலிருப்பினும் நிர்வாக இயந்திரத்தின் வேலை பூர்த்தியாகவில்லை என்று மெம்பருக்கும் சம்பந்தப் பட்ட மக்களுக்கு ஏமாற்றத்தையளிக்கக் கூடிய பதிலையேதான் நான் சட்ட சபையில் சொல்ல வேண்டியிருக்கிறது.

மக்களின் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய ஒரு குறையைக் கவனிக்க ஒரு சர்க்கார், பொது ஜனங்களுடையது என்று கூறிக் கொள்ளும் குழுவால் இன்னும் சாதிக்க முடியாமற் போனமையைப் பற்றிச் சட்ட சபையார் ஆச்சரியமும் ஏமாற்றமும் அடையக் கூடும். இதன் விளைவாகச் சர்க்கார் பொது மக்களுடைய சொந்தப் பிரச்சனைகளில் போதிய அக்கரை எடுத்துக் கொள்ள வில்லை என்ற தீர்ப்பே உருவாகி விடுகிறது.

அப்படியானல் சம்பந்தப் பட்ட இலாக்காவின் பதிலைப் பெறு முன்பேயே தீர்ந்து போன இப் பிரச்சனைக்கு நேரான பதிலளிக்க என்னல் சாத்தியப் படாமற் போனது ஏன் என்று நீங்கள் கேட்கிறீர்கள் அல்லவா? சட்ட சபையில் சர்க்காரின் சார்பில் நான் பதிலளிக்கும் போது அதன் நடவடிக்கைகளை அனுசரித்துத் தான் பதில் சொல்ல வேண்டி யிருக்கிறது. ஏற்கெனவே சர்க்காரால் வகுக்கப் பட்டுள்ள ஓர் திட்டத்தை மீறி செய்யப் பட்டுள்ள இந்த வேலையை முன் கூட்டியே வெளியிடுவதால் அமுலிலிருக்கும் நடைமுறைத் திட்டத்திற்கே ஆபத்து ஏற்பட்டு விடக்கூடும். ஓர் இடத்

து குறையை அனுசரித்து அந்த இடத்திற் கேற்றவாறு செய்து கொள்ளப்படும் சிறு மாறுதல், முழு திட்டத்தையே சின்னா பின்னமாகத் தோற்றுவித்து விடக் கூடாதே என்பதற்காகத் தான் இப்படி சுற்றி வளைத்து பதில் சொல்ல வேண்டி வருகிறது. இதற்காகவே சம்பந்தப்பட்ட இலாகா இது விஷயமாக எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கையைப் பூர்த்தி செய்யும் வரை சட்ட சபையில் நேரான பதிலைக் கூற முடியாத நிலைமை நீடித்துக் கொண்டே போகிறது. இப்படிப் பட்ட ஒரு எக்கச் சிக்கமான நிலைமையைத் தவிர்க்க வேண்டுமானால் பிரச்சனையின் தன்மையை அனுசரித்து நிர்வாகம் எடுக்க வேண்டிய துரிதமான வேலைக் கிரமத்தை வகுததுக் கொடுக்க வேண்டியது தான் சிறந்த முறை. இதன் மூலம் அவசரமான பிரச்சனைகளை கால தாமத மின்றி தீர்த்துக் கொடுக்க முடியும். உடனடிப் பிரச்சனைகளை வாழையடி வாழையாக சர்க்கார் பின் பற்றி வரும் முறையில் கொண்டு வருவதை விட்டு நேரடியாகக் கவனித்துத் தீர்ப்பதற்கான வசதிகளை அந்தந்த இலாக்காக்களுக்கு வழங்க வேண்டியது மிக மிக அவசியமாகிறது.

இம்மாதிரியான தவக்கங்கள் நிர்வாக இயந்திரத்தினுள் தோன்றாமலிருக்கும்பொருட்டுச் சிகப்புநாடா முறையையே ஒழித்துக் கட்ட வேண்டியது மிக அவசியம் தான். என்றாலும் இதை நடை முறையில் பின் பற்றும்போது குழப்பங்களேற் படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியதும் மிக மிக அவசியமாகிறது. இங்கிலாந்தின் யுத்த இலாக்கா காரியதரிசிகளுள் ஒருவரான ரிச்சர்ட்லா என்பவர் 1941ம் வருஷம் மார்ச் மாதம் 6ம் தேதி மக்கள் சபையில் பேசுகையில் 'சிகப்பு நாடா' முறையை சர்க்கார் பின் பற்றி தருவதினால் தான் பல ஆபாசக் கோளாறுகளை தவிர்க்க முடிகிறது என்று சொல்லியிருக்கிறார். 'சிகப்பு நாடாவை ஒதுக்கி வைக்கும் எந்த சர்க்காருக்கும் அதன் நிர்வாகம் ஓர் நரகத்தையே நினைப்பூட்டுவதாகும் என்றும் கூறினார் அவர். நிர்வாக அதிகாரிகள் சிகப்பு நாடா முறையை ஒதுக்கித் தள்ளி சுபாவீகமான தாமதத்தைப் போக்கி தம் இலாகாவை சுறுசுறுப்பாக்க முயற்சித்தார்களானால் அது அவர்களை பெருங்குழப்பத்தில் தான் கொண்டு விடும். இதற்குப் பல துறைகளிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ள அவருடை அதிகார வரம்பும் ஓர் காரணமாகும் என்பதை மறக்கக் கூடாது. துரிதமான வேலைத் திட்டத்திற்கும் சிகப்பு நாடா முறைக்கும் சமரஸமாகப் பொருந்தி வரக் கூடிய ஓர் மார்க்கத்தைக் கண்டு பிடிப்

பதன் மூலம் தான் இக் குறையை நிவர்த்திக்க முடியும். சர்க்கார் காரியாலய வேலை முறையான 'சிகப்பு நாடா'வினுல் அநீதமான தவக்க மேற்படுகிறது என்பது மறுக்க முடியாது தான். என்ருலும் சர்க்காரின் பழகிப் போன 'ரோதா'வை புறக்கணித்துச் செல்வதும் அவ்வளவாக விரும்பத் தக்கதல்ல ஆனுல் சுற்றி வளைந்து செல்லும் அந்த 'ரோதா'வை நேர்ப் பாதையாக மாற்றிக் கொள்வதினுல் எந்த விதமான தொந்திரவும் ஏற்பட்டு விடா தென திடமாகக் கூறலாம்.

"கை தேர்ந்த நிர்வாகிகளை அமர்த்தி நிர்வாகத்தை நடத்திக் கொள்வ தென்பதை அவசியமானது என அரசாங்கம் கருத வில்லை என்று ஒரேயடியாக அடித்துப் பேசினுர் ஜான் ஸ்டூவர் மில் என்னும் அரசியல் வாதி ஒரு சமயம். ஏனெனில் அவர்கள் மக்களுடைன் சுதந்திரத்தில் சிலேயோட்டப் பார்ப்பார்கள் என்பது மில்லினுடைய அபிப்பிராயம். அப்படி பார்க்கப் போனுல் 1700 ம் நூற்ருண்டுக்குப் பின் கிரிமியா யுத்தம் வரை பிரிட்டிஷ் அரசாங்க நிர்வாகம் எந்த விதத்தில் நடந்திருக்கும் என்று நாம் ஓரளவுக்கு யூகித்துக் கொள்ளலாம். ஏனெனில் அவர்கள் நிர்வாகத் திறனற்றவர்களாயும் பெரும் சோம்பேறிகளாயும், தம் அதிகாரத்தை துஷ் பிரயோகம் செய்பவர்கள்ாயும்இருந்தார்களென்பதை சரித்திரம் கூறுகிறது. மக்களின் சுதந்திரம் பழுதடையாமல் பாதுகாக்க அம்மாதியான முறை அனுஷடிக்கப் பட்டது எனக் கூறப் படுவது மிகவும் மிகைப்பைப் படுத்தப் பட்ட அபிப்பிராயம்.

சுதந்திர நாட்டில் வாழும் மக்கள் திறமை மிக்க ஓர் அரசாங்கத்தை உடையவர்களாக இருக்க வேண்டும். மக்களுடைய குறைகள் உடனடியாகக் கவனிக்கப் பட்டுத் திறமையாக தீர்த்து வைக்கப் படுதல் வேண்டும். தங்கள் குறைகளை உணர்ந்து அதற்குத் தகுந்த பரிகாரம் தேடும் ஓர் சர்க்காரையையே மக்கள் விரும்புகிருர்கள். தங்கள் விருப்பங்களைத் தாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் மூலம் ஈடேறிக் கொள்ளவே சுதந்திர மடைந்த நாட்டு மக்கள் விரும்புகின்றனர். சர்க்காரின் நிர்வாக இயந்திரத்தில் அடிப்படையான சில மாறுதல்களை பொது மக்கள் வரவேற்கிருர்கள். அந்த மாறுதல் தங்கள் வாழ்க்கையின் அன்ருடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருப்பதைத்தான் அவர்கள் விரும்புகிருர்கள். மக்களின் அபிப்பிராயம் பிரதிபலிக்கும் நிர்வாகமொன்றேதான் அரசியல் அவர்களுடையது என்னும் பாவத்தை அறிவுறுத்தக் கூடியதாயிருக்கும். பழைய ஊரைச் சுற்றி

வளர்ந்து வரும் முறையைக் களைந்தெறிந்த நிர்வாகமேயானு லும் நியாயமான கட்டுப் பாடுகளுக்குட் பட்ட நேரான பாதையில் நடவடிக்கைகளை ஓட்டிச் செல்லும் சர்க்கார் ஒன்றுதான் மக்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமாக முடியும். ஒன்றிற்கொன்று தொடர்புள்ள நிர்வாகம்தான் திறமை வாய்ந்தது. இத்தகைய நிர்வாகத்தை மேற்கொள்ளும் மக்க ளின் சர்க்கார்தான் அவர்களுடைய அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருக்க முடியும்.

முன் குறிப்புகளை அஸ்திவாரமாகக் கொண்டு மேல் நட வடிக்கை எடுக்கும் சர்க்கார்தான் திடமாக ஊன்று வேலை செய்ய முடியும். ஆனல் மக்களுக்காக நடத்தப்படும் அரசி யலில் அவர்களுடைய உடனடி தேவைகளும், விருப்பங்களும் நடேற்றப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும். சாதா ரணப் பிரஜை ஒவ்வொருவனுக்கும் அவனுடைய விருப்பு, வெறுப்புகளுக்கு சர்க்கார் எப்பொழுதும் செவி சாய்க்கத் தயாராக இருக்கிறது என்பதை அறிவுறுத்தாத வரையில் மக்களுடைய அரசாங்கமாகாது என்பது திண்ணம். சர்க்கா ரின் அன்ருட அலுவல்களைப் பற்றி பொது ஜனத்திற்குக் கிஞ்சித்தேனும் கவலை கிடையாது. கவலைப் பட வேண்டிய அவசியமுமில்லை அவனுக்கு. தன்னுடைய குறையைத் தீர்த்துக் கொடுக்கச் சர்க்கார் எந்த விதமான அலுவல்களை மேற்கொள்ளப் போகிறது என்பதைப் பற்றிய அக்கறை யும் அவனுக்குக் கிடையாது. நிர்வாக நோக்குடன் பார்க் கும் போது சர்க்காரின் ஒவ்வொரு வேலையும் மிக அவசிய மானதாகக் காணப்படலாம். ஆனல் பொது ஜனம் விரும் புவதெல்லாம் தன்னுடைய குறை உடனடியாக நீக்கப்படுவ தொன்றையே.

என்ருலும், சாதாரணப் பிரஜையின் குறை நீக்கப்படும் படலத்திலும் திட்டமான ஓர் முறை அனுஷ்டிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம். பழகிப் போன சிகப்பு நாடா விவகாரத்திற்கும் அவசரமான பிரச்னைகளைத் தீர்த்துவைக்கும் முக்கியத் துவத்திற்கும் சமமாகப் பொருந்தக் கூடிய ஓர் வகையை நாம் தேடிக் கொள்ள வேண்டியது இன்றியமை யாதது எனவே கூறுகிறேன். ஓர் காரியத்தைக் குற்றம் குறைபாடுகளின்றி நிறை வேற்றிக் கொடுக்க முனையும் போது அதை துரிதப்படுத்தும் கலையையும் கூடவே கற்றுக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் தான் சிகப்பு நாடாவின் பெயரில் பொது மக்களுக்குள்ள அருவருப்பு நீங்கும். அரசியல் இயந்திரத்தை ஓட்டிச் செல்வதற் கெனவே தோன்றியிருக்கும் சிகப்பு நாடாவும் செவ்வனே வேலை செய்யவும் இயலும்.

கிளி தூது "ஸுபா"

வாழ்க்கைப் பாதையில்

எஸ். ஆர். ராஜம்மா

"நீ என்னிடம் உண்மையான அன்பும், மதிப்பும் வைத்திருக்கிறது உண்மையானால் என் மனதை சந்துஷ்டி அடையச் செய்யும் நோக்கம் உனக்குண்டானால் சீக்கிரமே நீ கலியாணம் செய்து கொள்ளவேண்டும்." பிரபாவதியின் கடிதத்தி லுள்ள இந்த வரிகளைத் திரும்பத் திரும்பப் படித்த சூரிநாதன் மெள்ள வெறுப்புடன் சிரித்துக்கொண்டான்.

"ஏண்டாப்பா சூரி, உன் அத்தையின் வீட்டுக்குப் போய் கொஞ்ச நாட்கள் இருந்துவிட்டு வாயேன். உன்னைப் பார்க்க ரொம்ப ஆவலாக இருக்கிறதாம் அத்தைக்கு," என்று கூறிக்கொண்டே சூரியின் அறைக்குள் வந்தாள் அவன் தாயார் மீனா.

"அம்மா நீ எங்கே போகச் சொன்னாலும் சரி. நான் போகிறேன்," என்று ஆத்திரத்துடன் பேசினான் சூரிநாதன்.

* * *

தாய் தந்தையருக்கு ஒரே பிள்ளையாகச் செல்லமாக வளர்ந்தவன் சூரிநாதன். அவனுக்கு எந்த விஷயத்திலும் குறைவு வைத்ததில்லை அவர்கள். அதனால்தானோ என்னவோ இப்பொழுது வாழ்க்கையிலேயே குறைவு ஏற்பட்டிருந்தது அவனுக்கு. சென்னையில் காலேஜில் படித்துக் கொண்டிருந்தபோது அவனுடன் படித்தவள்தான் பிரபாவதி. மிகுந்த அழகி. அவளை மனப்பூர்வமாக நேசித்தான் சூரிநாதன். தன்னுள்ளத்தையே அவளிடம் பறி

கொடுத்தான். பிரபாவதி இல்லாவிட்டால்தான் வாழ்க்கைப் பாதையில் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது என்னும்படி இருந்தது அவன் மனோநிலை.

பிரபாவதியின் குடும்பம் சாதாரணக் குடும்பம்தான். சூரிநாதனைப்போன்ற பணம் பெருத்த வாலிபர்களை கனவிலும் நினைக்கத் தகுந்தவள் அல்ல அவள். தூர பந்து ஒருவருடைய பண உதவி கொண்டு காலேஜில் படித்துக் கொண்டிருந்தாள். தான் படித்து முன்னுக்கு வந்து தன்னையும் தன் வயதான தாயாரையும் காப்பாற்றிக் கொள்ள எங்காவது உத்தியோகம் பார்க்க வேண்டுமென்பதே அவள் அவா. சூரிநாதன்மேல் அவள் காதல் கொள்ளவில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் அந்தக் காதல் கைகூடவில்லையானால் அவள் கணக்கற்ற—எல்லையற்ற துன்பத்தில் அமிழ்ந்துவிடுவாள் என்று சொல்லவும் முடியாது.

எம்.ஏ., பரீட்சையை முடித்துக்கொண்டு தன் பெற்றோர்கள் இருப்பிடம் வந்த சூரிநாதன் தன் விருப்பத்தை அவர்களிடம் தெரிவித்தான். தன் பிள்ளையின் மனதை நோகச் செய்யாத அவர்களும் அந்தக் கலியாணத்தை நடத்த சம்மதித்தனர். பழங்காலத்துப் பெண்மணியான மீனுவுக்கு இந்தக் கலியாணம் பூரண திருப்தி அளிக்கவில்லைதான். படித்த பெண்ணான பிரபாவதி மிகவும் டாம்பீகம் உள்ளவளாக இருப்பாள். தன்னை லக்ஷ்யம் செய்வாளோ மாட்டாளோ என்பதுதான் அவள் எண்ணம். இந்த நினைப்பினால் சூரியின் உள்ளத்தை புண்படச் செய்யக்கூடாது என்று எண்ணிக் கலியாணத்தைத் தீர்மானித்தாள்.

எல்லோர் மனமும் ஒன்றுபட்டாலும், விதி என்று ஒன்றிருக்கிறதல்லவா ? அந்த விதி இந்தக் கலியாண விஷயத்திற்கு சம்மதப் படவில்லை போலும். இல்லாவிட்டால் பிரபாவதியின் தாய் யௌவன வயதில் கெட்ட நடவடிக்கை உள்ளவளென்று சூரிநாதனின் பெற்றோர்களுக்குத் தெரிவானேன்? இந்தவிஷயம் பொய்யோ மெய்யோ? எப்படியானால் என்ன, சூரிநாதனின் தந்தை இந்த விஷயத்துக்காகக் கலியாணத்தை நிறுத்தி விட்டார்.

பிரபாவதி தனக்குக் கிடைக்காமல் போகவே சூரிநாதன் பெரிய ஏமாற்றமடைந்தான். தன் பெற்றோர்களுக்குத் தெரியாமல் பிரபாவதியுடன் எங்கேயாவது போய் விடுவது என்று தீர்மானம் செய்தான். தன் மன

திலுள்ளதை பிரபாவதியிடம் தெரிவித்தபோது, "உண்மையான காதல் கொண்டு கள்ளத்தனமாக வாழ்க்கை நடத்த என் மனம் இசையாது. அல்லாமலும் தங்கள் பெற்ருேர்கள் என்னை தங்களுக்கு மணம் செய்விக்க விரும்பவில்லை. அவர்கள் விருப்பத்துக்கு மாருக நீங்கள் நடந்தால் அவர்கள் மனம் எவ்விதம் புண்படும்? என் தாயின் மனதை நான் நன்ருய் அறிவேன். அவள் சொல்லுக்கு நேர்மாருக நான் நடந்தால் அவள் மனத்துயர் எப்படிப்பட்டது என்பது எனக்குத் தெரியும். அது போலத்தானே உங்கள் தாய் தந்தையரும். என்னுல் அவர்கள் துன்பம் அடையும்படி நடந்துகொள்ள மாட்டேன்" என்று திடமாகக் கூறி விட்டாள் பிரபாவதி.

பிரபாவதியின் இந்த எதிர்பாராத பதில் சூரிநாதனை திக்பிரமை அடையச் செய்தது. கொஞ்ச நஞ்சம் இருந்த அவன் நம்பிக்கையும் சிதறியது. வாழ்க்கை வேம்பென மாறியது. நிலையற்ற தீராத துக்கத்தில் மூழ்கினுன். சூரிநாதனுக்குச் சித்தபிரமை ஏற்படாதிருந்தது அதிசயமே.

காலம் தன் கடமையைச் செய்துகொண்டே இருந்தது. பிரபாவதி ஒரு இளைஞனை கணவனுக அடைந்து வட தேசத்தில் எங்கேயோ இருந்தாள். அவர்களுக்குள் அடிக்கடி கடிதப் போக்குவரத்து நடந்து வந்தது. சூரிநாதன் கலியாணம் செய்துகொள்ளவில்லை. வாழ்க்கையில் வெறுப்புற்று இருக்கிருன் என்பதை அறிந்தே பிரபாவதி அவனை மணம் செய்துகொள்ளும்படி

வற்புறுத்தி இருந்தாள் கடிதத்தில்.

* * *

இவ்வளவு நாட்களாகச் சூரிநாதனுக்கு கலியாணம் செய்துவிட அவன் பெற்றோர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் வியர்த்தமாயின. தன்னை மனைவி என்ற பந்தத்தில் பிணைத்துக் கொள்ள மறுத்து விட்டான் அவன். சூரியின் மனம் இப்படித் திரும்பும் என்றறியாத அவன் பெற்றோர்கள் அவனுடைய பிடிவாதத்தைக் கண்டு மனம் வெதும்பிப் போயினர்.

சூரிநாதன் சிறு வயதிலிருந்தே கிராமியக் காட்சிகளில் தன் மனதைப் பறிகொடுத்தவன். பள்ளிக்கூட கோடை விடுமுறைகள் முழுதும் கிராமத்தில்தான் கழிப்பான். கிராமத்தில் அவனுடைய ஒன்றுவிட்ட அத்தை ஒருவள் இருந்தாள். சூரிநாதனைத் தவிர வேறு யாரும் அவளுடைய பந்துக்கள் என்று சொல்லும்படி கிடையாது. அவனை இந்தத் தடவை கிராமத்துக்கு அனுப்பினால் மனம் சற்று நிம்மதி யடையும் என்று எண்ணியே மீனு அவனை கிராமத்துக்கு அனுப்ப உத்தேசித்தாள். சூரியும் அதற்கு இணங்கவே அவள் சற்று சந்தோஷமடைந்தாள்.

சூரிநாதன் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தான். நாட்டுப்புறத்து மக்களான அந்த குக்கிராமத்து வாசிகள் நாகரிகமும் எம்.ஏ.,பட்டதாரியுமான சூரிநாதனை எதோ ஒரு அபூர்வப்பொருளை பார்ப்பதுபோல் பார்த்தனர். கிராமத்தில் உள்ள இயற்கை காட்சிகளும் அத்தையின் அன்பான பேச்சும் அவன் மனதை அணுவளவேனும் மாற்றவில்லை.

அன்று காலையில் இடிந்த மனதுடன் கூடத்து விசுப்பலகையில் உட்கார்ந்திருந்தான். அவனுடைய அத்தை காமுவின் கூக்குரல் அவனைச் சிந்தனை உலகிலிருந்து திருப்பியது. காமு யாரையோ வசை மொழிகளால் வர்ஷித்துக் கொண்டிருந்தாள். சூரிநாதன் எழுந்து முற்றத்துக்குச் சென்றபொழுது, பதினைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண் இடுப்பில் குடத்துடன் நின்று கொண்டிருந்தாள். சூரிநாதனைக் கண்ட மாத்திரத்தில் தலை குனிந்து கொண்டு விடுவிடென்று போய்விட்டாள். "அத்தை இந்தப் பெண் யார்?" என்று கேட்டான் அவன்.

"யாரா! பஞ்சாபகேசனுடைய பெண்தாண்டா" என்றாள் காமு. கிராமத்துக்கு வந்தபின் இன்றுதான் வாய் திறந்து அவனாகப் பேசினான். இதைக் கண்ட காமுவின்

முகத்தில் ஆச்சரியமும் சந்தோஷமும் ஒருங்கே கலந்தன.

"இத்தனை நாழி இந்தப் பெண்ணிடம்தான் சண்டை போட்டுக் கொண்டிருந்தாயோ?" என்றான் சூரிநாதன். "சண்டை போட்டுக்கொண்டிருந்தேனா? இந்தப் பெண்ணை என்ன செய்தால்தான் ஆகாது. குளித்துவிட்டு சுத்தமாக பூஜைக்காக ஜலம் கொண்டுவந்து வைத்திருந்தேன். அந்த ஜலத்தைத் தொட்டு தீட்டாக்கிவிட்டாள். குதிரைமாதிரி வளர்ந்திருக்கிறதே இதெல்லாம் தெரியவேண்டாமா?" என்று உரத்த குரலுடன் பேசவாரம்பித்தாள் காமு.

"என் அத்தை ஆசாரத்துடன் நீ வைத்த ஜலத்தை அந்தப் பெண் தொடக்கூடாதா?" என்று கேட்டு அவள் குரலைச் சற்று அடக்கினான் சூரிநாதன்.

"சூரி! பட்டணவாசியான உனக்கு இதெல்லாம் என்ன தெரியும்? பெரிதான பெண் சுத்தமாக உள்ளதை தொட்டால் தீட்டாகிவிடும்" என்றாள் காமு.

ஆச்சரியத்துடன் கண்களை அகல விழித்த சூரிநாதன், "தீட்டாகிவிடுமா? ஏன்?" என்றான்.

"ஏனா? அந்தப் பெண்ணுக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லையே. கலியாணமாகாமல் பெரிதான பெண்கள் எப்பொழுதுமே தீட்டுள்ளவர்கள். ஆசாரமான பொருளை இவள் தொடக்கூடாது. கலியாணமானால்தான் தொடலாம்."

"அந்தப் பெண்ணுக்கு கலியாணமாகவில்லையா?"

"இல்லையடாப்பா இல்லை. கலியாண செய்யப் பணம் வேண்டாமா? சாப்பாட்டிற்கே திண்டாட்டமாக இருக்கும்போது கலியாணச் செலவுக்கான பணத்துக்கு எங்கே போவான் பஞ்சாபகேசன்?"

"இந்தப் பெண் உனக்கு வேலையில் ஒத்தாசை செய்கிறாப்போல் இருக்கிறதே?"

"இளைய தாயாரிடம் ரொம்பவும் கொடுமைப்படுகிறது பாவம். ஏதோ என் கைக்கு உதவியாக வேலை செய்யும். வயிறு நிறையச் சாதம் போடுவேன். அதற்காகப் பூஜைக்குள்ளதை அவள் தொடவிடுவேனா?"

அதற்கு மேல் தன் அத்தையிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டு நிற்கவில்லை சூரி. ஒரு பெருமூச்சுடன் விசுப்பலகையில் போய் உட்கார்ந்த அவன் மனம் சிந்திக்கத்

தொடங்கியது. பிரபாவதியின் மணம் செய்துகொள் என்ற கடிதம், தன் தாய் தந்தை அத்தை முதலானேரின் கலியாணம் செய்து கொள் என்ற வற்புறுத்தல், தன் அத்தையின் வாயால் சொல்லம்புகளை வாங்கிக் கொண்டு சென்ற அந்த பெண்ணின் உருவம், பணமில்லை என்ற காரணத்தால் அவளுக்கு கலியாணமாகாமல் இருப்பது, பெரிதானவள் என்பதற்காக அவளை ஊரார் நடத்தும் கொடுமையும், சிற்றன்னையிடம் அவள் படும் கஷ்டம்—இதை எல்லாம் சிந்தித்த அவன் உள்ளம் வெகுவாக குழம்பியது. அவன் நினைத்தால் அந்தப் பெண்ணை அவள் துன்பத்திலிருந்து நீக்கலாம். பிரபாவதியையும் தன் பெற்றேரையும் திருப்தி செய்யலாம். ஆனால் அவன் வாழ்வு சந்தோஷமாகிவிடுமா? அவன் மனம் திருப்தி அடைந்துவிடுமா?

சூரி தீவிரமாகச் சிந்தித்தான். ஆம்—பிரபாவதி தன் வாழ்க்கைத் துணைவியாக எப்பொழுது வரவில்லையோ, அப்பொழுதிலிருந்தே தன் வாழ்க்கைப் பாதை முட்கள் நிறைந்து சப்பாத்தி புதர்கள் வளர்ந்ததாகி விட்டதே இனி அதில் என்ன சுகம் இருக்கப் போகிறது? முக்கியமாகப் பிரபாவதியை திருப்தி செய்யவேதான் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்தான் அவன்.

"ஏ! சூரிநாதா! உன் புத்தியை நிலைநிறுத்தி சிறிது சிந்தித்துப் பார். பிரபாவதியை நீ காதலித்தாய். அவள் உனக்குக் கிடைக்கவில்லை. இனிமேல் உனக்கு கிடைக்கவும் மாட்டாள். இன்னெருவாலிபனுடன் சந்தோஷமாய் இருக்கிருள் அவள். அவளை நினைத்து உன்வாழ்வை பாழாக்கிக் கொள்ளாதே. எட்டாத பொருளுக்கு மட்டில்லா ஆசை வைப்பது கஷ்டமாகவல்லவோ முடியும்."

சூரி சிறிது யோஜனை செய்திருந்தால் இந்த பதில்தான் கிடைத்திருக்கும். அவன் மனம் இதைத்தான் அவனுக்கு அறிவிறுத்தி இருக்கும். ஆனல் பிரபாவதியின் மீது கணக்கற்ற காதல் கொண்டிருந்த சூரிநாதன் இதையெல்லாம் நினைக்கவில்லையே. பிரபாவதியின் அழகிய உருவம் அவன் மனதில் பதிந்து இதை எல்லாம் அமுக்கிவிட்டதா?

"சூரி நான் கூப்பிடுவது கூட காதில் விழாமல் என்ன யோசனை செய்கிருய்?" என்று கேட்டவண்ணம் காமு அவன் முன் வந்து நின்ருள். "ஆமாம் அத்தை யோசனைதான் செய்து கொண்டிருந்தேன். கொஞ்சு

முன் வந்தாளே அந்தப் பெண்ணை எனக்குக் கலியாணம் செய்துகொடுக்க சம்மதிப்பார்களா அவர்கள் வீட்டார்கள்?" என்ருன் சூரி. காமு பிரமையுடன் அவனை வெறித்துப் பார்த்துவிட்டு, "உனக்கு இஷ்டமானல் நான் போய் அவர்களிடம் இதைப் பற்றி கேட்கிறேன்" என்ருள். "எனக்கு சம்மதம் தான் அத்தை" என்று கூறிய சூரிநாதன் அங்கிருந்து எழுந்து சென்ருன்.

மறுநாள் சாயங்காலம் காமு அவனிடம் வந்து "சூரி அவர்கள் இந்த கலியாண விஷயத்தில் மிகவும் சந்தோஷமாக இருக்கிருர்கள். இப்பொழுது நீ போய் பெண் பார்த்துவிட்டுவா," என்ருள். "நான்தான் பார்த்தாயிற்றே" என்ருன் ஆத்திரத்தோடு. அவள், "இந்த நாட்டுப்புறத்தில் இப்படி எல்லாம் நடந்து கொள்ளக் கூடாதப்பா. ஊரொப்பவாவது நீ போய் பெண்ணைப் பார்த்துவிட்டுவா. உன்கூட பக்கத்துவீட்டு சர்மாவையும் அனுப்புகிறேன். நீ வருவதாக அவர்களிடம் சொல்லி விட்டு வந்திருக்கிறேன். எனக்காக வேண்டியாவது நீ செய்யவேண்டும். உம் புறப்படு" என்ருள் காமு வினயமாக.

பஞ்சாபகேசன் சூரியையும் சர்மாவையும் அதிக மரியாதையுடன் வரவேற்ருர். கூடத்தின் மத்தியில் விரிக்கப் பட்டிருந்த பாயில் அவன் அமர்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம், "இவர்களை வந்து நமஸ்காரம் பண்ணம்மா" என்ருர் சமயலறையைப் பார்த்துக் கொண்டே பஞ்சாபகேசன். அடுத்த நிமிஷம் ஒரு பெண் சூரிநாதனையும் சர்மாவையும் நமஸ்காரம் செய்துவிட்டு நின்ருள்.

நிரம்ப அழகி என்ருே, மகா அவலக்ஷணமென்ருே சொல்ல முடியாது அவளை. அங்கு மிங்குமாக சாயம் போய் வெளுப்பும் சிவப்புமாகத் தெரிந்த சாதாரணப் புடவையொன்றை கணுக்கால் தெரியும்படி கட்டியிருந்தாள். உடம்பைத் தொடாமல் விறைத்துக்கொண்டு நின்றது தலைப்பின்னல். கண்களில் மை தீட்டி காலணு அளவு சாந்துப் பொட்டும் வைத்திருந்தாள். கைகளில் இரண்டு கருவளையல்களைத் தவிர வேறு ஒரு ஆபரணமுமில்லை.

பஞ்சாபகேசன் சூரியின் அருகில் வந்து, "நீங்கள் படித்தவர்கள். நாகரீகம் தெரிந்தவர்கள். கலியாணப் பெண்ணிடமே பேசி விஷயத்தை தெரிந்து கொண்டு தான் மணம் செய்துகொள்கிருர்கள் படித்த பிள்ளைகள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் ஏதாவது பேச

விரும்பினால் பேசலாம்'' என்ருர். சூரி கூடத்தைச் சுற்றி தன் கண்களால் பார்த்த போது கிராமத்திலுள்ள ஸ்திரீகளும் சிறுவர்களும் வாசற்படியிலும் ஜன்னலிலும் அவனை விழிகளால் விழுங்கி விடுவதுபோல் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

"உன் பெயரென்ன?" என்ருன் சூரி.

"சுப்புக்குட்டி" என்ருள். அவள் குரல் நடுங்கியது.

"சரி, உனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா?"

"தெரியாது."

"ரொம்ப நல்லதுதான். நீ என்னைக் கலியாணம் செய்து கொள்ள இஷ்டப்படுகிருயா?"

சுப்புக்குட்டி ஒன்றும் பேசாமல் தலையை எவ்வளவு தாழ்த்தமுடியுமோ அவ்வளவு தாழ்த்திக் கொண்டாள். இந்தக் கேள்விக்கு அவள் என்ன பதில் சொல்வாள் பாவம். வெட்கம் ஒரு பக்கமிருந்த போதிலும் பயத்தினலேயே அவள் உடல் நடுங்கியது. படித்த பிள்ளை வருகிருன். அவன் என்ன கேட்டாலும் அதற்கு பதில் சொல்லவேண்டும் என்று அவளுடைய சிற்றன்னை கடுமையான கட்டளை விதித்திருந்தாள். சூரியின் அந்த கேள்விக்கு பதில் சொல்லாமல் இருக்கவே தன் சிறிய தாயார் தன்னை என்ன பாடுபடுத்தி வைப்பாள் என்ற நினைவேதான் அவளை நடுங்கும்படி செய்தது.

அந்த மாதமே சுப்புக்குட்டிக்கும் சூரிக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தது என்று சொல்லவும் வேண்டுமா? சூரிநாதன் கலியாணம் செய்து கொண்டு விட்டான். இனி அவன் வெறுப்புற்றிருக்கும் வாழ்க்கையிலிருந்து திரும்பி விடுவான் என மீனு மகிழ்ச்சி அடைந்தாள். ஏழைக் குடும்பத்து பெண்ணுனல் என்ன. தன்னைப் போலவே பழங்காலத்து நடை உடை பாவனையான சுப்புக் குட்டியைக் கண்டு உள்ளம் பூரித்துப் போனள் மீனு.

* * *

சுப்புக்குட்டி புக்ககம் வந்து ஒன்று இரண்டு என்று மாதங்கள் சென்று கொண்டிருந்தன. சூரிநாதனுடைய மனம் சிறிதளவுகூட மாறுதல் அடையவில்லை. மனச் சோர்வின் காரணமாக அவன் உடல் நாளுக்கு நாள் மெலிந்து வந்தது. சுப்புக் குட்டியின் கால் மெட்டி (காலாழி) சப்தம், பிரபாவதியின் பூட்ஸ் சப்தத்தை போல் சூரியன் மனதை மகிழ்க்கவில்லை. பிரபாவதி இருக்க

வேண்டிய ஸ்தானத்தில் சுப்புக்குட்டி இருக்கிறுள் என்று எண்ணியபோது அவள் மீது ஆத்திரம் தான் வந்தது அவனுக்கு அவளை ஏறெடுத்துக் கூட பார்ப்பதில்லை சூரி. தன் பெற்ருேரையும் பிரபாவதியையும் திருப்திப் படுத்தத்தானே அவன் மணம் செய்து கொண்டான். அவர்களே திருப்தி அடையட்டும் என்று எண்ணினுன் அவன்.

சுப்புக்குட்டிக்குத் தன் கணவன் வீடு மிகவும் சந்தோஷத்தை அளித்தது. வைர நகைகளும் தங்க நகைகளும் வித விதமான பட்டுப் புடைவைகளும் வேலைகளை எல்லாம் செய்ய பணியாட்களும் இருக்கும்போது அவளுக் கென்ன குறைவு. அப்படித்தான் நினைத்தாள் சுப்புக்குட்டி. அவன் இல்லாத சமயங்களில் அவனறையை சுத்தம் செய்வாள். அடுக்கடுக்காக பீரோக்களில் இருக்கும் புஸ்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு அதிலுள்ள சித்திரங்களைப் பார்ப்பாள். தன் கணவன் முன்போக அந்த பேதைப் பெண் மிதவும் பயந்தாள். அவளுடைய நிழலைக் கண்டால் கூட அவன் முகம் இப்படி ஏன் கடுகடுப் படைகிறது என்பதின் விஷயமறியாத அவள் தன் சிறிய தாய்க்கு அஞ்சுவதைப் போல தன் கணவனைக் கண்டு அஞ்சினுள்.

அடிக்கடி பிரபாவதியின் கடிதம் வந்து கொண்டிருந்தது. சாப்பாடும் தூக்கமும் இல்லை. சூரிக்கு எல்லோர் மேலும் காரணமில்லாமல் எரிந்து விழுந்தான். இரவு வேளைகளில் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டே சிந்தனையிலாழ்ந்து பெரு மூச்சு விடுவான். மனம் சஞ்சலமடையும். தன் அறையில் தான் படுக்கும் கட்டிலுக்கு சிறிது தூரத்தில் சுவர் ஓரமாகப் படுத்துறங்கும் சாந்தமே உருவான சுப்புக் குட்டியின் முகத்தை ஒரு முறையாகிலும் அவன் பார்ப்பானுனல் அவன் மனமும் சாந்தியடைந்திருக்குமோ என்னமோ?

மீனு சூரிநாதனின் நிலையைக்கண்டு கலங்கினுள். சூரியின் மனதை ஒரு நாட்டுப்புறத்துப் பெண்ணுக்கு மாற்ற சக்தியில்லை. ஒரு நாகரீக பெண்ணுயிருந்தால் அந்தக் காரியம் நடந்திருக்கலாமோ? என்று எண்ணியபோது சுப்புக் குட்டியை அவனுக்கு மணம் முடித்து வைத்தது பைத்தியக்காரத்தனம் என நினைத்து தன்னையே நொந்து கொண்டாள் மீனு. இத்தனை நாட்களாக தன் பிள்ளையும்

மாட்டுப் பெண்ணும் ஒரு நாள் கூட பேசிக் கொண்டதை அவள் பார்த்ததில்லை.

பஞ்சாபகேசன் வந்து சுப்புக்குட்டியை அழைத்துப் போய் சில நாட்கள் தன்னுடைய வீட்டில் வைத்திருந்து விட்டு அழைத்து வருவதாகக் கூறி சுப்புக் குட்டியுடன் சென்றார். அவருடைய சிறிய தாய் முன் போல் அவளிடம் கொடுமையுடன் நடந்து கொள்வதில்லை. பணமும் படிப்பும் உள்ள கணவன் கிடைத்து விட்டானல்லவா அவளுக்கு. அதனால் மிகுந்த அன்பாகவே நடத்தினாள் அவளை.

நாட்கள் சென்று மாதங்களாயின. சுப்புக் குட்டியைப் பற்றி ஒரு பேச்சுக்கூட தன் பிள்ளை பேசாதது மீனாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏதோ சிந்தையிலாழ்ந்திருந்த சூரிநாதன் தன் தாயின் குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தான். மீனா அவனருகில் நின்று கொண்டு "சூரி நீ இப்படி எப்பொழுது பார்த்தாலும் பித்துப் பிடித்தவனைப் போல் இருப்பதைப் பார்க்க எனக்கு சகிக்கவில்லை" என்றாள் நாத்தழுதழுக்க. அவள் தாயுள்ளம் சகிக்க முடியாத வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தது. சூரிநாதன் தன் தாயின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். "சுப்புக் குட்டியால் உனக்கு ஒருவித சுகமும் இல்லை அது எனக்குத் தெரியும். இன்னொரு நல்ல பெண்ணைப் பார்த்துஉனக்கு கலியாணம் செய்யலாமென்றிருக்கிறேன். சூரி என் பேச்சை தட்டாதே அப்பா" என்றாள்.

"அம்மா நீ எனக்கு எத்தனை கலியாணம் பண்ணிவைத்தாலும் சரி. நான் பண்ணிக் கொள்ளத் தயார்" என்று உரத்துச் சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றான் அதற்கு பின் தாயும் பிள்ளையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளாமலிருந்தனர். ஆனால் இந்த நிலை அதிகநாள் நீடிக்கவில்லை. பத்து பன்னிரண்டு நாட்களுக்கெல்லாம் கடும் ஜுரத்துடன் படுத்த படுக்கையானான் சூரி. அவனருகில் உட்கார்ந்து கவலையுடன் கண்ணீர்விட ஆரம்பித்தாள் மீனா.

இந்த விஷயத்தை அறிந்த சுப்புக்குட்டி மனம் பதறிப் போய் கணவன் வீடுவந்தாள். அவளுக்கு முதலில் தன் கணவனருகில் போக பயமாக இருந்தது. ஆனால் அவள் சீக்கிரமே தன் கடமையை அறிந்து அவனுடைய அலக்ஷியத்தை பொருட்படுத்தாமல் அவனுக்கு சிசுருஷைகள் செய்யவாரம்பித்தாள். சூரிநாதன் அதை மறுக்கவோ

வெறுக்கவோ இல்லை. தான் இனி உயிர் பிழைக்கப்போவ தில்லை என்று எண்ணினான் அவன். அவனென்ன, எல் லோரும் அப்படித்தான் நினைத்தனர். அவன் நிலை அவ்வளவு மோசமாக இருந் தது.

சூரியின் விருப்பத்தின் பேரில் பிரபாவதிக்கு தந்தி அடிக்கப்பட்டது. தன் நிலை யைக் கேட்டதும் கதறிக் கொண்டு ஓடோடியும் வரு வாள் பிரபாவதி. தன் அந் திம காலத்தில் அவனைப் பார்க்க வேண்டுமென்பது அவனுடைய அவா. ஒவ் வொரு விநாடியும் அவளை எதிர்பார்த்தான் அவன். ஆனால் என்ன ஏமாற்றம்.

* * *

மனிதன் ஒவ்வொரு விஷ யங்களில் ஏமாற்றமடையும் போது அவன் மனமும் ஒவ் வொரு மாதிரித் திரும்புகிறது. சூரிநாதன் முதலில் தான் வாழ்க்கையில் ஏமாற்ற மடைந்ததாக எண்ணினான். இப்பொழுதோ, பிரபாவதி தன்னைப் பார்க்க ஓடோடியும் வருவாள் என்பதும் தான் இனி உயிர் பிழைத்தெழுந்தி ருக்கப் போவதில்லை என்ப தும், அவனை ஏமாற்றியது. சுப்புக்குட்டியின் இரவு பகல் என்ற வித்தியாசமில்லாமல் இடைவிடாத பணிவிடையின் பயன்தானோ? அல்லது விதி யின் விளையாட்டோ சூரிநாத னின் வியாதி குணமாகி உடம் பும் தேறிக்கொண்டு வந்தது.

சூரியின் இருளடைந்த மனம் கொஞ்சம் கொஞ்ச மாக பிரகாசமடைந்தது. பிர பாவதிக்கும் தனக்கும் என்ன சம்பந்தம்? தன் உடல்நலம் குன்றி இருப்பதற்காக தன் குடும்பத்தை விட்டு விட்டு வந்துவிட தனக்கும் அவளுக் கும் என்ன பாத்தியதை? அவள் இன்னொருவனுடைய பொருளாகிவிட்டபின் தான் அவளை நினைத்தது தவறு. இந்த எண்ணம் வந்த அதே தருணம் சதா காலமும் தன் உயிர்பிச்சைக்காகக் கடவுளை வேண்டிய சுப்புக்குட்டியின் மேல் இரக்கமும் உண்டாகி யது அவனுக்கு.

பிரபாவதி எப்படி வரு வாள் பாவம்? தான் இல்லா விட்டால் தன் கணவனுக்கு சரியானபடி சம்ரக்ஷணை இல் லாமல் போய்விடும். தன்னு டைய இளம் குழந்தையுடன் அவ்வளவு தூரம் ரயில் பிர யாணம் செய்தால் அதன் உடல் நலம் குன்றிவிடாதா? இப்படியிருக்கும்போது அவள் எப்படி வருவாள்?

* * *

இரவு மணி பன்னிரண்டு இருக்கும். வெண்ணிலவு காய்ந்து கொண்டிருந்தது. தூக்கம் கலைந்த சூரிநாதன் அறைக்கதவைத் திறந்து

(33-ம் பக்கம் பார்க்க)

சோமுவின் சோகம்

"ஸத்யதாமா"

நடுப்பகல். உச்சிவானில் உலவும் கதிரவனது கிரணங்கள் கொடூரமாய் எரித்தன. வீதியில் ஓடித் திரியும் நாய்களும் கழுதைகளும் கூட வெய்யிலின் கொடுமைக்கு அஞ்சி தெரு ஓரத்திலுள்ள நிழலில் ஒண்டிக் கொண்டிருந்தன. வீதியில் ஜனக்கூட்டம் குறைந்து அமைதி நிலவியிருந்தது. தெருக்கோடியிலுள்ள வேப்ப மரத்தில் குளிர்ந்த நிழலில் அமர்ந்திருந்த காகம் மட்டும் அடிக்கடிக் கத்திக் கொண்டேயிருந்தது.

இடைக்கால ஓய்வு நேரம் முடிந்து விட்டதை அறிவிக்கும் சங்கத் தொனி கன்னிகா பரமேசுவரி மில்லிலிருந்து மூண்டெழுந்தது. சுப்பன் ஒரு நீண்ட கொட்டாவி விட்டுக் கொண்டே எழுந்து உடம்பை வளைத்து சோம்பல் முறித்துக் கொண்டான். துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வீதியில் வந்து நின்றான்.

வீதித் திண்ணையில் நான்கைந்து சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சோமு—சுப்பனின் ஒரே குழந்தை—நான்கு வயது நிரம்பிய பாலகன் ஓடி வந்து சுப்பனின் கால்களைக் கட்டிக் கொண்டான். "அப்பா! நாளைக்குப் பொங்கல் இல்லே, எல்லோர் வீட்டிலேயும் புது வேட்டியும் புதுச் சொக்காவும் வாங்கியிருக்காங்க! எனக்கும் புது வேட்டியும் புதுச் சொக்காயும் வாங்கித்தரயா?'' என்று கொஞ்சிக் கொஞ்சி மொழிந்தான்.

சிறுவனின் மழலை மொழிகள் சுப்பனின் செவிகளில்

தேனெனப் பாய்ந்தன. அன்பு நிறைந்த உள்ளத்துடன் அவன் குழந்தையை வாரி எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு "ஆகட்டுண்டா, என் கண்ணே! சாயங்காலம் சம்பளப் பணம் கொடுப்பாங்க, கட்டாயம் புது வேட்டியும் புதுச் சட்டையும் வாங்கி வருகிறேன்" என்று கூறி சிறுவனை உச்சி முகந்து கீழே விடுத்தான்.

குழந்தை சோமுவின் வதனத்தில் கன்னங்குழிய தோன்றிய புன்னகை, உள்ளத்தில் ததும்பிய ஆனந்தப் பெருக்கை வெளிப்படுத்தியது. சுப்பனும் சந்தோஷத்துடன் மில்லை நோக்கி நடந்தான்.

* * *

சுப்பன் சுமார் முப்பது வயதுள்ள கட்டிளம் காளைப் பருவத்தினன். அழகிய தோற்றமும் திட காத்திரமும் பெற்றவன். அவன் செலுத்தி வந்த வாழ்க்கை வண்டியில் அதிகப் பாரமில்லை. இளம் மனைவியும் அழகிய பாலகனுமே அவ்வண்டியில் பிரயாணம் செய்பவர்கள். தன் மனைவியிடமும் குழந்தையிடமும் வற்றாத அன்பு கொண்டிருந்தான் சுப்பன். அவ்விருவர்களையும் அவன் தன் இரு கண்களாகவே கருதி வந்தான் எனில் அதில் வியப்பில்லை.

சுப்பன் கன்னிகாபரமேசுவரி ஆலையில் ஒரு மேஸ்திரி. வாரம் அவனுக்கு ஐந்து ரூபாய்ச் சம்பளம். எளிய வாழ்க்கை நடத்தி வந்த அவனுக்கு அந்த ஊதியம் தாராளமாகவே யிருந்தது. அவன் குடும்ப வாழ்க்கை ஆனந்தமாகவே நடந்து வந்தது. ஆனாலும் அந்த ஆனந்தத்திற்கிடையிலும் ஒரே ஒரு குறை மட்டும் இல்லாமலில்லை. நல்ல மரத்திலும் காணப்படும் ஒரே ஒரு புல்லுருவியைப் போல.

சுப்பன் நல்ல குணமுள்ளவன்தான். வேலைக்குச் சோம்பல் படமட்டான். பொய் பேசமாட்டான். பிறரை மோசம் செய்யக் கனவிலும் கருதியவனல்லன். ஆனாலும் இத்தனை நல்ல குணங்களுக்கிடையிலும் அவனிடம் அந்த ஒரு தீய பழக்கமும் இருக்கத்தான் செய்தது. ரோஜாச் செடியிலிருக்கும் முள்ளே போல ஆமாம், குற்றங்குறைகளே யற்றவர் யார்தானிருக்கிறார்கள்? அந்த தண்மதியிலும் கூட ஒரு களங்கம் இருக்கத்தான் செய்கிறதல்லவா?

சுப்பனை ஏற்படுத்திக் கொண்ட பழக்கமல்ல் அதுவும். எல்லாம் சகவாசதோஷத்தால் நேர்ந்த தீமையே. குடிகார வேலப்பன், அவன் கூட வேலை செய்யும் ஒரு மேஸ்திரி.

அவனது சகவாசம்தான் தான் சுப்பனுக்கும் அந்த பழக்கத்தை யூட்டியது. மனிதன் நல்லவனுவதும் தீய வனுவதும் சகவாசத்தால் தானேயல்லவா? பூவுடன் சேரும் நாரும் மணம் பெறு மெனில் ஒரு துளி விஷத் துடன் கலக்கும் செம்புப் பாலும் விஷமாக மாறுவது இயற்கையே யன்ருே?

* * *

வானத்திரையில் வர்ண சித்திரங்கள் பல வரைந்து கொண்டிருந்த பரிதிக் கலை ஞன் மலை வாயில் மறையும் தருணம். மறு நாள் பொங்க லானதால் சாமான்களும் துணிமணிகளும் வாங்கச் செல்வோரும் வாங்கி வரு வோருமாகத் தெருவில் ஜனக் கூட்டமதிகமாயிருந்தது. சுப் பனும் வெகு விரைவாக சாலையோடு சென்று கொண் டிருந்தான். அவன் சட்டைப் பையில் அந்த வாரச் சம்பளம் பணம் கலீர் கலீர் என்று ஒலித்துக் கொண்டிருந்தது.

பாதை இரண்டாகப் பிரியு மிடம். ஒரு சாலை கடை வீதிக்குச் செல்வது. மற் ருென்று ஊருக்கு வெளியே கொண்டு செல்வது. அவ் விடத்திற்கு வந்ததும் ஏனே சுப்பனின் கால்கள் நின்றன. மனம் குழம்பியது. அவன் மனத்திரையில் புது சட்டைக் கும் புது வேஷ்டிக்குமாக ஆவலுடன் தந்தையின் வரவை எதிர்நோக்கி நிற்கும் குழந்தையின் முகம் ஒரு கணம் தோன்றி மறைந்தது. ஆனுல் அடுத்த கணம் அவன் மனதின் அடியிலிருந்து வேருெரு எண்ணமும் மெல் லத் தலை தூக்கியது. நாக்கில் ஜலம் ஊறியது. தயங்கி நின் ருன் சுப்பன்.

அதே சமயம் அவன் தோளில் யாரோ கை போட் டதை யுணர்ந்தான் அவன். திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த் தான். அங்கு நின்று கொண் டிருந்த அவன் கூட்டாளி வேலப்பன் கல கல வென்று சிரித்தான். மறு கணம் சுப் பனின் கால்கள் அவனை வேலப்பன் பின்னேடு ஊருக்கு வெளியே போகும் சாலையில் இழுத்துச் சென்று கொண்டிருந்தன.

* * *

இரவு எட்டு மணி. வானத் தில் கருமுகில்கள் படர்ந்து எங்கும் காரிருள் சூழ்ந்திருந் தது. வீதியில் ஆங்காங்கு மினுக் மினுக் என்று எரிந்து கொண்டிருந்த முனிஸிபல் விளக்குகள், ஏமாற்றம் நிறைந்த வாழ்க்கையிலும் சந் தோஷம் சிறிதனவே யென் னும் உலகியலை உணர்த்து வதே போல் காணப்பட்டன.

வீதிப் புறத் திண்ணையில் உட்காந்திருந்த சோமு வழி

மேல் விழி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் ஆவலும் ஏக்கமும் தாண்டவமாடின. வீதிக் கோடியில் விளக்கொளியில் யாராவது தென் பட்டால் அது தன் தந்தையே என எண்ணி ஆனந்தத்துடன் குதிப்பான். ஆனால் பாவம், ஆள் அருகில் வந்ததும் அவன் ஏமாற்றத்தைத்தான் எப்படி விவரிப்பது? அது வேறு யாராகவோ இருக்கும்.

"எம்மா! அப்பா இன்னும் வரவில்லே?" என்பான், தன் தாயின் மடியில் தலையைப் புதைத்துக்கொண்டு, ஆவல் நிறைந்த குரலில்.

"வந்திடும் கண்ணே! சட்டையெல்லாம் எடுத்துக் கொண்டுவர நேரமாகாதா?" என்று சமாதானம் செய்வாள் அவன் தாய், குழந்தையின் நெற்றியில் புரளும் உச்சி மயிரை ஒதுக்கிக் கொண்டே.

"எம்மா! அப்பா என்ன சட்டை தைச்சுண்டு வருவாரம்மா?"

"என் கண்ணுக்கு என்ன சட்டை வேணும்?"

"பச்சை சட்டைதான் அம்மா வேணும் எனக்கு. அதுதான் அழகா யிருக்கும்."

"அப்படீன்னா, அப்பாவும் பச்சை சட்டைதான் தைச்சுண்டு வருவாரு."

"எம்மா, அதிருக்கட்டும் பொங்கலுக்குப் பட்டாசு வாங்கு வாங்களா அம்மா?"

"பொங்கலுக்குப் பட்டாசு ஏது கண்ணு? தீபாவளிக்குத்தான் பட்டாசு, மத்தாப்பு எல்லாம்."

"அப்படின்னா பொங்கலுக்கு என்னம்மா செய்வார்கள்?"

"பொங்கலன்று காலையிலே குளித்து விட்டு புதுத் துணிகளை உடுத்திக் கொண்டு பொங்கல் செய்து சூரிய பகவானுக்குப் படைத்து விட்டு எல்லாருமா சாப்பிடுவாங்க."

"பொங்கல்னு சக்கரைப் பொங்கல்தானே யம்மா? அன்னைக்குப் பெருமா கோவில்லே கொடுத்தாங்களே, நிறைய முந்திரு பருப்பு எல்லாம் போட்டு. அது எனக்கு ரொம்ப பிடிக்கும்மா," என்று சொல்லிக் கொண்டே சோமு எழுந்து வீதிக் கோடியைக் கவனித்தான், யாரோ வருவது தெரிந்தது, "அம்மா, அம்மா, அதோ பாரு! அப்பா வந்துட்டாங்க" என்று சொல்லிக் கொண்டே ஆனந்தத்துடன் குதித்தான். அவளும் கவனித்தாள். அதே சமயம் பளிச்சென்று வானத்தில் தோன்றிய மின்னொளியில் ஆள் நன்றாகத் தெரிந்தது. ஆம், அது சுப்பன்தான்.

ஆனால் ஐயோ, ஏன் அவன் கண்கள் சிவந்து முகம் அவ்வளவு பயங்கரமாக இருக்கிறது?' கால்கள் ஏன் அப்படித் தள்ளாடுகின்றன? அவள் மனதில் பயம் தோன்றியது.

இரண்டொரு நிமிடங்களில் தள்ளாடிக் கொண்டே படிகளில் ஏறினன் சுப்பன். "அப்பா! சட்டையும் வேட்டியும் வாங்கிவந்துட்டாயா?" என்று கேட்டுக் கொண்டே ஓடிச் சென்று அவன் கால்களைக் கட்டிக் கொண்டான் குழந்தை சோமு.

மதுவால் மதிமயங்கியிருந்த சுப்பனின் செவிகளில் சோமுவின் சொற்கள் ஒன்றுமே விழவில்லை. மதுவின் வெறி புகுந்த உள்ளத்தில் மனைவியேது? குழவியேது? அன்பேது? பாச மேது? அவனது உள்ளம் தான் இப்போது இத்துன்ப உலகை மறந்து ஆனந்தம் மிக்க மானஸீக உலகில் உலவுகிறதே!

வழியை மறித்த குழந்தையைக் காலால் எட்டி ஒரு புறமாய் ஒதுக்கிவிட்டு உள்ளே சென்று விட்டான் சுப்பன். எதிர்பாராத இவ்வதிர்ச்சியால் குழந்தை தன் உள்ளத்தில் கட்டியிருந்த ஆனந்தக் கோட்டைகள் யாவும் ஒரு நொடியில் இடிந்து தூளாகின. அத்துடன் குழந்தையின் மனமும் சுக்கல் சுக்கலாக சிதறியது. துக்கம் தாங்கமாட்டாமல் அவன் கோவென கதறிக் கொண்டே ஓடித் தாயின் மடியில் தலையில் புதைத்து விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டான்.

சேயின் துன்பத்தைக் கண்டுத் தாயின் உள்ளமும் அனலில் இட்ட மெழுகென உருகியது. "அழாதே! என் கண்ணே! அழுது என் செய்வது? எல்லாம் நாம் செய்த பாவம். இல்லாட்டி உன் அப்பனுக்கு ஏன் இந்தக் கெட்ட பழக்கம் ஏற்படவேணடும்? மூடிய கடைகளும்தான் மீண்டும் திறக்கப்படவும் வேண்டுமா?" என்று பல பல கூறி கண்ணீர் வடித்தாள்.

தாயின் தேற்றுதலால் குழந்தையின் ஏக்கம் தணியவில்லை. அழுது அழுது கண்களும் முகமும் வீங்கின. தன்னையுமறியாமல் துயிலில் ஆழ்ந்தான் சோமு.

* * *

உலக மக்கள் உவந்து அளிக்கும் பொங்கல் காணிக்கையைப் பெற்றுக் கொள்ளப் போகும் பேரார்வத்துடனே போல் கதிரவன் கீழ்த்திசையில் தன் செங்கதிர்களை வீசிக் கொண்டு விரைந்து கிளம்பினன். அவனுக்கு நல்வரவு கூறுவதே போல் புள்ளினங்களும் இன்னிசைப் பாடிக் கொண்டே

தத்தம் கூடுகளை விட்டு வெளிப் போந்தன.

பெண்கள் துயிலெழுந்து தூய நீராடி, புத்தாடைகள் புனைந்து உதய சூரியனுக்குப் பொங்கல் சமைத்துக் கொண்டிருந்தனர். குழந்தைகளும் ஆடவர்களும் மகிழ்ச்சியுடன் "பொங்கலோ பொங்கல்" என்று கூவிக் கொண்டிருந்தனர்.

நித்திரை கலைந்தெழுந்த சோமு, கண்களைப் பிசைந்து கொண்டே வீதிப்புறம் வந்து பார்த்தான். எதிர் வீட்டு முற்றத்தில் அவன் விளையாட்டுத் தோழன் முருகன் புதுச் சட்டையும் வேட்டியும் அணிந்து தன் தாய் செய்யும் பொங்கலைப் பார்த்து நின்றிருந்தான். சோமுவுக்கு அவனைப் பார்த்ததும் முதல் நாள் நடந்த சம்பவங்கள் திரைப்படத்தில் வெளி வருவதே போன்று ஒன்றன் பின் ஒன்ருக ஞாபகம் வந்தன. அவன் கண்களினின்றும் கிளம்பி கன்னங்களில் சிதறி விழுந்த கண்ணீர்த் துளிகள் அந்தக் காலை இளம் வெயிலில் முத்துக்கள் போல் பிரகாசித்தன. மதுவின் மயக்கத்தால் மதியிழந்த சுப்பன் இவை ஒன்றையும் அறியா ஆழ்ந்த நித்திரையில் குறட்டை விட்டுக் கொண்டு கிடந்தான். திண்ணையின் ஒரு மூலையில், சோமுவின் கண்கள் தன் தகப்பனையும் எதிர் வீட்டு முருகனையும் ஒரு கணம் மாறி மாறிப் பார்த்தன. அவன் சிதறிய உள்ளத்திலிருந்து சீறிச் சென்றது ஒரு நெடு மூச்சு.

(27-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வராந்தாவுக்கு வந்தான். அங்கே கண்ட காட்சி அவன் மனதை உருக்கியது. சுப்புக் குட்டி வானத்திலே பவனி வரும் வெண்மதியை வெறித்துப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்திலே சோகத்தின் சாயல் படர்ந்திருந்தது—"ஆம் அவளுக்குக் காதல்மொழிகள் பேசத் தெரியாது. காதல் காவியங்களையோ கதைகளையோ படித்தறியாத பட்டிக்காட்டுப் பெண்தான். அதற்காக அவளுக்கு யௌவனத்தின் உணர்ச்சி இருக்கக் கூடாதா?" என்று சூரியின் மனம் சிந்தித்தது.

தன்மேல் யாரோ கை வைப்பதை உணர்ந்த சுப்புக் குட்டி திடுக்கிட்டு பார்த்தாள். "என் இரவில் இங்கே உட்கார்ந்திருக்கிருய்? வா படுத்துக்கொள்ளலாம்" என்று கூறிய வண்ணம் அவளை அணைத்து அழைத்துச் சென்ருன் சூரி. என்றுமே அனுபவித்தறியாத அந்த அன்பணைப்பில் மெய்மறந்து போனுள் அவள்.

சிதைந்த மனம்

என். நடராஜன்

நான் அந்த வீட்டிற்குக் குடி புகுந்து என்னமோ நான்கு நாட்கள்தான் சென்றிருந்தது. ஆனுல் என்னைப் பற்றியஇல்லாததும் பொல்லாததுமான அபிப்பிராயங்கள். வீட்டில் கால் வைத்ததிலிருந்து, ஆகாயத்தில் குமுறத் துடங்கிவிட்டது. அப் பிரதேசத்திற்கே புதிதாயிற்றே, அப்படியிருக்க அவ்வூர் வாசிகட்கு என்னைப் பற்றி ஒன்றும் தெரிய நியாயமில்லயே என்றெல்லாம் எண்ணலானேன். வெளியில் இறங்கி நடமாடத் துடங்கினுல் ஜனங்கள் பார்க்கும் அந்த நூதனமான பார்வை என்னை அப்படியே அங்கலாய்த்து விடும் சில சமயம்.

நாட்கள் என்னவோ ஓடிக் கொண்டுதான் இருந்தன; ஆனுல் அந்தப் பொல்லாத ஜனங்கள் மாத்திரம் என்னைப் பற்றி "தூஷணை" சொல்வதை நிறுத்திக் கொண்டதாகத் தெரியவில்லை. என் வயது வந்த வாலிபர் போலும் என்னைப்பற்றி அபவாதங்கள் பரப்பத் துடங்கிவிட்டார்கள். இதற்கெல்லாம் மர்மம் புரிந்து கொள்ள வழிதெரியாமல், அந்த நாளெல்லாம் திணறினேன்.

அதிகமாக ஆராய்ச்சிகளொன்றும் செய்யாமல் "அவர்கள் என்ன வேண்டுமானுலும் சொல்லட்டும். நான் என்றும் என் நிலையில் தான் இருக்கிறேன்; என் நடவடிக்கையில் எனக்குத் தப்பு இருப்பதாகத் தெரியவில்லை" என்று, நான் நித்ய விருத்திகளில் கவனம் செலுத்தலானேன்.

நாட்கள் பல ஓடி மறைந்

மறைந்தன. என் "நைட் ஷிப்டு"ம் ஆரம்பித்து விட்டது.

பகலில் வீட்டில் தூங்குவேன் — வீட்டில்தான் என்னைத் தவிர வேறு யாரும் இல்லையே!—சாயந்திரம் ஆறு மணி அடித்ததும் வீட்டைப் பூட்டிவிட்டு காரியலாத்திற்குப் புறப்படுவேன். ஆனால் அன்று ஏனோ மூன்று மணிவரையில் தூக்கம் வரவில்லை. அன்றைய பத்திரிகையில் "எடிட்டோரியல்" நான்தான் எழுதவேண்டும். எதைப் பற்றி எழுதுவதென்று தோன்றாமல் விழித்துக் கொண்டிருந்தேன். சுற்றிலும் அந்தகாரம் நிலவியதுபோல்தோன்றிற்று. மெல்ல எழுந்து ஜன்னல் பக்கம் சென்றேன். வானத்தை உற்று நோக்கிய வண்ணம்; ஒரு கார் மேகம் வெள்ளி மேகமொன்றை மறைத்தபடி மிதந்து கொண்டு சென்றது. சின்னஞ் சிறு பறவைகள் உயரத்தில் பறந்துபோய் மேகங்களுக்குப் பின்னால் மறைந்து விளையாடிக் கொண்டிருந்தன. முகிலைப் பிளந்த வண்ணம் ஒரு புறா பறந்து சென்றது. கீழ் வானத்தில், இரண்டு காகங்கள் ஒரு பருந்தைவிரட்டிக் கொண்டிருந்தன. பருந்து படும் பாடு பட்டது என் மனமும் அச்சமயம்.

"ம்மா! ம்மா!" என்ற ஒரு குழந்தையின் கொஞ்சலான குரல் காற்றில் மிதந்து வந்து என் கவனத்தைக் கவர்ந்தது. சப்தம் வந்த திசைப் பக்கம் திரும்பினேன் மெதுவாக. அப்படியே ஸ்தம்பித்து விட்டேன், என்னையுமறியாமல். ஒரு கன்னி— இல்லை கன்னிப் பிராயமுள்ள ஒரு ஸ்திரீ—என்னைக் கண்டவுடன் நாணி, தன் வதனத்தை ஜன்னல் சுவருக்குப் பின்னால் புதைத்துக் கொண்டாள். குழந்தையை இரு கரங்களில் பிடித்த வண்ணமாகக் குழந்தையை எனக்குக் காண்பிப்பது போல் தோன்றிற்று, அவளது அப்போதைய அபிநயம்! குழந்தையைப் பார்ப்பது போல் நானும் பாசாங்கு செய்தேன். ஆனால் என் பாழும் கண்கள் மட்டும் அவள் ஒளிந்து நிற்கும் இடத்தைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே யிருந்தன...... அவள் மெதுவாகக் குழந்தைப் பக்கம் மீண்டும் திரும்பினாள். அதைப் பார்த்து புன்முறுவது போல் என்னை ஒன்று 'கடாக்ஷி'த்தாள் குறும்புத் தனமாக.நான் ஒன்றும் அறியாதவன் போல் வானத்தை உற்று நோக்கினேன்! என் உதடுகளிலும் ஓர் முறுவல் பூத்தது!! முன்போல அவள் மறைந்து கொண்டாள். கைகள் மாத்திரம்

குழந்தையைச் 'சீண்டி'க் கொண்டுதான் இருந்தன; குழந்தையும் 'ம்மா' 'ம்மா' வெனக் கதற வாரம்பித்தது பிரமை மிகுதியால்.

மணி இதற்குள் ஆறு அடித்து விட்டது; என் சுய நினைவும் வந்தது. ஒரு பெரு மூச்சு விட்டு விட்டு ஜன்னல் வழிகளைப் பிடித்தவாறு மெள்ள எழுந்தேன்; என் மூச்சில் ஏக்கம் தோய்ந்திருந்தது; நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின.

மனம் ஊசலாடுவது போல் என் தேகமும் ஊசலாடிக் கொண்டே நடந்தது காரியாலயத்தை நோக்கி. என் வேலைகளி லொன்றும் என் கவனம் செல்லவே யில்லை. 'எடிடோரியலு'க்குத் தகுந்த விஷயங்கள் ஏதேனும் இருக்கிறதா வென்று மேலாசிரியர் நான் காரியாலயத்தில் நுழைந்ததும் நுழையாததும் கேட்டார். நான் மூஞ்சியை சுளித்துக் கொண்டேன், இல்லை என்பதற்காக. அவர் சுளித்து விட்டு, "சரி பாதகமில்லை, அரசியல் சிக்கல்களைப் பற்றிஒரு கட்டுரை எழுதும்" என்றார். என் மனக் குழப்பத்தை அவர் எங்கே கண்டார்! அவர் சொன்னதையும் சொல்லாததையும் சேர்த்து எப்படியோ ஒரு அரசியல் கட்டுரை எழுதி முடித்தேன். நப்பும் தவறுதலுமாக இன்று அந்தக் கட்டுரையை படித்துப் பார்க்கும் பொழுது தான் என் நிலையில் எனக்குப் பரிதாபம் தோன்றுகிறது.

வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்கு எப்பொழுது திரும்பினே னென்று தெரியாது. கண் விழித்துப் பார்க்கும் பொழுது புலபுல வென்று விடிந்திருந்தது. பித்தனைப் போல் ஓடினேன் ஜன்னலண்டை, என்ன விபரீதம்! அங்கே அந்த மாதைக் காணோம்! உன்னைப் போல் அவளுக்கு மென்ன பயித்தியமா பிடித்திருக்கிறது!' என்று என் வாய் முணு முணுத்தது.

தினசரியைக் கொண்டு வந்து போட்டான் பையன். "ஏண்டா இப்படி வீசி யெறிந்து விட்டுப் போகிறாய், இவ்வளவு திக்காரமா உனக்கு?' என்று கடிந்து கொண்டேன் என் ஆத்திரம் தீர. அவன் இதைச் சட்டை செய்ததாகத் தெரியவில்லை.

பத்திரிகையில் சுவாரஸ்யமான பாகத்தைப் பிரித்துக் கொண்டு படிக்கலானேன். என்னமோ படித்தேனே யொழிய என்ன எழுதி யிருந்ததென்று எனக்கு விளங்கவில்லை. விளங்கும்படி படித்தால்தானே விளங்குவதற்கு!! என் கண்களிரண்டும் தினசரியை உற்று நோக்கியவாறு

இருந்தன. என் மனம் அவைகளோடு ஒத்துழைக்காமல் சிந்தனை செய்து கொண்டிருந்தது.

"ஆம் அவளுக்கொன்றும் வயது அதிகம் இருக்காது. அவள் ஏன் தன்னந் தனியாக அப்படி குழந்தையிடன் விளையாடிக் கொண்டிருக்கிருள்? அவளுக்குத் துணை அவ்வீட்டில் ஒருவருமில்லையா ?...... அவள் கலியாணமாகாத கன்னிகையா...சே அப்படியிராது—அத்தக் குழந்தை—அதற்கும் சுமார் ஒன்றரை வயது தான் இருக்க முடியும். அவளை அம்மா அம்மா வென்று தான் கூப்பிடுகிறது. அதுமட்டுமல்ல, அது அவளைப் போலத் தான் இருக்கிறது. குழந்தை அவளைப் போலிருக்கிற தென்ருல் அது அவள் குழந்தை யென்று யூகிப்பது சரியல்ல..,ஒரு சமயம் அவள் தமக்கை குழந்தையா யிருக்கலாம். அல்லது அவளது தமக்கையினுடையதாகவோ தமயனுடையதாகவோ யிருக்கலாம்......குழந்தையைப் பார்த்தேனே அது என்ன குழந்தை என்று கவனித்தேனு, பார்.

"கரு நிறமாக யிருந்தாலும் நல்ல லாவண்ய முள்ள முகம், களையுள்ள முகவெட்டு, கட்டான தேகவமைப்பு. ஸ்திரீ லட்சண மென்பார்களே.... அது இவளிடத்தில் ஒருங்கே அமைந்துளது......ஹூம்...... அந்தச் சிரிப்பு! அதன் இனிய ருசி !!...குழந்தையுடன் சிரிக்கிருேம் என்று அவள் நினைப்பு! எனக்கா இதெல்லாம் தெரியாது...அவள் ஏன் அப்படி, அந்த மாதிரி மறைந்து கொள்கிருள் ?... நாணம் வந்து விடுகிறது ; ஆனல் நான் வேறு பக்கம திரும்பி விட்டால் அது காணப்படுவதில்லையே ?....... பார்க்கலாம் இன்று எப்படி யென்று."

* * *

நான் அப்படியே அயர்ந்து தூங்கி விட்டேன். ஹோட்டலில் இருந்து சாப்பாடு கொண்டு வரும் வாலிபன் என்னை மெதுவாக இரண்டு முறை கூப்பிட்டான். நான் அசைவற்றுத் தூங்குவதைப் பார்த்து கொஞ்சம் பொறுத்து வரலா மென்று போய் விட்டான். அரை மணி நேரம் சென்ற பின் அவன்மீண்டும் வந்தான். ஆனல் நான் இன்னமும் சாப்பிடாமல் உறங்குவதைப் பார்த்து சற்று உரத்த குரலில் ", மாமா" "மாமா" வென்று கூப்பிட்டான். என்னை அடித்து எழுப்பினுற் போல் எழுந்தேன். நான் படித்துக் கொண்டிருந்த தினசரி கொல்லை வாயிற்படியண்டைக் கிடந்தது.

"மணி பனிரெண்டுக்கு

மேலாகிறதே, இன்னுமாத் தூக்கம்? சாதம் இந்நேரம் ஆறிவிட்டிருக்கும். நான் இதற்கு முன்னல் வந்த போதே தூங்கிக் கொண்டிருந்தேளே?...' என்று துக்கம் தோய்ந்த ஸ்வரத்தில் வினவினான்.

"நான் இன்னமும் பல் துலக்க வில்லையே!...எனக்கு சாப்பிட வேண்டுமென்றே தோன்ற வில்லை. ஏதாவது கொஞ்சம் 'முழுங்கி' வைக்கணும்......"

"உடம்பிற்கு ஏதாவது?... டாக்டரைக் கூப்பிடட்டுமா?"

"..........?......"

"..........??......"

"இதோ வந்து விட்டேன்" என்ற வண்ணம் 'பாத்' ரூமிற்கு விர்ரென்று சென்றேன். அவன் நான் சென்ற திசையை நோக்கியவாறு பிரமித்து நின்றான்.

பீதிமிகுந்தால் தொண்டை அடைபடுவது போல் என் தொண்டையில் என்னமோ சங்கடப் பட்டது. சோறு இறங்க வில்லை. ஆனல் பசியோ வயிற்றை பிய்த்துக் கொண்டது. ஒரு டம்ளர் ஜலம் குடித்து விட்டு ஒருவாறு என் சாப்பாட்டை முடித்துக் கொண்டேன். அவன் திருப்பிப் போகும் வரையில் என் மனம் ஏனோ நிலை கொள்ள வில்லை.

நேரம் செல்லச் செல்ல, 'அவளை'ப் பார்க்க வேண்டுமென்ற என் அவா அதிகமாகிக் கொண்டே வந்தது. மணி ஐந்தடித்தும், ஏனோ காண வில்லை. என் இருதயமே நின்று விடும் போலத் தோன்றிற்று. அவள் வீட்டு வாயிலண்டை ஒரு கார் வந்து நின்றது. ஒரு மரம் மறைத்தபடியால் காரில் யார் யார் ஏறினார்களென்று தெரியவில்லை. கடைசியில் ஒரு வாலிபன், சுமார் பதினெட்டு வயது இருக்கலாம். வண்டியினுள் நுழைவது மட்டும் என் கண்ணுக்குத் தெரிந்தது. சுமார் மூன்று பேர் வண்டியில் ஏறி இருக்க வேண்டுமென்று கணக்கிட்டு யூகித்தேன். இருமலுடன் கார் புறப்பட்டு விட்டது. தூசி அதன் பின்னல் பறந்து கொண்டிருந்தது.

ஒரு காரணமுமின்றி என் மனம் சங்கடப் படுவதைப் பார்த்து எனக்கே என் மீது கோபம் கோபமாய் வந்தது.

(57-ம் பக்கம் பார்க்க)

அரங்கேற்றம்

வசீகரன்

சேகர் வட நாட்டைச் சேர்ந்தவன். அவன் ஒன்பது வயதாயிருக்கும்போதே சென்னைக்கு வந்து, பொன்னம்பலப்பிள்ளையிடம் குருகுல வாசத்துக்கு அமர்ந்துவிட்டான். பார்வைக்கு முடுக்காகவும், சிவப்பான மேனியும், எதிலும் ஓர் அலட்சியம் தோன்றப் பார்க்கும்பார்வையும், திடகாத்திரமான சரீரமும் வாய்க்கப் பெற்றிருந்தான். எப்பொழுதும் வேடிக்கையானபேச்சு; நையாண்டி செய்வதே அவனுக்குப் பொழுதுபோக்காக இருந்தது. ஆயினும் குருகுலத்தில் பாடம் கற்கும்பொழுது மிகவும் சாக்கிரதையுடனே குருவின் கட்டளைகளை மிகச் சரிவர நிறைவேற்றிக் கொண்டு வருவான். தன் குரு எப்படி வீணை வாசிக்கிறார் என்பதை

மிகவும் உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டு, அதன் படியே, கேட்டதும் கையானது வீணையின் தந்தியை மீட்டிவிடும். பொன்னம்பலப் பிள்ளை, 'சங்கீதகேசரி, வெங்கடரமணராயரின் பிரதமசிஷ்யர். வெங்கடரமணருக்குப் பெயர் கிடைத்ததே நம் பொன்னம்பலப் பிள்ளையால் தான். ஆகையால்தான் குருவின் கடைசி வார்த்தையாகிய ராயர் என்றும் பட்டத்தோடு சேர்த்தே பொன்னம்பலத்தையும் செல்லப்பெயரால் அழைத்து வந்தார்கள், அவர்களுடையரசிகர்கள். சென்னை வைணிக வித்வத்தில் அவருக்கு நிகர் அவரேதான். அவருடைய சிறந்த கானமுதத்தைக் கேட்கவும், கை விரல்களின் நளின அசைவினைக் கண்கொண்டு பார்க்கப் பல சோடிக் கண்கள் தவித்து நிற்கும். ஒரு இடத்தில் அவருடைய கச்சேரி என்ருல் உட்காரக் கூட இடம் கிடைப்பதரிது. அதுவும் அவர் தானம் வாசிக்கும்பொழுது, அடடா! அவர் போடும் ஸ்வரக் கோர்வையும், போகிற ராஜ பாட்டையும், இது வாசிப்பது மனிதனு அல்லது தேவகந்தர்வனு என்று தோன்றும்படி செய்தது.

ஆகிய இத்தகைய சிறந்த வைணிக வித்வானிடத்தில் சேகர்போய்க் குருகுலவாசம் செய்யச் சேர்ந்தான். சேர்ந்ததும் பூவுடன்சேர்ந்த நாறும் மணம் பெறுவதுபோல், சேகருக்கும் அவருடைய பூரண வித்தைச் சிறிது சிறிதாக வரத் தொடங்கியது. வயதோ யௌவனம். ரத்தத் துடிப்புள்ள மேனி. இவனுடன் மற்றும் இருபது பேர்கள் படித்து வந்தனர். அவர்களில் நான்கு பேர் பெண்கள்.

வீணை என்பதே பெண்களுக்குத்தான் ஏற்பட்டதாகத் தோன்றும். அழகான ஒயிலுடன், அலங்காரத்தோடு சேர்ந்து, பெண்கள் வீணையை மீட்டும்பொழுது வரும் நாதமே, பஞ்சம ஸ்ருதியோடு சேர்ந்து மனதைப் பரவசப்படுத்தும். இந்த நான்கு பெண்களும் வீணையை நன்ருகவே வாசிக்கக் கற்றுக் கொண்டனர். ஆயினும் நல்லது, மிகவும் நல்லது என்பதைப்போல், அவர்களில் மிகவும் சிறந்து வாசிப்பவள் நளினிதான். எந்த ராகத்தை எடுத்தாலும் ஒருவிதக் கஷ்டமுமில்லாமல் கண்..கணீர்... என்று ஆரம்பித்து, நயமாக முடித்து, எல்லோருடைய கரகோஷத்தையும் பெற்று விடுவாள். அவளுக்கு அப்பொழுதுதான் பதினைந்து வயது. உடம்பில் ஒவ்வொரு அவயவமும், ஒவ்வொரு ரத்தத் துளியும் இளமையை அள்ளி வீசியது. பார்த்தவரை மயக்குறச் செய்தது அவளுடைய மீன் போன்ற கரிய

விழி. ஆனால் நளினியோ யாரையும் ஏறிட்டுப் பார்க்க மாட்டாள். வகுப்பில் வந்து உட்கார்ந்ததும், தானுண்டு, தன் பாடமுண்டு என்று குருவின் கைகளைப் பார்த்துக்கொண்டே, தன் பாடங்களைக் கற்றுக்கொண்டு, ஒருவித நகையும் செய்யாமலே சென்று விடுவாள். மிகவும் அடக்கம் வாய்ந்த பெண். அப்பொழுது சேகருக்கு வயது பதினாறு.

குருவானவர் வித்யாசம் சிறிதும் பாராட்டாமல் வீணை சொல்லிக் கொடுத்து வந்தார். கலையை நன்கு கற்றல் வேண்டும், குருவின் பெயருக்குச் சிறிதும் பங்கம் வரக் கூடாது, அதுதான் அவருடைய வாழ்க்கையின் குறிக்கோள். சேகரும் நளினியும் நன்றாகவே வீணை வாசித்து வந்தனர். இவர்கள் வெகு அழகாக வீணை வாசிப்பதைப் பார்த்து குருநாதரே பெருமகிழ்ச்சி கொள்வார். சில சமயம்இருவரையும் ஒருங்கே சேர்ந்து வாசிக்கும்படி கேட்டுப் புளகாங்கிதமடைவார். அப்பொழுது அவ்விருவரையும் ஒருங்கே பார்த்து பெருமூச்சு விடுவார். அதன் அர்த்தம் அவ் விளைஞர்களுக்குத் தெரியாமலிருந்தது.

ஒரு நாள் குருவுக்குச் சுரம் கண்டுவிட்டது. அன்று குரு வர முடியவில்லை. தன் ஆஸ்ரமத்திலிருந்தபடியே, சேகரைக் கூப்பிட்டு, அன்றைய பாடத்தைத் துவக்கச் சொன்னார். ஆனால்அன்றைக்கு எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது.

தெற்கிலிருந்து ஒரு சிறிய வாலிபன், குருகுல வாசத்தை மேற்கொள்ளுவதற்காகக் குருநாதரிடம் வந்தான். அவன் அதுவரையில்வீணையில் சிறந்து தேர்ச்சி பெற்று, பலருக்கும் போதிக்கும் நிலையிலிருந்தான். அப்படியிருந்தும் குருநாதரிடம் உள்ள பேரன்பினால், அவரிடம் பாடம் கேட்கவே இங்கு வந்திருந்தான். ஆனால் குருநாதர் உடம்பு அசௌகர்யத்தால், தான் நேரே வரமுடியாமைக்கு வருந்தி, சேகர் இருக்கும் வகுப்புக்குப்போய் அன்றைய பாடத்தைக் கேட்கும்படி அனுப்பி விட்டார். சேகர் நடத்தும் வகுப்பில் மிக்க அடக்கத்துடன் உட்கார்ந்து கொண்டு, சேகரையே உற்று நோக்கிக் கேட்கலானான்.

சேகர் மீட்டின வீணையின் நாதத்தைப் பார்த்து வந்த வாலிபன் மிகவும் பிரமிப்படைந்தான். அவ்வாலிபனது பெயர் குமார். குமாருக்கு முதலில் சிறிது பிரமிப்புத் தட்டினாலும், நேரம் செல்லச் செல்ல, தன் கண்களை நாலாபுறமும் ஓட்டினான். நளினி தன்னுடைய கையில் வீணையை வைத்துக்கொண்டு உட்

கார்ந்திருப்பது, இவள்தான் கலைவாணியோ என்ற எண்ணத்தை அவன் சிந்தனை எழுப்பியது. இருந்தாலும் அது முதல் நாளானதால், எதற்கும் இடம் கொடுக்காமல், சேகரிடம் பாடத்தைக் கற்றுக்கொண்டு, தன் குருநாதனின் க்ஷேமத்தையறியச் சென்றுவிட்டான்.

மறு நாள் குருநாதருக்குச் சிறிது சுரம் தணிந்தது. தம் சிஷ்யர்கள் எப்படி வாசிக்கிறார்களோ என்பதை யறிய வகுப்பில் வந்து உட்கார்ந்தார். சேகர் முன் தினம் எப்படிக் கற்றுக் கொடுத்தான் என்பதை அறிய புதியதாக வந்த மாணவனாகிய குமாரைச் சற்று வீணை வாசிக்கக் கட்டளையிட்டார். குமாரும் வீணையை அதிலாவகமாக எடுத்து, மிக அழகான சங்கதிகளைப் போட்டு, அபூர்வ உருப்படிகளாகப் பொழிந்து தள்ளினான். இதைக் கேட்ட குருநாதர் அவனை மிகவும் மெச்சி, சேகரை, அப்படிக் கற்றுக் கொடுத்ததிற்கு மிகவும் பாராட்டியும் பேசினார். ஆனால் சேகர் அப்படிச் சொல்லிக் கொடுக்கவில்லை. இது அந்த வகுப்பில் உள்ள பெண்கள் உள்பட எல்லோருக்கும் தெரியும். குமார் இவ்வளவு அழகாகப் புது மெருகுடன் வாசிப்பானா என்ற எண்ணமே அவன் மனதில் நிறைந்தது. "பிரபோ, குருநாதா! ஒரு விண்ணப்பம். நான், என் நண்பர் குமார் வாசித்ததுபோல் நிச்சயமாகச் சொல்லிக் கொடுக்கவில்லை. இது இவருடைய கற்பனையிலிருந்து வந்து பெருகின ஊற்று" என்று சொல்லித் தலை வணங்கினான்.

"அப்படியா ரொம்ப நல்லதாய்ப் போச்சு" என்று சொல்லி, இன்னும் நல்ல கவனத்தை வீணையில் செலுத்தும்படி சேகருக்கு எச்சரிக்கை செய்தார்.

இறுதிவரையில் சேகருடைய வாசிப்புக்கு இணையில்லாமலிருந்த இடத்துக்கு ஒரு போட்டி ஆள் வந்துவிட்டான். சேகர் எவ்வளவுதான் கஷ்டப்பட்டு வாசித்தாலுங்கூட அங்கேயிருக்கும் பெண்கள் கூட்டம் அவ்வளவாக ரசிப்பதாகத் தோன்றவில்லை. அதுவும் நளினி, அங்கம், தலை ஒன்றையும் சிறிதும் ஆட்டாமலே, சேகரை நிராகரித்து வந்தால் சேகர்பாடு எப்படியிருக்கும்? "ஆஹா... நளினிகூட என்னிடத்தில் பாராமுகமாயிருக்கிறாளா? இதன் உண்மையை அறிய வேண்டியதவசியமே" என்று மனதில் நினைத்து அன்றைய பாடத்தை ஒருவாறுக வாசித்து முடித்து, சிந்தனை அலையில் ஊறிப் போயிருந்தான்.

குருவுக்கு உடம்பு பூரண சொஸ்தமாகிவிட்டது. அந்த வைகாசி மாதத்தில், பிரத்தியேகமாகக்கட்டப்பட்டிருந்த மணி மண்டபத்தில் பொன்னம்பல ராயரின் சிஷ்யர் இருவர்கள் அரங்கேற்றப்பட வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் மும்முரமாக நடந்தன. ஆனால் அந்த இரண்டு பேர் யார் என்பதை நிர்ணயிக்க, குருநாதரைத் தவிர வேறு யாருக்கும் உரிமை கிடையாது. அவரிடத்தில் இப்பொழுது சிறந்த வித்வத்தன்மை யடைந்தவர்கள் மூன்றே பேர்கள்தான். சேகர், குமார், நளினியைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?

சேகர், குமார் இவர்களில் யார் வாசிப்பது சிறந்தது என்று நாளா வட்டத்தில் யாரும் சொல்ல முடியாத நிலையிலிருந்தது. சிறந்த மேதையைப் பெற்றிருந்தார்கள். நன்றாக வாசிப்பார்கள். இதனால் குருநாதருக்கு ஒருவிதச் சங்கடம் ஏற்பட்டது. மூன்று பேரில் இரண்டு பேர் பொறுக்க வேண்டும். நளினிக்கும் அரங்கேற்ற படியாக வேண்டும் என்று யோசித்து ஏதோ ஒரு முடிவுக்கும் வந்து விட்டதாக சட்டென்று தன் ஆசனத்தை விட்டெழுந்து விட்டார் குருநாதர்.

“சேகர், குமார்! இன்றைக்கு உங்களுக்குப் பரிசோதனை தினம். உங்களில் யார் சிறந்தவ ரென்பதை நான் நிர்ணயிக்கப் போவதில்லை. ஆனால் நாளை அந்த மணி மண்டபத்தில் கூடும் கூட்டமே உங்களுடைய விதியை நிர்ணயிக்கப் போகிறது. ஆனால் கற்று......... என்ன தெரியுமா சேகர்?”

“சொன்னால் செய்யச் சித்தமாயிருக்கிறேன் பிரபோ?”

“உனக்கு, குமார்?”

“நானும் அப்படியே குருநாதா!”

“ஆம்! இன்றையப் போட்டி உங்கள் இரண்டு பேருக்குள் அல்ல; நளினியோடு, ஒவ்வொருவரும் தனித் தனியாக வாசிக்கவேண்டும். ஒத்துழைத்து, மிக இனிமையாக யார் வாசிக்கிறார்களோ, அவர்களே நாளை அரங்கேற்றத்துக்கு லாயக்கானவர்கள்......நான் சொன்னது ஞாபகமிருக்கிறதா?” என்றார். இதைக் கேட்டு இருவரும் சந்தோஷம் கொண்டு, நளினியை எதிர்ப் பார்த்திருந்தனர்.

இதற்குள் குருநாதரும் எழுந்து சென்று விட்டார். குமாரும் தன்னுடைய வீணையைச் செப்பனிடுவதற்காக விரைந்து சென்றான். சேகரும், நளினியும் தனியே விடப்பட்டனர். சேகருக்கு

முதலில் அவளுடன் எப்படிப் பேசுவது என்ற லஜ்ஜை இருந்தாலும், சிறிது தைரியங் கொண்டு, அவளை அணுகிப் பேச முயன்ருன். அவளுக்கும் இவனிடத்தில் பேச்சுக் கொடுக்க நெஞ்சம் துடித்துக் கொண்டிருந்தது.

"நளினி! இன்றைக்கு நமக்குச் சோதனை நாள். நாம் இதுவரை ஒருவரையொருவர் பார்த்திருக்கிறேமே தவிர, பேசினது கிடையாது. ஆனல் என் இதய ஆழத்திலே உன் வீணையின் அன்பொலியை எழுப்பி விட்டாய். இன்றைக்கு நான் வாழ்வதும், வீழ்வதும் உன் கையிலல்லவோ யிருக்கிறது...அது போகிறது, உனக்கு என்னிடத்தில் சிறிதாயினும் அன்பு உண்டா? மறைக்காமல் சொல்...அப்படி யில்லையென்ருல் அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்கிறேன்... நான் சொல்வது கேட்கிறதா... நளினி!"

"உங்கள் இளமையான வசீகர மேனியைப் பார்த்து நான் சொக்கிப் போனதென்னமோ வாஸ்தவம்தான். நானும் பால்யம்; தாங்களும் யௌவன புருஷர்; தாங்களோ என்னைவிட எவ்வளவோ மடங்கு அழகு வாய்ந்திருக்கிறீர்கள்...

ஆனால் நான் அழகுக்கு அடிமைப்படுவதா? அல்லது கலைக்கு அடிமைப் படுவதா? என்பதைப் புரிந்து கொள்ளாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன். கலை ஒரு புனித மான வஸ்து அல்லவா?'' என்றாள்.

''ஆம்! உண்மை! புனித மான வஸ்துதான்! அதைப் போற்ற வேண்டிய முறையில் இருந்தால்தான் புனிதம்; ஆனால் உன் வாழ்க்கையையே, கலைக்கு அர்ப்பணம் செய்து விட்டால் அப்புறம் ரசிகன் பாடு......?''

''கொண்டாட்டம் தான்! கலையும், ரசிகனும் நன்றாய்ப் பிணைந்தவர்கள்தானே......!''

''அப்படியானால்?''

''அதுதான்! கலைக்கே அர்ப்பணம் செய்யப் போகிறேன். கேவலம் மிருக இச்சைக்காக அந்தப் புனிதமான பெயரைப் பாழ்படுத்த விரும்பவில்லை...''

''அப்பொழுது நான் கலைஞன் அல்லவென்பது உன் அபிப்பிராயமா?''

''அப்படிச் சொல்லவில்லை......கலைஞன் என்றால் உங்களுடைய பூரண ஞானத்தையும், சாமர்த்தியத்தையும் காட்டுங்கள்...பிறகு...''

பூரண சாமர்த்தியத்தைக் காட்ட, உன்னுடைய ஒத்துழைப்பல்லவா வேண்டும்?''

''அது இருக்கவே இருக்கிறது......அதற்காக......''

இத்துடன் அவர்களுடைய சம்பாஷணை குருநாதருடைய வருகையால் முடிவடைந்தது.

நளினிக்கு மனதில் ஒரே குழப்பம். கலைக்கா? அல்லது கலைஞனுக்கா என்ற போராட்டம் அவளை வாட்டியது. குமார் கலைப் பொக்கிஷம். ஆனால் பார்ப்பதற்கு அழகாக இருக்கமாட்டான். சேகர் கலைஞன்; ரசிகன்; பார்க்க மிக அழகாயிருப்பான். ஆனால் வீணை வாசிப்பிலோ சொல்ல முடியாமலிருந்தது. அன்று நடக்கப் போகும் போட்டியே இவர்களுடைய வாழ்க்கைப் பாதையை நிர்ணயித்து விடும். ஆனால் ''நான் யாருக்கு விட்டுக் கொடுப்பது?'' என்ற ஒரே சிந்தனையுடன் தோன்றினாள் நளினி.

குருநாதர் வந்ததுமே, போட்டி ஆரம்பமாகிவிட வேண்டுமென்று உத்திர விட்டுவிட்டார். சேகர், நளினி இருவர் கண்களும் ஒன்றையொன்று பரிதாபமாகப் பார்ப்பதுபோல் தோன்றிற்று. வெற்றி கலைக்கா? கலைஞனுக்கா?

நளினி குருநாதரை நன்றாகப் பணிந்துவிட்டு ஆசனத்தில் வீணையுடன் அழகாக அமர்ந்தாள். குருநாதரோ, முதலில் அவளோடு சேகர்

தான் வாசிக்க வேண்டுமென்று சொல்லி விட்டார். மிக்க அடக்கத்துடனே, நளினிக்குப் போடப்பட்டிருந்த ஜமக்காளத்து ஒரு பாகத்தில் உட்கார்ந்தான். வீணையை நளினி மீட்டினாள். சேகரும் மீட்டினான். ஒவ்வொரு ராகமாக நளினி வாசிக்கும் போது, அதற்கு மேலே குழைவு தோன்றும்படி சேகர் வாசித்துக்கொண்டு போனான். குருநாதரோ 'சபாஷ்...பலே...'என்று தட்டிக் கொடுத்துக் கொண்டே, இருவரையும் சேர்ந்து வாசிக்கச் சொன்னார். அப்படியே இருவரும் சேர்ந்து சுருதி கூட்டினார்கள். மேல் ஸ்தாயியைப் பிடிக்கும் சமயம்—ராகத்தை அலசியெடுக்க இருவரும் கை கலக்கும் சமயம்—சேகரின் வீணைத் தந்தி "கிரீச்"சென்றது. இது என்ன ஒருஅபசகுனம்போலிருக்கிறதே என்று சேகர் நினைத்தான். ஆனால் அதைப் பற்றி அவன் தீவிரமாக எண்ணவில்லை. இருவரும் அபூர்வ பிடிகளை யெல்லாம் பிடித்தனர். சில சமயம் ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்ச்சி குருநாதருக்கு ஏற்பட்டது. இருவரும் உச்சதொனியில் வீணையை மீட்டினர். தம்.......தம்......தானம் என்று தானத்தை எட்டிப் பிடிக்கும் சமயம்......அந்தப் பாழும் தந்திக்கம்பி...'டணார்' என்று அறுந்தது. அக்கம்பி போகிற போக்கில், சேகரின் கண்ணையும் அல்லவோ குத்திச் சென்றது! "ஹா"வென்று கீழே சாய்ந்தான். அவனை குருநாதர் அப்புறப்படுத்திவிட்டார். தக்க சிகிச்சைகள் அளிக்கவும் உத்திர விட்டார். சேகரின் தந்தியறுந்த வீணை ஒரு ஓரத்தில் ஒதுக்கப்பட்டது.

பிறகு குமார் உட்கார வைக்கப்பட்டான். அன்று நடந்த கடைசி நிகழ்ச்சியினால் குமாருக்கு ஒரு வித சந்தோஷமே ஏற்பட்டது. தனக்குப் போட்டியில்லாமல் நளினியுடன் மறு நாள் அரங்கேற்றம் நடக்குமல்லவா? அவன் கண் குணமாவதற்கு இன்னும் குறைந்தது மூன்றுநாட்களாவது ஆகும். அதற்குள் "பார்க்கலாம்" என்று நினைத்தான். இப்பொழுது இவ்விருவருக்கும் போட்டி. கலையைக் கசக்கிப் பிழிந்து, அமிர்தத்தை எடுத்துக் கொடுத்தான் குமார். அதைக் கிண்ணத்தில் வாங்கி எல்லாரும் பருகும்படித் தன் கைகளால்—தந்திக் கம்பிகளில் அள்ளி வீசினாள். நளினி ஒரு அபூர்வப் பிறவி எனப்பட்டது. ஒருவருக்கொருவர் தோற்றதாகத் தென்படவில்லை. குருநாருக்குச் சந்தோஷமும், சந்தேகமும் தோன்றினும், இவ்விருவர்களையே மறு தினத்துக்கு

உரிய இருபெயர்கள் என்று பிரகடனம் செய்து விட்டார். நளினிக்கோ துக்கம் தொண்டையை யடைத்துக் கொண்டது. ஐயோ! சேகர் நிலை எப்படி யாயிற்ருே என்ற கவலை மற்ருெரு புறம்.

மறுநாள் மணி மண்டபத்தில் ஒரே கூட்டம். எல்லாரும் இந்த இருவர்களின் கை வரிசைகளைக் கேட்க—காதால் பருக—கூடியிருந்தனர். குருநாதரும் தனக்குரிய உயர்ந்த தோர் ஆசனத்திலமர்ந்தார். "ஏன் ஆரம்பிக்கலாமே" என்றும் உத்திர விட்டார். போராட்டம் ஆரம்பமாகியது. ஒருவருக்கொருவர் புதுப் புது ஸ்வரங்களைப் பிரயோகித்து, அடிக்கடி சபையோரின் கரகோஷங்களைப் பெற்றனர். கொஞ்சம் கொஞ்சமாக, மேல் பஞ்சமம், ஷட்ஜமம்......முதலியவைகளைப் பிடித்து, சங்கதிகளை ரவை மாதிரி உதிர்க்கலாயினர். உட்கார்ந் திருப்போருக்குச் சில சமயம் ஆகாயத்தில் பறப்பது போலவும், ஊர்வன போலவும், இடைவிடாது ஒரே இடத்தில் சில சமயம் இருப்பது போலவும், ஒவ்வொரு பாவத்தை யுண்டாக்கியது அவ்விருவருடைய கை வேலை. ஒருவர்க்கொருவர் எத்தனை மணி நேரமாகியும் சளைக்கவில்லை. குருநாதனுக்குச் சந்தோஷம் பொங்கிக் கொண்டே வந்தது. "இன்னும் தந்தியை அழுத்துங்கள்" என்று கூறியவுடன், நளினி வீணையை ஒரு முறுக்குமுறுக்கினுள். இதனல் எழும்பிய "ரொய்ய்.........ங்" என்ற நாதமும், குமாரின் முருக்கின நாதமும் ஒன்ருகச் சேர்ந்து, ஒரு கல கலப்பை உண்டு பணணியது. மறுபடியும் கரகோஷங்கள் அவர்களுடைய வாசிப்புக்கு. ஆனல் சரியான சமயத்தில் ஒரு சிறு கத்தி, குமாரின் பின் புறத்திலிருந்து பறந்து வந்தது. வந்து, நளினியைத் தாக்காமல் குமாரைத் தாக்கியது. "ஐயோ, என்று சாய்ந்தான் குமார்." நளினிக்கு ஒன்றுமே புலப்பட வில்லை. அவளும் மூர்ச்சையற்று விழுந்தாள். கூட்டத்தில் ஒரே குழப்பம். கடைசிவரையில் அந்தக் கத்தி யாரால் எறியப் பட்டது என்பதே தெரியவில்லை. குமார் சிறிது நேரத்துக்குள் தன் சுய நினைவை இழக்க நேரிட்டது. மூளை அதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. சிகிச்சையடைந்தும், புத்தி ஸ்வாதீனமில்லை. அவன் கற்ற வித்தையனைத்தும் பாழடைந்து போய்விட்டது. வெறும் உடலைத் தாங்கி நிற்கின்ருன்—சுத்த சூன்யப் பார்வையுடனே! அது அவன் கதி!

மறுநாள் சேகர் நளினியைச் சந்தித்தான்.

ஆறுதல்

பதினைந்து வருஷங்களுக்குப் பின் விசுவம் ஊருக்குத் திரும்பி வருகின்றான். பதினைந்து வருஷங்கள்—நினைத்துப் பார்க்கும்போதே விசுவத்திற்குத் தலை சுழன்றது. ஹூம்! அதற்குள்தான் எவ்வளவு மாறுதல்கள்! ‘மினுக் மினுக்’ என்று உயிருக்கே ஊசலாடிக் கொண்டு எரிந்துகொண்டிருந்த முண்சிபல் லாந்தர்களே முன்பு காணக் கூடியவை. ஆனால் இப்போதோ மின்சார விளக்குகள். யுத்தங் காரணமாகி தலையில் கருந் தகரக் குல்லாய்களுடன் அவை எரிந்து கொண்டிருந்தன. ஆதலால் அவைகள் பூர்ணப் பொலிவுடன் பிரகாசிக்கவில்லை. மேலும் ஒன்று விட்டொரு விளக்கு வீதமாகவே அவை எரிந்து கொண்டிருந்தன். எனவே, தெருவில் வெளிச்சமும், இருளுங் கலந்து காணப்பட்டன, விசுவத்தின் இதயத்தில் நம்பிக்கையும் சோர்வும் கலந்து மிளிர்ந்தது போல.

பதினைந்து வருஷங்களுக்கு முன்புதான் அச் சம்பவம் நிகழ்ந்தது ஆனல் அதை எண்ணிப் பார்க்கும்போது விசுவத்திற்குப் 'பகீரெ'ன்றிருந்தது. அவ்வூரில் காலடி எடுத்து வைத்ததுமேதான் அன்று நடந்த நிகழ்ச்சிகள் சலனப் படம்போல் அவன் மனக் கண் முன் தோன்ற லாயினவே! அண்ணு தன்னைத் திருத்தியது—அகம்பாவத்துடன் தான் அவனை எதிர்த்துப் பேசியது—கோபாக்ராந்தராய் தன் தந்தை தன்னை அடித்து, "சீ, நாயே, வெளியே போ" என்று உறுமியது எல்லாம் இப் பதினைந்து வருஷ காலமும் அவன் மனத்திரையை விட்டகவே யில்லை.

2

அப்போது அவன் ஆருவது பாரத்தில் படித்துக் கொண்டிருந்தான். அவன் தமையன்தான் ராமநாதன். ராமநாதனுக்குப் படிப்பு வறவே யில்லை. நான்காம் பாரத்தின்மீது மூன்று முறை படை யெடுத்தும் வெற்றி கிட்டாது போகவே படிப்பையே அவன் விட்டு விட்டான்.

அன்று விசுவம் ஆங்கிலப் பாடத்தை உறக்கப் படித்துக்கொண் டிருந்தான். அப்போது அவன் ஒரு வார்த்தையைப் பிசகாக உச்சரித்து விட்டான். ராமநாதன் அதைத் திருத்தினன். அவ்வளவுதான்! விசுவத்திற்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. "நான்காம் பாரத்தில் 'கோட்' அடித்து விட்டு என்னைத் திருத்த வந்து விட்டான்!" என்று அலக்ஷியமாய்க் கூறி விட்டு, வேண்டு மென்றே அவ்வரியை மீண்டுமொரு முறை பிசகாகவே படித்தான். ராமநாதனுக்கு வெட்கத்தால் முகம் சிவந்தது. ஆனல் அவன் 'சிவனே' என்றிருந்து விட்டான். சிவராமய்யருக்குத்தான் கோபம் பிரமாதமாக வந்து விட்டது. விசுவத்தின் முதுகில் ஓங்கி இரண்டு அறை வைத்துவிட்டு. "சீ, நாயே, நீ என் பிள்ளையல்ல, வீட்டை விட்டு வெளியே போ," என்று கர்ஜித்தார். பதிற் பேசாது விசுவம் வெளியே சென்று விட்டான். "ஆமாம்! கழுதை கெட்டால் குட்டிச் சுவர். எங்கே போகப் போகிருன்? எல்லாம் தன்னல் வந்து சேருவான்" என்று எல்லோரும் நினைத்திருந்தனர். ஆனல் அவர்கள் நினைத்தபடி நடக்கவில்லை. பதினைந்து வருஷங்கள் உருண்டோடிச் சென்ற பின், அன்றுதான் அவ் வீட்டை நோக்கி அவன் செல்கிருன்.

3

எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணி எண்ணி நெஞ்சத்தைப் புண்ணாக்கிக் கொண்டு விசுவம் நடைப் பிணம் போல் வீட்டை நோக்கி நடந்தான். வீட்டை நெருங்க நெருங்க இன்ன தென்று விவரிக்க முடியாத ஒரு வகைத் துயரத்திலாழ்ந்தான் அவன். அப்போது தெருவின் குறுக்கே ஒரு பூனை ஓடிற்று. "சகுனங்கள் பார்ப்பது, மூட நம்பிக்கையின் அறிகுறி" என்று கூறும் விசுவத்திற்கு அன்று மாத்திரம் ஏனோ நெஞ்சம் துணுக்குற்றது.

மழை பிசு பிசு வென்று தூறிக் கொண்டிருந்தது. வந்த வழியே திரும்பிச் சென்று விடலாமா என்று கூட யோசித்தான். ஆனால் மனதைத் திடப்படுத்திக் கொண்டு சாத்தித் தாழிடப் பட்டிருந்த வாயிற் கதவைத் தட்டினன். சிறிது நேரத்திற்கெல்லாம் முப்பத்தைந்து வயதென்று மதிப்பிடக் கூடிய ஒருவர் ஒரு கையில் ஹரிக்கேன் லாந்தருடன் உள்ளிருந்து வந்து கதவைத் திறந்தார். "நீ யாரப்பா?" என்று அவர் வினவினர். அவர்தான் தன் தமையனென்று உணர்ந்த விசுவம் நாத் தழுதழுக்க, "அண்ணா! நான்தான் விசுவம். என்னை மன்னித்து விட்டேன் என்று ஒரு வார்த்தை கூறுவாயா?" என்று சொல்லி விட்டு அவர் காலைத் தொட்டு கண்ணிலொற்றிக் கொள்ளக் குனிந்தான். அதற்குள் ராமநாதன், விளக்கைக் கீழே வைத்து விட்டு, "வேண்டாம் விசு, பதினைந்து வருஷத்திற்கப்புறம் உன்னைக் காண முடிந்ததே, அதுவே பெரும் பாக்கியம்" என்று கூறி, விசுவத்தின் கரங்களை அன்புடன் பிடித்துக் கொண்டார்.

"அப்பா எங்கே? அவர் என்னை மன்னிப்பாரா?" என்று விம்மல்களுக்கிடையே வினவினன் விசுவம்.

"அப்பாவா? அவர் நம்மை விட்டுச் சென்று விட்டாரடா, விசுவம். நீ வீட்டை விட்டு வெளியேறிய பின் உன்னைப்பற்றியே சதா சிந்தித்துக் கொண்டிருந்தாள் நம் தாயார். அவள் அதுகாரணமாகவே நோய்வாய்ப் பட்டுக் கடைசியில் இறந்து விட்டாள். அவள் சாகுந் தருணத்தில், 'உங்கப்பா முன் கோபி. ஆகையால், விசுவம் என்ருவது திரும்பி வந்தால், நீதான் அவனுக்குத் தாயும் தந்தையுமாயிருக்க வேண்டும்' என்று கூறினள். நான் அவ்விதம்

(57-ம் பக்கம் பார்க்க)

நெஞ்சிலே நெருப்பு

கௌசிகன்

மாப்பிள்ளைத் தோழனாகிய நான் அவனை விட்டு ஒரு நிமிஷமும் பிரியக் கூடாது என்று அவனுக்காக வந்திருந்த சாப்பாட்டை எனக்கும் பகிர்ந்து விட்டான் அங்கேயே. எல்லோரும் சாப்பிடச் சென்றிருந்ததால் வீட்டில் சந்தடியே இல்லை. வெங்குட்டு அவளைப் பற்றிய கற்பனையில் மூழ்கியிருந்தான். நானும் கற்பனையில் தான் மூழ்கி இருந்தேன். அதனால் அவன் அடிக்கடி அவளைப் பற்றி கேட்ட கேள்விகளுக்கு என்னால் சரியானபடி பதில் சொல்ல முடியவில்லை.

மாப்பிள்ளை அழைத்தாயிற்று. பெண் வீட்டார் சாப்பிட அழைத்து விட்டுப் போனார்கள். சாப்பாட்டிற்கு நானும் கிளம்பினேன். திடீரென்று வெங்குட்டு விடமிருந்து தடையுத்தரவு கிளம்பிற்று.

"ஏண்டாபழி...!நான்தான் நாளைக்கு அவளுக்கு அடிமையாகப் போகிறேன்; உனக்கென்ன? யோசனை பலமாக இருக்கே?"

"எனக்கு என்னவா? இன்

னும் கல்யாணம் ஆகவில்லை; அவ்வளவுதான்.''

"ஒஹோ...ஹோ...உனக்கும் பித்துப் பிடிச்சுடுத்தா... இரு இரு இங்கேயே ஒண்ணு பார்த்து முடிச்சுடரேன்.''

"வெங்குட்டு......அந்தமாதிரிப் பண்ணுவதா யிருந்தால் நாளைக்கு நான் ஒரு பெண்ணைக் காட்டுகிறேன்; அதைப் பற்றி விசாரி?''

"சபாஷ் பெண்ணையும் ஸெலக்ட் பண்ணியாச்சா? பலே பேர்வழியடா நீ.''

"நிச்சயார்த்தம் போது உங்க சம்மந்திங்க வீட்டுக்கு போயிருந்தேன் அல்லவா? அங்கு ஒரு பெண்ணைப் பார்த்தேன். அடடா...என்ன அழகு...என்ன அழகு. கருப்புத்தான். ஆனால் அந்தக் கண்கள்...'காது வரை நீண்டக் கண்கள்' என்று கவிகள் வர்ணனையைப் படித்திருக்கிறேன். ஆனால் இன்று தான் பார்த்தேன். அதன் சுழலில் ஆழம் காண முடியவில்லையடா? கயல் விழிகள்! சதா துரு துரு வென்று குறும்பு கக்கும் பார்வை. விழிகளைச் சுற்றி ஒரு கருமை. எடுப்பான மூக்கு; கபட மற்றப் புன் சிரிப்பை ஒதுக்கி வைத்திருக்கும் சிமிழ் போன்ற இதழ்கள். முத்துப் போன்ற ஒழுங்கான பல் வரிசை; விசாலமான நெற்றி. கடலலைப் போன்ற கூந்தல். காதோரத்தில் நெளிந்து கன்னத்தில் புரளும் அந்தப் பட்டுப் போன்ற கேசம்....''

"சரி.. சரி...டேய் முத்திப் போச்சு...வர்ணனை போதும் நிறுத்துடாப்பா!''

"வெங்கிட்டு நான் சொன்னது ஒன்றும் கற்பனை அல்ல. நாளைக்கு உனக்குக் காட்டுகிறேன் பார். பார்த்து விட்டு உன் கலியாணத்தை நிறுத்தும்படி சொல்லி விடாதே!'' என்றேன்.

"தம்பி பயப்படாதே!நான் ஏக பத்னி விரதன்!'' வெங்குட்டு என்னென்னவோ கேலி செய்து கொண்டருந்தான்.

என் சிந்தனை முழுவதையும் அந்தக் கருவிழிகள் ஆகர்ஷித்துக் கொண்டிருந்தன. இவ்வளவு அழகியை நான் கண்டதே இல்லை. அவள் மணமாகாதவளாகத் தான் இருக்க வேண்டும். இந்தக் காலத்தில் பதினெட்டு வயதிற்கு மேல் தானே கல்யாணம் செய்கிறார்கள். அவளுக்குப் பதினாறு வயதுதான் இருக்கும்.

இப்படி ஏதேதோ கற்பனைகளில் அன்றிரவைக் கழித்தேன். காலையில் அழகாக உடை உடுத்திக் கொண்டேன். என் உள்ளம் அவளைக் காணவும் அவள் கவனத்தைக் கவரவும் துள்ளிக் கொண்டிருந்தது.

கையில் நோட்டுடன் பென்ஸிலைத் தீட்டிக்கொண்டு கல்யாணப் பந்தலை அடைந்தேன். என்னைப் பற்றிச் சொல்லவில்லையே......நான் சித்திரக்காரன். கல்யாணக் காட்சிகளை என் நோட்டில் சிறை பிடிக்கத்தான் வந்திருந்தேன். கல்யாண வீட்டாரின் கவனத்தைக் கவருவது எனக்கு ஒரு பெரிய காரியமா என்ன? வெகு வேகமாக என் பென்ஸில் சுழன்றது. புதுப் புடவைகளின் சல சலப்புகள் எல்லாம் என் நோட்டில் இடம் பெற்று விட்டன! எத்தனை விதம்? நிற்பவர், உட்கார்ந்திருப்பவர், வம்பளப்பவர் பல கோணங்களிலிருந்தும் எல்லோரையும் சிறை பிடித்து விட்டேன். சாஸ்திரிகளைக் கூட விடவில்லை. சிறிது நேரத்தில் என்னைச் சுற்றி ஒரு கூட்டமே கூடி விட்டது. பல ஜோடி மான் விழிகள் என் பக்கம் திரும்பி இருந்தன. ஆனால் அவ்வளவிலும் ஒரு மருட்சி. "அடி, உன்னைப் போடறார்டி" என்பாள் ஒரு பெண். மறு நிமிஷம் என் சிறையிலிருந்து தப்பிப் பதுங்கி விடுவாள் அந்தப் பெண். சிறிது நேரத்திற்குள் பெண்களை வரைவது மிகுந்த கஷ்டமாகி விட்டது. ஒருவராவது சிறிது நேரம் அசையாது நின்றால்தானே? ஒவ்வொரு பெண்ணிற்கும் தங்களைப் போட வேண்டுமென்று ஆசைதான். ஆனால் காரணமற்ற ஒரு கூச்சம் அதற்குத் திரையிட்டுவிடும். எப்படியோ என் புத்தகம் நிறைந்து விட்டது! ஆனால் எனக்கு நிம்மதி ஏற்படவில்லை.

அந்த அங்கையற் கண்ணி அகப்படவில்லை. கூடத்தில் மின்னலென தோன்றி மறைவாள். என் மீது தன் விழிச் சுழலை வீசி விட்டு மறைவாள். அவசர அவசரமாக அவளை எழுத முயற்சிப்பேன். கூந்தல் போட்டிருப்பேன். சட்டென்று ஒரு மோகனப் புன்னகையை அள்ளித் தெளித்து விட்டு ஓடி விடுவாள். அவளை எழுத முயன்றதெல்லாம் முற்றுப் பெறாமல் அறை குறையாகவே நின்று விட்டன. அதற்கு நானும் ஓரளவு பொறுப்பாளிதான். அவளைக் கண்டதும் என் கை வழக்கம் போல் வேகமாக ஓடாது. அவள் கரு விழிகளையும், இதழுக்கடியில் ஒளித்து வைத்துள்ள குறும்புச் சிரிப்பையும், ஒய்யார நடையையும் கண்டு ஸ்தம்பித்து விடுவேன்.

என்னமோ அவள் மட்டும் என் புத்தகத்தில் இடம் பெறவில்லை. ஆனால் என் உள்ளத்தில் இடம் பெற்று விட்டாள்.

கை வலி கண்டது. புத்தகத்தை மூடிவிட்டு ஒரு இடத்தில் உட்கார்ந்தேன். பல கை

கள் என் நோட்டைப் பார்க்க ஆவலோடு நீட்டின. ஆசை இருக்காதா தங்கள் உருவத்தைப் பார்த்துக் கொள்வதில்? நோட்டு கைக்குக் கை மாறி பெண்கள் கூட்டத்தை அடைந்து விட்டது. நான் விரும்பியதும் அது தானே! அதுவும் அவள் பார்ப்பதை?

"அடி......... கமலாவைப் பாருடி தலையைச் சாச்சுண்டு அப்படியே......"

"இதோ கோமதி......உட்கார்ந்திருக்கிற லட்சணத்தைப் பாரேன்."

"ஐயையோ......சுப்பிப் பாட்டி தத்ரூபம்!"

"சீ அசடே, கல்யாண ஆத்திலே அவ் வார்த்தை சொல்லாதே." இது ஒரு கிழவரின் கண்டிப்பு.

இப்படி என் படங்களைப் பற்றிய விமர்சனம் நடந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு பெண்ணும் தங்கள் உருவத்தைப் பார்த்ததும் முகம் வெட்கத்தால் சிவக்கும். நோட்டை வெடுக்கென்று பிடுங்கி நன்ருக உற்றுப் பார்ப்பார்கள். மறு நிமிஷம் என் பக்கம் அவர்கள் கடைக் கண் பார்வை திருப்பும். என் மதிப்பு உயர்ந்தது. எனக்குப் பலமான உபசரிப்பும் நடக்க ஆரம்பித்தது. சாப்பாட்டிற்குப் பிறகு ஒவ்வொருவரும் தங்களைப் படமெழுத வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

"டேய் நீ படம் போட்டது போதும், மத்தியானம் நலங்கிலே என்னைப்பாடாய் படுத்திவைச்சுடுவா? உன்னை எனக்கு மாப்பிள்ளைத் தோழனுக் கூட்டிண்டு வந்தேனு? படம் போடவா? நலங்கின்போது என் பக்கத்திலே இருக்கணும்; ஆமா. அந்த நோட்டை இப்படிக் கொண்டா" என்று வாங்கி வைத்துக் கொண்டான் மாப்பிள்ளை.

மாலை நாலு மணிக்கு நலங்கு ஆரம்பமாயிற்று. தம்பதிகளுக்குள் அன்பை வளர்க்கவும், வெட்கத்தைப் போக்கவும் ஏற்படுத்தியுள்ள விளையாட்டுதான் அது. தம்பதிகளைச் சுற்றி ஒரே பெண்கள் கூட்டம். நான் மாப்பிள்ளையின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன்.

மணப் பெண்ணின் பக்கத்தில் அவள் வந்து உட்கார்ந்ததும் எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. இப்போது நானும் அவளும் எதிரி! நான் மாப்பிள்ளை பக்க மல்லவா? முதலில் அவள் மணப் பெண்ணைக் கொண்டு மாப்பிள்ளையைப் படாத பாடு படுத்தி வைத்தாள். நானும் சளைக்கவில்லை! அப்பளத்தைப் பெண்ணின் தலையிலே நொறுக்கும்படி மாப்

பிள்ளைக்கு உத்திரவிட்டேன். கன்னத்தில் மஞ்சளை அப்பச் சொன்னேன். நெற்றியில் பெரிய பொட்டிடச் செய்தேன். கண்ணுடியை பின் பக்கமாகத் திருப்பிக் காண்பிக்கச் செய்தேன். செண்டாடும்போது ஏக வேடிக்கை! பெண்ணும் மாப்பிள்ளையும் எங்களிடம் அவஸ்தைப்பட்டார்கள். எங்களுக்குள் போட்டி பலமாயிற்று. எனக்கு அது இன்பமாக இருந்தது.

என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அவள் பாட ஆரம்பித்தாள். ஆகா என்ன இன்பமான நாதம்! பாரதியாரின் காதல் பாட்டுக்களை எல்லாம் பொழிந்து தள்ளினுள். நான் மெய் மறந்தேன்.

என் மனதில் ஆசையும் பாசமும் அலைமோத ஆரம்பித்தன. இன்னும் ஐந்து வருஷம் கழித்துதான் கல்யாணம் செய்து கொள்வதென்று நான் செய்திருந்த சபதம் மெதுவாக வலுவிழக்க ஆரம்பித்தது. சதா அவள் உருவம்; அந்தப் புன்னகை; அந்த விழிகளின் சுழல்தான் என் முன் நர்த்தனமாடியது. என் ஒவ்வொரு பேச்சையும் அசைவையும் அவள் ரசிக்கிருள் என்பதை எண்ணியபோது என் உடல் குதூகலத்தால் பூரிக்கும். மணந்தால் எப்பாடு பட்டாவது அவளைத் தான் மணக்க வேண்டும் என்றிப்படி எல்லாம் அசட்டு எண்ணங்களில் மூழ்கி இருந்த என் தலையில் இடி விழுந்ததுபோல் இருந்தது அந்த சம்பவம்.

இரவு ஊர் வலத்திற்குப் பின் ஊஞ்சல் நடந்து கொண்டிருந்தது. பெண்கள் இனிமையான சங்கீதத்தைக் குழைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இரவு மணி இரண்டுக்கு மேல் ஆகிவிட்டது. தூக்க மயக்கத்தோடு அவள் நினைவுடன் எங்கோ சஞ்சரித்துக் கொண்டிருந்தேன்.

ஒரு கிழவரின் குரல் அதிர்ந்தது.

" ராமனு தா.........உன் ஆத்துக்காரியைப் பாடச் சொல்லுடா...!" இதனாலும் நான் கற்பனை மயக்கத்திலிருந்து அசையவில்லை. ஆனால்......

அந்தக் குரல் கேட்டதும் துள்ளி எழுந்தேன்.

"தொண்டையை வலிக்கிறது...... நலங்கின்போது ரொம்பப் பாடி விட்டேன்" என்று மூலையிலிருந்த ஒருவனைப் பார்த்துச் சொல்லிக் கொண்டிருந்தாள் **அந்தக் கருவிழியாள்**. என் தலை சுற்றியது. எங்கோ கீழே கீழே போய்க் கொண்டிருப்பது போன்ற தொரு உணர்ச்சி ஏற்பட்டது.

நெஞ்சை என்னமோ செய்தது. பரபரப்புடன் அருகிலிருந்தவரைக் கேட்டு சந்தேக நிவர்த்தியும் செய்து கொண்டேன். "அவர் மனைவியா அந்தப் பெண்?" அந்தப் பாவியும் 'ஆமாம்' என்ருர். மறுபடி அவளை பார்க்க என் கண்கள் கூசின. என் உடல் பதறிக் கொண்டிருந்தது. அதற்குள் அவள் பாட ஆரம்பித்து விட்டாள். அவள் குரலை என்னல் கேட்க முடியவில்லை. சரேலென்று அங்கிருந்து எழுந்தேன். வெளிச்சத்தில் நிற்கக்கூட என் மனம் கூசிற்று.

ஐயோ, எத்தகைய தவறு செய்து விட்டேன். அவள் அழகில் மயங்கிப்போய், அவள் விழிச் சுழலில் அகப்பட்டு கழுத்தைப் பார்க்காமல் இவ்வளவு தூரம் மனதில் அலைபாய விட்டேனே......... அவள் கழுத்தில் நெளியும் அந்த நாக சர்ப்பம் ஏன், என் கண்களில் படாமல் போயிற்று?

ஆம், அவள் மணமாகாதவள் என்ற எண்ணம் என் உள்ளத்தில் வளர்ந்து விட்டது. அதைப் பற்றிய எண்ணமே என் மனதில் எழவில்லை. என் அந்த நிலையில் அதை நான் எதிர் பார்க்கவில்லை. ஏன், விரும்பவுமில்லை. என் கற்பனை என் கண்களை மறைத்து விட்டது.

ஐயோ, எவ்வளவு பயங்கரமான செய்கை! அவள் கணவன்......அவன் உருவம் என் முன் வந்தது. காலையிலிருந்து என்னேடிருந்து என் படங்களை ரசித்துக் கொண்டிருந்தான் அவன். ஆனல் அவனுக்கும் அவளுக்கும் கொஞ்சமாவது பொருத்தம் உண்டா? அவன் இளைஞன் தான். ஆனல் அழகின் அணு கூட அவனிடம் இல்லை. புத்தானில்லாத கசங்கிய அரைக்கைச் சட்டை. ஒட்ட வெட்டிய சம்மர் கிராப். அசடு வழியும் முகம்.

அவன் ஒரு தாலூகா ஆபீஸ் குமாஸ்தா. அவனுக்கு அங்கையற் கண்ணி மனைவி!

என் உள்ளம் குமிறிற்று. இப்போது உண்மை விளங்கியது. அவள் கணவன் என்னேடு இருந்ததினல்தான் அவள் அடிக்கடி என் பக்கம் தன் விழிகளை வீசி இருக்கிருள். புன்னகையை அவிழ்திருக்கிருள். ஆனல் அவைகள் எனக்காக அல்ல! எப்போதும் சிரித்த கண்கள், புன்னகை ஒளிந்த அதரங்கள். அவளுக்கு அது இயற்கை அளித்த வரம். **நான்தான் அவைகளைத் தப்பிதமாக கற்பனை செய்து கொண்டுவிட்டேன்.**

நம் இந்தியப் பெண்கள் கல்லானலும் கணவன் என்ற மன உறுதி கொண்ட கற்பரசிகள் அல்லவா? இவள்

(50-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதாக வாக்களித்த பின் தான் அவள் நிம்மதியாக உயிர் நீத்தாள். அதன்பின் ஒரு வருஷத்தில் அப்பாவும் இறந்து விட்டார்" என்றான் ராமநாதன்.

விசுவம் விக்கி விக்கி அழழானான். ஆனால் ராமநாதன் "அம்மாவின் வேண்டுகோளை நிறைவேற்றும் பாக்கியம் இதற்குள் கிடைக்குமென்று நான் நினைக்கவேயில்லை" என்று உரைத்து விட்டுத் தம்பியை அணைத்துக் கொண்டான். பதினைந்து வருடங்கள் பஸ் கண்டக்டராகத் திரிந்த விசுவத்திற்குத் தன் அண்ணனின் அன்பு ஆறுதலளித்தது.

(38-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் அதற்கு விலக்கா என்ன? நான்தான் தவறி விட்டேன்.

எப்படியானால் என்ன, அவள் என் நெஞ்சிலே நஞ்சூட்டி விட்டாள். என்ன செய்தும் அவள் விழிகளின் அழகை என்னால் மறக்க முடியவில்லை. வேறு ஒருவனை மணந்துகொண்டு அவனோடு வாழ்க்கை நடத்தும் ஒருவளைக் காதலிக்க எனக்கு உரிமை உண்டா? ஆனால் உணர்ச்சி உரிமையைப் பற்றி சிந்திக்க மாட்டேன் என்கிறதே! அவள் உருவத்தை என் உள்ளத்திலிருந்து அகற்ற முடியவில்லையே. அதே மனம் "அவளை இனி நினைக்காதே. அது பாபம், மறந்து விடு" என்றலறுகிறது ஒரு புறம். என் காதல் பாபம் எனக்கும் தெரியத்தான் செய்கிறது. ஆனால்.........

இடிந்து போய் இருட்டில் உட்கார்ந்திருந்த என்னை உலுக்கி "என்னடா......... பாதியில் பைத்தியம் போல எழுந்து வந்து இங்கு உட்கார்ந்திருக்கிறாய்?" என்றான் என் நண்பன்.

என் உள்ளச் சுமையை; குமுறலைப் பகிர்ந்து கொள்ள அவனைத் தவிர எனக்கு வேறு யாரிருக்கிறார்கள்?

"வெங்குட்டு அந்த அங்கையற்கண்ணி என் நெஞ்சிலே நெருப்பை வைத்து விட்டாளடா" என்றேன் குமுறலுடன்.

(சிறந்த மனம் தொடர்ச்சி)

எங்கே சென்றிருப்பாள்? அவள் காரில் சென்றது.....? சொந்த ஊருக்குச் சென்று விட்டாளா? சே.........? இல்லை; வீட்டில் வேலைக்காரி, தோட்டக்காரன், வேறு இரண்டு பேர் முதியவர்கள் இருக்கிறார்கள்; கேட்டுத் தெரிந்து கொண்டால் என்ன? ஊம்....... வேண்டாம்..........அவள்

சொல்லிக் கொடுத்து விட்டால்......? அவள் அப்படி குழந்தையுடன் கூடத்திற்கு ஓடிச் சென்ருளே, நாணத்தால் அப்படிச் செய்தாளா, அல்லது......கோபித்துக் கொண்டு விட்டாளா........ என்னவோ .....என் மனம் என்னவெல்லாமோ யோசனை செய்தது......அவளும் அப்படித்தான் அவதிப்படுகிருளோ யார் கண்டார்கள்? என்றெல்லாம் என் மனம் எண்ணமிட்டது.

நாட்கள் ஒன்றன் பின் ஒன்ருக ஓடி ம்றைந்தன. அன்று நான் அறையில் தினசரி படித்துக் கொண்டிருந்தேன். ஒரு விளம்பரம் என்னை அப்படியே அங்கலாய்த்து விட்டது. என்ன! என் கண்களை என்னல் நம்ப முடியவில்லை......ஆம்! நான் காணும் போட்டோ அவளுடையதுதான். ஆம், அப்படியானல் அவள் சினிமாவிலா நடிக்கிருள்? இவளைச் சுற்றி என் ஆசை வட்ட மிட்டதே......சினிமா நடிகை என்ருல்தான் என்ன? துர்நடத்தை இருப்பதாக நமக்கு ஒன்றும் தெரியவில்லையே. என் சினிமாவில் நடிப்பவர்கள் குலக் கொழுந்துகளோ? நடிகைகளை நாம் எப்படி நம்புவது? என் மனத்தில் ஒரே போராட்டம்.

* * *

அவளை வெறுக்கிறேன். ஆனல் அதே சமயம் அவளை நேசிக்கிறேன். அனுதாபப்படுகிறேன். அவள் விஷயங்களில் தலையிடத் தோன்றுகிறது. அவளை மறுமுறைக் காணத் தூண்டுகிறது என் மனம்.

ஒரு படத்தில் நடனமாடினுள். அதன் காரணமாக வேருென்றில் நடித்தாள்.........விவாகப் பருவம் வந்து விட்டாள்......இல்லை, தாண்டுகிருள். விவாகம் செய்து கொள்ள அவள் மனம் தூண்டுகிறது. தவறு உணர்ந்தாள். பொதுஜனம் அவளை இகழ்கிறது. நடிகை நடிகர்களைத்தான் மணந்து கொள்ள வேண்டுமோ .....? என்று என்னிடம் கேட்டு பதிலுக்கு மன்ருடினுள். இதன் மர்மம், அவள் குடும்ப புருஷர்களை மணந்து கொள்ளக் கொதிக்கிருள் என்பதே! ஹா! எவ்வளவு சுத்தமான மனப் போக்கு! சினிமாவை வெறுக்கிறேன் என்று என்னிடம் எத்தனை தடவை எடுத்துக் கூறினுள்......பாவம், பேதை...

பித்தனைப் போல் நித்தியத் தொழிலை நான் செய்து வருகிறேன். ஆனல் என் செயல்களில் எனக்கு ஸ்திரமான நம்பிக்கை இப்பவும் இல்லை. வெறுப்பு........விருப்பாக பரிணமிக்குமோ என்னமோ யார் கண்டது!

விடுதலை

"அரசு"

காலை ஏழு மணி. திண்ணையில் அமர்ந்து அன்று வந்த செய்தித் தாளொன்றைப் படித்துக் கொண்டிருந்தேன் தமக்கென இருப்பிடமில்லாத—யாதும் ஊராகவும் யாரும் உறவினராகவும் எண்ணியலைகின்ற—எவராலும் இன்முகமாகவேனும் ஏற்றுக் கொள்ளப் பெறாத தம்பதிகள் இளமையும் வறுமையும் உடைமையாகக் கொண்டவர்கள்—தம் அன்றாட உணவிற்காக வீடு வீடாக நிற்பவர்கள் இருவரைத் தெருவிலே கண்டேன். அவன் கையில் ஏதோவொரு கஞ்சரா, அவள் வலக்கையில் ஒரு சிறு தம்புரா, இடக் கையிலே தோளிலணைத்தவாறு சிறு பச்சைக் குழந்தை—இக் கோலத்துடன் சென்று கொண்டிருந்தனர்.

அவன் கஞ்சராவை முழக்கிக் கொண்டு தொடங்குவான். அவள் தன் இசைக் கருவியை மீட்டியவாறு தொடர்ந்து பாடுவாள். ஒருவர் தொடருவதை மற்றவர் முடிப்பதும் உண்டு. கேட்பவர்கள் தம்மை மறக்கும் இனிய இசை. ஆனால், எளிய இடத்திலே 'கூழுக்குப் பாடுவது!'

அவள் அவனை நடையிலே தொடர்ந்தாள்; பாட்டிலே தொடர்ந்தாள்; உள்ளத்திலும் தொடர்ந்தாள் என்றே எண்ண வேண்டியிருந்தது. வறுமையிற் செம்மை யென்பது இந்த நிலைதானோ? கவலையற்ற முகம்! சிலர் கூறுமாறு போல அரிசி விலையறியாத நிலை! அழகிய அரண்மனையாலும், புரளுஞ் செல்வத்தாலும் அடையும் இன்பத்தையுங் கூட அந்த நாடோடிகள் தம் ஒத்த மனத்தால் உவப்புடன் பெற்றார்கள் எனலாம்.

அவர்கள் இசையிலே ஈடுபட்ட சிறுவர்கள் பின் தொடர்ந்து சென்றனர். இல்லறத்தோர் தம்மையும் மறந்து இந்தப் பங்கீடு காலத்திலும் உணவளித்தனர்.

"இரந்தும் உயிர்வாழ்க
வென்னிற் பரந்து
கெடுக உலகியற்றியான்"

என்ற வள்ளுவரும் இவர்களைக் கண்டாரானால், "இரப்பும் ஓர் அழகுடையது" என உரைப்பாரென்பது திண்ணம்.

இவர்களைக் கண்டவுடன் என்னுள்ளம் படிப்பிலே பற்றாமல் உள்ளத்தினடியிலே உறங்கிக் கிடந்த—கருத்தை

யுருக்கும்—என் நண்பன் கண்ணப்பனுடைய வாழ்க்கைப் படத்திலே ஓடியது.

2

கண்ணப்பனுடைய காதல் ஓவியத்தின்—வாழ்க்கைத் துணைவியின் பெயர் கண்ணம்மாள். பெயர்ப் பொருத்தம் போலவே உளப்பொருத்தமும் ஒன்றியிருந்தது. புலவர்கள் புனைந்துரைப்பது போல—மலரும் மணமும், கதிரும் ஒளியும், உடலும் உயிரும், யாழும் இசையும் போல—இசைந்து வாழ்வை நடத்தினர். அழகும், அறிவும், பண்பும் ஒத்த அவர்கள் மற்றோருக்கெடுத்துக் காட்டாக வளங்கினர். அவர்களுடைய காதற் படகு சில நாட்கள் வரையில் நாட்டுப் பணி யென்னும் இன்பக் கடலிலே எத்தடையுமின்றி யினிதே சென்றது.

அவர்கள் படகு உரிமையுலகை—சுதந்திர நாட்டை—அடைவதற்கு முன் காலப் பாறையிலே மோதித் துகளான நிகழ்ச்சிதான் என் அகத்திலே திரை யிட்டது! எவ்வளவோ படகுகள்—எண்ணிலடங்காத படகுகள் — இவ்வாறு உரிமையுலகை யடையுமுன் இது போன்ற பாறைகளில் மோதியும், சுரு மீனலடியுண்டும், சுழலிற் சிக்கியும், புயலிற் கவிழ்ந்தும் போயிருக்கின்றனர்.

கண்ணப்பனும், கண்ணம்மாளும், நானும் கல்லூரித் தோழர்கள். நாளடைவாகப் பழக்கத்தினு லரும்பிய காதலின் விளைவாகவே அவர்கள் வாழ்க்கை ஒப்பந்தம் நேர்ந்தது. எப்போதும் அவ்விருவரும் என் கண்கள். கல்லூரிப் படிப்பிலே எப்படிப் பிரிக்கவியலாமற் பிணை பட்டோமோ அவ்வாறே வாழ்க்கைநெறியிலுந் தொடர்ந்தே சென்றோம். என் நண்பன் நாட்டுப் பணியின் நலத்தை நவிலாத நாளே யில்லை. அவன் துணைவியும் அந்தப் படிப்பினையிலே பங்கெடுத்துக்கொள்வாள். நான் பல முறை அஞ்சி விட்டேன். அந்த அச்சத்திற்கு வழியே யில்லாமற் போய் விட்டது. என் உள்ளப் பாறை அவர்கள் இருவரும் மாறி மாறி யடித்த சம்மட்டியாலே சிறிதுந் தளர்ந்ததில்லை! என் மனவுறுதி வாழ்க! என்னைப் படைத்த இறைவனாலும் முடியாத ஒன்றைச் சிற்றறிவுடைய மக்களோ செய்துவிடுவர்? வயிற்றுப் பணியே மாப்பெரும் பணியாக என்னைக் கட்டிப் பிடித்திழுத்துச் செல்லும்போது நாட்டுப் பணியிலே, நானெங்ஙனம் அடியெடுத்து வைப்பேன்?

3

வழக்கம் போல ஒரு நாள்—அன்று விடுமுறை—நடுப்பகலில் அங்குச் சென்றேன். அவன் சுறு சுறுப்பாக ஒரு மணி வண்டிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். எங்கு ஏன் என்று வினவுவது நன்றல்லவென்று பேசாமல் அவன் முகத்தை நோக்கினேன். அவன் நகைத்தான். அவள்—அருகில் நின்று கொண்டிருந்த அவன் வாழ்க்கைத் துணைவி "இன்று ஆகஸ்டு பதினைன் கல்லவா? ஜோலார் பேட்டைக்கு" என்றாள். எனக்கு விளங்கியது. உங்களுக்கும் ஆகஸ்டு பதினைந்து விளங்காததன்று.

என் உள்ளத்தில் இருந்த மகிழ்ச்சியை யாரோ கவர்ந்து கொள்வது போலிருந்தது. சிறிது நடுங்கினேன். அது முகத்திலே தோன்றாமல் ஒருவாறு அடக்கிக்கொண்டேன். நண்பர்களோடு அளவளாவுவதிலும் வேறு இன்பமுண்டோ? அந்த இன்பத்திலே இடி விழுந்தது போன்ற உணர்ச்சி. 'பிரிவினும் சுடுமோ பெருந் தீ?'

அவன் என் நிலையை உணர்ந்து நகைத்தான்.

"என்னடா, செல்லப்பா! பெண்போல நடுங்குகிறாய்? அவளைப் பார்! அவள் பெண்ணாக இல்லாமல் வீரத்துடன் வழி விடுகிறாள். நீ ஆணாக இல்லாமற் பேதைமைப்படுகிறாய்!"

நான் கூறினேன்:

"இது மட்டுந்தான் நாட்டுப் பணியா? இந்த இளமைப் பருவத்திலே, இன்ப வாழ்வை விட்டுத் துன்பத்திலே தோய்வதுதான் ஏற்றதா? அறிவில்லாத மக்களுக்கு அறிவூட்ட முதியோர் கல்வி முதலிய தொண்டில் ஈடுபடலாகாதா? கண்ணை மூடிக்கொண்டு காட்டு வழி செல்வதுதான் வீரமா?"

அவன் முகம் சிவந்தது.

"போதும், நிறுத்து! அடிமை வாழ்விலே அல்லலுறும் நாட்டிலே கல்வி எப்படி வளரும்? அப்படியே வளர்ந்தாலும் அடிமைக் கல்விதானே அமையும்? நோய் கொண்ட குடும்பத்திலே பிறக்கும் குழந்தை வலிமை பெற்றிருக்குமா? இப்போது கற்றவர்களெனப் படுவோரில் எவ்வளவு பேர் நாட்டுக்குப் பலனளிப்பவர்களாக இருக்கிறார்கள்? ஏழைகள் உழைத்துக் கொடுக்கும் வரிப் பணத்தாலே அவர்களையே சுரண்டும் அநாகரிகக் கல்வியையன்றி, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற

உண்மை யுணர்வை யெழுப்பும் கல்வியைக் கற்றவர் எவ்வளவு பேர்? அடிமை வாழ்வி லிருந்து நீங்கின பிறகே உண்மைக் கல்வி—நலந்தரும் கல்வி—பிறக்கும். என்ன? போய் வருகிறேன்!''

''நானும் வருகிறேன்.''

''எதற்கடா? நாட்டுப் பணியிலே நம்பிக்கை பிறந்து விட்டதா?''

என் முகம் நாணத்தாற் சிவந்தது. மெல்லக் கூறினேன்.

''உன்னைப் புகை வண்டியிலேற்றிவிட வருகிறேன்.''

அவனும் அவளும் நகைத்தார்கள். அவள் முகத்தை நோக்கினேன். கண்களில் நீர் நிறைந்திருந்தது. இதழ்கள் துடித்தன. எனினும், புன்முறுவலுடனே தன் கணவன் நெற்றியிலே வீரத் திலகமிட்டு வணங்கினள். அப்போது பழந் தமிழ்ப் பெண்களைப் பற்றிப் புற நானூற்றிலே கூறப்பட்டிருக்கும் காட்சி என் நினைவிலே எழுந்தது. மெய் சிலிர்க்கிறது இப்போதும்!

4

ஆகஸ்டு பதினைந்து வந்தது. எங்கும் ஒரே கொந்தளிப்பு! உரிமைத் தீ பரவியது! வீர இளைஞர்களின் மனவெழுச்சி! அரசியலார் நம் கண்ணை நம் கையாலேயே பொத்தினார்கள். போலீஸைக் கொண்டு சிறைப்படுத்தினர். நாட்டின் அரும் பெருந் தலைவர்களே சிறையி லிருக்கும்போது, நமக்குச் சிறை துரும்பென்று நினைத்து எல்லோரும் சென்றனர் சிறைக்கு. தலைவர்களிருக்கு மிடமன்றோ உரிமையொளி வீசுமிடம்? அவர்களில்லாத இடமன்றோ இருண்ட சிறை? நாட்டிலே உண்டான புண்ணை ஆற்றாமல் அதனை மேலும் பரப்பினார்கள் அரசியலார்! உரிமைப் பசிக்குக் கவலை கொடுத்து வீசினார்கள்! உள்ளக் கிளர்ச்சியை சிறைச்சாலையா தடை செய்யும்? நண்பன் கண்ணப்பனும் சிறை சென்றதாக அறிந்தோம். அவன் வாழ்க்கைத் துணைவி தன் ஒன்றுவிட்ட அத்தையைத் துணைக்கு வைத்துக் கொண்டு, தன் கணவன் வருகையை 'வழி மேல் விழி வைத்து'—உள்ளம் வைத்துக் காத்துக் கொண்டிருந்தாள்.

5

பதினைந்து நாட்கள் பறந்தன. ஆகஸ்டு முப்பத்தோராவது நாள்! கண்ணம்மாளிட மிருந்து ஆளொருவன் வந்தான். விரைவில் அழைப்பதாகக் கூறினான். ஓடி

னேன். ஏதாவது பொருள் களவு போய் விட்டதோ என்று படபடத்தது உள்ளம்.

கண்ணம்மாள் கண்ணீர் கலங்க நின்று கொண்டிருந்தாள்! குடி போன வீடு போலத் தோன்றினள். திடுக்கிட்டேன். வேலைக்காரன் மேஜை மீதிருந்த ஒரு தந்தியை யெடுத்துக் கொடுத்தான். அத் தந்தியைக் கண்டதும், என்னுடம்பும் தந்தி யடிக்கத் தொடங்கியது. என் உயிரை யாரோ பற்றி யிழுப்பது போலுணர்ந்தேன். தந்தியிற் கண்டது இதுதான்.

"கண்ணப்பன் பார்க்க விரும்புகிறார். உடல் நிலை ஒரு மாதிரி. உடனே வருக!"

சிறைச்சாலை மேற்பார்வை யாளர் அனுப்பி யிருந்தார் தந்தி. சிறைச்சாலை யிருந்த விடம் எழும்பூர். தனி மோட்டாரில் நானும், கண்ணம்மாளும் காரெனக் கடிது சென்றோம். உளம் நடுங்க, மெய் நடுங்க, என்ன நிலையிற் காண்போமோ என்று கலங்கிக் கொண்டே சென்றோம். ஒருவரோடொருவர் பேச வில்லை. என்ன பேசுவது? உள்ளத்தின் உணர்ச்சி வாயைப் பூட்டி விட்டது. ஊரை யடைந்தோம். சிறைச்சாலையைக் கேட்டுத் தெரிந்து கொண்டு போய்க் கண்டோம் நடைப் பிணம் போல என்று சுருக்கமாய்க் கூறுகிறேன். சிறைச்சாலையைச் சார்ந்த மருத்துவக்கூடம் ஒன்றிற் கட்டிலின் மேற் கண்ணப்பன் படுத்திருந்தான். மண்டையிலே கட்டு! உடம்பிலே வற்றல்! கண்களிலே தெளிவான ஒளி! முகத்திலே புன்னகை! கை குவித்து வரவேற்றான். நான் கல்லாய்ச் சமைந்து நின்றேன். கண்ணம்மாளின் முகத்தைப் பார்க்கவுங் கூடவில்லை. மெதுவாகச் சென்று கணவன் பக்கத்திலே அமர்ந்தாள். நான் ஒரு நாற்காலியிலே அமர்ந்தேன். ஒரு நிமிஷம் எல்லோரும் வாய் பேசாமல்—உணர்ச்சியாற் பேசிக் கொண்டே—இருந்தோம்.

அவனே மெதுவாகப் பேசத் தொடங்கினன்.

"செல்லா! எனக்கு விடுதலை கிடைத்து விட்டது!" என் உள்ளம் மகிழ்ந்தது.

"அப்படியே உன்னை மோட்டாரில் வைத்துக் கொண்டு போய் விடுகிறோம். விரைவிலே உடல் நலம் பெறுவாய். அப்புறம் இந்தத் தொல்லையிலே தலை யிட வேண்டாம்."

அவன் முகத்திலே புன்னகை பூத்தது.

"நீ நினைப்பதினும் மேலான விடுதலை! முழு விடுதலை!"

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அதற்குள் சிறைச்சாலைத் தலைவர் வந்தார். எங்களை அறிமுகஞ் செய்து கொண்டார். அவர் முகம் வாடியது. துக்கத்துடன் மெல்ல மெல்ல நிகழ்ந்ததைக் கூறினார்.

கண்ணப்பன் உண்ணு நோன்பு மேற் கொண்டாலும், வற்புறுத்தி உண்பித்தாலும் ஏற்றுக் கொள்ளவில்லையாம். தலையிலுண்டான காயம் நடந்து வரும்போது தவறி விழுந்ததால் உண்டானதாம்.

எனக்குச் சின முண்டாயிற்று. "ஒருவர் சிறையிலே உண்ணு விரதம் மேற்கொண்டால், உற்ருருக்கும் தெரிவிக்கக்கூடாதா?" என்றேன்.

அவர் வருத்தத்துடன், "நேற்றுத்தான் உண்மையான இருப்பிடத்தைக் கூறினார். உடனே தந்தி யடித்தேன்" என்ருர்.

நண்பன் புன்முறுவலுடன், "அவர்மேல் என்ன குறை? எல்லாம் என் வேலைதானே? இந்த நிலையை வேண்டிப்பெற்றேன்! ஓராசைதான் காரணம், நாட்டுக்காக உயிர்விட........."

அதற்குமேல் அவன் பேசவில்லை. கை குவித்து மேல் நோக்கினன். கண்ணம்மாள் தன் நடுங்கும் கைகளால் அவன் கைகளைப் பற்றினள். அப்போது இருவர் முகத்திலும் விளக்க முடியாத ஓரமைதி நிலவியது. அவன் இதழ்கள் முணுமுணுத்தன. கண்கள் அவளை நோக்கின. அவள் தன் முகத்தை அவன் முகத்துடன் சேர்த்தாள். அவ்வளவுதான்! இருவர் உயிரும் ஒன்ருகவே பிரிந்தன! அவன் கூறிய விடுதலை அதுதான்! "சாவிற் சாதல்" என்னுந் தொடர் என் நினைவிற்கு வந்தது.

6

திரும்பவும் நினைவின் உலகத்திற்கு வந்தேன். அந்த இரண்டு பிச்சைக்காரத் தம்பதிகளின் தொடர்ந்த பாட்டு அடுத்த தெருவிலே கேட்டது. கண்ணைத் துடைத்துக் கொண்டு செய்தித்தாளிலே ஆழ்ந்தேன்.

மீரா ஓவியம் 'ஸுபா'



மைதிலி ஜகந்நாதன்

கடியாரத்தில் பத்து மணி 'டன், டன்' என்று அடித்து ஓய்ந்தது. மேஜையின் மேல் மடித்து வைக்கப்பட்டிருந்த வெற்றிலையை யெடுத்து வாயில் போட்டுக் கொண்டு, கோட்டை மாட்டிக் கொண்டான் ஜஙந்நாதன். வீடு நிசப்தமாயிருந்தது. குறுக்கும், நெடுக்கும் நடக்கும் அவளுடைய மெட்டி ஓசை வழக்கம் போல் கேட்கவில்லை. அவன் ஆபீஸிற்குப் போகும் வரை தொண, தொணவென்று பேசி தலைவலி உண்டாக்கும் அவள் அன்று சமையலறையை விட்டு வெளிக் கிளம்பவில்லை. கூடமாட சட்டை, வேஷ்டிகளை யெல்லாம் எடுத்து உதறிக் கொடுக்கும் மைதிலி அன்று அவ்விடத்தில் காணவில்லை! ஜகந்நாதனுக்கு ரொம்ப ஆச்சர்யமாயிருந்தது. மூச்சு, பேச்சில்லாமல் சமையலறையில் என்ன செய்கிறாள்? கோபம், தாபம் ஒன்றுமில்லையே? என்ன காரணம்? என்று யோசித்துக் கொண்டே மேஜையின் மேல் வைத்திருந்த பேனாவைத் தேட ஆரம்பித்தான். அவன் பேனாவைக் காணோம்! "மைதிலி! வ, மைதிலி!" என்று நாலு வீடு காது கேட்கும்படியாய் கூவினான். பதில் வரவில்லை. ஆபீஸிற்குப் போகிற அவசரத்தினாலும், பேனாவைக் காணோமென்கிற கோபத்தி

ஞலும் மைதிலி அழகாய் அடுக்கி வைத்திருந்த புஸ்தகங்களை யெல்லாம் தாறுமாருய்க் கலேத்தான். மைதிலியிடமிருந்து பதில் வராமல் போகவே சமையலறைப் பக்கம் சென்று எட்டிப் பார்த்தான். இவன் காணவில்லை யென்று தேடிக் கொண்டிருந்த பேஞவை வைத்துக் கொண்டு மைதிலி வெகு மும்முரமாக என்னவோ எழுதிக் கொண்டிருந்தாள். "ஆபீஸிற்குப் போகிற சமயத்தில் என் பேஞவை 'எடுத்து வைத்துக் கொண்டு என்ன எழுதுகிருய்? என் தங்கமான பேஞவை குட்டிச் சுவராய் செய்துவிடு! அதற்குத் தலையை வலிக்கிறது. அதஞல் தான் உன் கையில் அகப்பட்டுக் கொண்டது! உங்கள் அப்பாவிற்குக் கடிதம் எழுத பென்ஸில் போதாதோ? இங்கே கொண்டா, அதை!" என்று சற்று ...மான குரலில் அவளை மிரட்டிஞன். மைதிலி உட்கார்ந்தவாறே அவன் மிரட்டலுக்குக் கொஞ்சமும் பயப்படாமல், "இந்த பேஞ எனக்கு வேணும்! நீங்கள் வேறு வாங்கிக் கொள்ளுங்கள், உங்கள் தங்கமான பேஞவை நான் தங்கம் போல் பார்த்துக் கொள்கிறேன்!" என்று சிரித்துக் கொண்டே அவன் கோபத்தை யெல்லாம் விரட்டிஞள். ஜகந்நாதனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளுடன் தர்க்கம் செய்து கொண்டிருக்கவும் நேரமில்லை. அவள் என்ன எழுதிக் கொண்டிருக்கிருளென்றும் தெரியவில்லை. எது எப்படி யிருந்த போதிலும் அவனுக்கு இப்பொழுது பேஞ அவசியம். "இன்னொரு பேஞ வாங்கிக் கொள்கிற வரை இதை என்னிடம் கொடுத்து வை. அப்புறம் உன்னிடம் இதைக் கொடுத்து விடுகிறேன். நீ என்ன எழுதிக் கொண்டிருக்கிருய்?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தான். ஆஞல், மைதிலி தான் எழுதிக் கொண்டிருந்ததை மறைத்து விட்டாள். "அதை இப்பொழுது சொல்ல மாட்டேன். இந்தாருங்கள், பேஞ!", என்று பேஞவை அவனிடம் கொடுத்தாள். "நீ காண்பிக்கா விட்டால் எனக்குத் தெரியாதா? உங்க அம்மாவிற்குத்தான் வரிந்து வரிந்து எழுதுவாய். மாப்பிள்ளை படுத்துகிற பாடும் நீ அடங்கி ஒடுங்கி ஹம்ஸம் போல் நடந்து கொள்கிற ஒழுங்கையும் விவரித்து பக்கம் பக்கமாய் எழுதித் தள்ளுவாய்! வேறு என்ன உனக்கு எழுத தெரியும்? அதற்குப் புது பேஞ வேருு.........!", என்று கேலி செய்து

கொண்டே அவ்விடத்தை விட்டுக் கிளம்பினன். மைதிலி ரொம்ப அழுத்தலாய் சிரித்துக் கொண்டு, "ஏதேனும் சொல்லிக் கொண்டிருங்கள்! எல்லாம் பின்னல் தெரியும். இப்பொழுது பரிகாசமாய்த் தானிருக்கும்." என்ருள். அவள் செய்கையொன்றும் ஜகந்நாதனுக்குப் பிடிபடவில்லை. "என்ன எழுதுகிருள்? சொந்தத்திற்குப் பேஞவேறு வேண்டுமென்கிருளே! அப்பா, அம்மாவிற்குக் கடிதம் எழுதுவதைத் தவிர வேறு என்ன எழுதத் தெரியும் இவளுக்கு! " என்று யோசித்துக் கொண்டே ஆபீஸிற்குச் சென்ருன். ஆபீஸில் சரியாய் வேலை ஓடவில்லை. மைதிலிதான் எழுதியதை மறைத்தது அவள் ஆவலை அதிகமாய்க் கிளப்பியது. சிறு விஷயந்தான். இருந்தாலும் ஜகந்நாதன் அதைப் பெரியதாய் மனதில் போட்டுக் கொண்டு குழப்பிக் கொண்டிருந்தான். எப்பொழுது ஆபீஸ் விடப் போகிறது, வீட்டிற்குச் சென்று மைதிலியின் கையெழுத்தைக் காண்போம் என்று துடித்தான். தன்னிடம் காண்பிக்காமல் இதுவரை அவள் ஒரு கடிதமும் எழுதினதில்லை. ஆனல் இன்று எழுதிக் கொண்டிருந்த வேகத்தைப் பார்த்தால் தன்னிடம் காண்பிக்காமலேயே தபால் பெட்டியில் போட்டிருப்பாளென்று நினைத்தான். பட்சணத்தை நினைத்துக் கொண்டு, பள்ளிக்கூடத்திலிருந்து ஓடி வரும் சிறு குழந்தையைப் போல் ஜகந்நாதன் ஆபீஸ் விட்டதும், மைதிலியின் கடிதத்தை நினைத்துக் கொண்டு வீட்டிற்கு வேகமாய் வந்தான். வழக்கம் போல் மைதிலி அவனை வரவேற்ருள். வழக்கத்தைவிட அதிகமான சந்தோஷத்துடன் அவனுக்குச் சிற்றுண்டிகள் கொணர்ந்து வைத்தாள். பெரிய காரியத்தைச் சாதித்து விட்ட பெருமை அவள் முகத்தில் பொங்கிக் கொண்டிருந்தது. ஜகந்நாதன் பேச ஆரம்பிக்கு முன்பே அவள் பேச ஆரம்பித்து விட்டாள்.

" நீங்கள் வழக்கத்தைவிட இன்று சீக்கிரம் வந்து விட்டீர்கள், ஏன்? இன்று என்ன விசேஷம்?" என்று கேட்டாள்.

" விசேஷமில்லாமல் வருவேஞ? அது சரி; காலையில் எழுதிக்கொண்டிருந்தாயே, அதைத் தபாலில் சேர்த்து விட்டாயா?" என்று ஜகந்நாதன் தன் மனதில் உறுத்திக் கொண்டிருந்த விஷயத்தைக் கேட்டு விட்டான். மைதிலி கல கலவென்று குதூகலத்துடன் சிரித்தாள். " அதையே

நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? என்ன எழுதிக் கொண்டிருக்கிறாளோ, எது எழுதிக்கொண்டிருக்கிறாளோ வென்று ஆபீஸில் வேலையே ஓடவில்லையாக்கும்! எழுதினதை உங்களிடம் காண்பிக்காமல் அனுப்பி விடுவேனா? இதோ காண்பிக்கிறேன்!" என்று கூறிக் கொண்டே மேஜை டிராயிலிருந்து ஓர் கட்டு பேப்பரை வெளியில் எடுத்தாள். பேப்பர் கட்டைப் பார்த்ததும் ஜகந்நாதன், "இதென்ன கூத்து! எந்த ஆபீஸில் உனக்கு குமாஸ்தா வேலை? என்னமோ எழுதித் தள்ளியிருக்கிறாயே!" என்று கூறி பரிகாசத்துடன் சிரித்தான். "சிரிக்காதீர்கள்! என்ன தான் எழுதியிருக்கிறேனென்று பாருங்கள்: பிறகு சிரிக்கலாம். ஒரு பேனா வாங்கித்தரச் சொன்னால் வாங்கித் தர மாட்டீர்கள், கோட்டா மாத்திரம் செய்வீர்கள்!" என்று மைதிலி கொஞ்சம் கோபமாகவும், கொஞ்சம் கொஞ்சலாகவும் கூறினாள். "இன்று காலையில் தானே பேனா வேண்டுமென்று சொன்னாய்? அதற்குள் வாங்கிக் கொடுக்கவில்லை யென்று கோபித்துக் கொள்கிறாயே!" என்று மிக அன்புடன் அவள் கோபத்தை சாந்தப் படுத்திக் கொண்டே அவள் கையிலிருந்த காகிதக் கட்டை வாங்கிக் கொண்டான். அதைப் பிரித்துப் பார்த்தான். அவள் எழுதியிருந்த முதல் வரிசைப் படித்தான். அவ்வளவுதான்!

விழுந்து, விழுந்து சிரிக்கத் தொடங்கினான். மைதிலி சிறு கதை எழுதத் தொடங்கி விட்டாள்! "பத்திரிகாசிரியர்களே! ஆபத்து!" என்று சிரித்துக் கொண்டே கூவினான். மைதிலிக்குக் கோபம் வந்து விட்டது. "நீங்களொன்றும் படிக்க வேண்டாம்! இங்கே, கொடுங்கள். போதும்! ஏதோ எழுதினதைப் படித்துப் பாருங்களென்று கொடுத்தால் பிரமாதமாய் சிரிக்கிறீர்களே? எத்தனையோ பொம்மனாட்டிகளெல்லாம் கதை எழுதவில்லையா? எனக்கு மாத்திரம் எழுதத் தெரியாதா? என்ன படிப்பதை விட்டு ஊர் கிடுகிடுக்கும்படி சிரிக்கிறீர்களே! நீங்கள் படித்தது போதும்!" என்று கூறிக் கொண்டே ரோஸத்துடன் அவன் கையிலிருந்த காகிதத்தைப் பிடுங்கப் போனாள். ஜகந்நாதன் எழுந்து நின்று கொண்டு தன் தலைக்கு மேல் கையைத் தூக்கிக் கொண்டு, "படித்து விட்டுத்தான் கொடுப்பேன். இப்பொழுது உனக்குக் கிட்டாது!" என்றான். மைதிலியின் கண்களில் கண்ணீர் தளும்பியது. "படித்து விட்டு இன்னும்

பரிகாசம் செய்வதற்கா? உங்களிடம் காண்பித்ததே பிசகு!" என்று அளவு கடந்த வருத்தத்துடன் கூறினாள்.

பாவம்; அவள் கண்களில் தளும்பிய கண்ணீரைப் பார்த்ததும் ஜகந்நாதன் மனம் ரொம்ப இளகி விட்டது. "உனக்கு ஹாஸ்ய உணர்ச்சியே, கிடையாது, மைதிலி! தமாஷாக நான் ஏதாவது பேசினால் உடனே அதை நிஜமாகவே பாவித்துக் கொண்டு கண்ணீரை வரவழைத்து விடுகிறாயே! நான் படித்துப் பார்த்து விட்டு ஜாக்கிரதையாய் உன்னிடம் கொடுத்து விடுகிறேன்" என்று அவள் கண்ணீரைத் துடைத்து விட்டு நாற்காலியில் உட்கார்ந்து படிக்கத் தொடங்கினான். மைதிலி பக்கத்தில் வந்து நின்று கொண்டாள். படித்துக் கொண்டிருக்கும் பொழுதே திடீர், திடீரென்று சில இடங்களில் சிரிக்கத் தொடங்கினான். மைதிலி இதை யெல்லாம் ஹாஸ்ய உணர்ச்சி என்று எண்ணிக் கொண்டு பேசாமல் பொறுத்துக் கொண்டிருந்தாள். கதையைப் படித்து முடித்தான் ஜகந்நாதன். மைதிலி தன் விலாசம் கொடுத்திருக்குமிடத்தைப் பார்த்தான். அவள் தன் பெயருடன் கணவனின் பெயரையும் சேர்த்துக் கொண்டிருந்தாள். "மைதிலி—ஜகந்நாதன்" என்று எழுதப்பட்டிருந்தது. ஜகந்நாதன் தன் சட்டைப் பையிலிருந்து பேனாவை எடுத்தான்; அதில் போட்டிருந்த தன் பெயரை அடித்தான். இதைப் பார்த்த மைதிலி தேள் கொட்டியவள் போல் துள்ளினாள். "ஐயையோ! ஏன் அதை அடித்தீர்கள்?" என்று ஆத்திரத்துடன் இறைந்து கத்தினாள்.

"வேண்டாமடியம்மா! என் பெயரைப் போட்டு என்னை அவமானப் படுத்தாதேயடியம்மா!", என்று ராகம் போட்டுக் கொண்டு கூறினான் ஜகந்நாதன்.

"உங்கள் பெயரைப் போட்டுக் கொள்ளாமல் வேறு யார் பெயரை போட்டுக் கொள்வது?" என்று மைதிலி அடித் தொண்டையில் கத்தினாள்.

"இத்தனை அழகாய் கதையெழுதும் பெண்ணைப் பெற்றாரே உன் தகப்பனார், அவர் பெயரைப் போட்டுக் கொள்!" என்று ஜகந்நாதன் சளைக்காமல் கூறினான்.

"பி. ஏ. யில் பாகம், பாகமாய் பாஸ் செய்த பிள்ளைக்கு எங்கப்பாவின் பெண் *ஒன்றும் குறைந்து போய் விடவில்லை! அவ்வளவு பெரிய மனுஷராயிருந்தால் இருந்து கொள்ளுங்கள்! உங்கள்

பெயரும் வேண்டாம், இன்னொருத்தர் பெயரும் வேண்டாம்!" என்று வெடுக்கெனக் கூறி விட்டு—கோபக்கனல் வீசப் பார்த்துவிட்டு, தான் எழுதிய கதையை எடுத்துக் கொண்டு சமயலறைக்குச் சென்று விட்டாள்.

ஜகந்நாதனுக்கு, மைதிலி வீணைப் பேப்பரைச் சில வழிக்கிருளென்று தோன்றியது. அதைச் சொன்னால் அவள் இப்பொழுதே பிறந்தகம் கிளம்பி விடுவாள். அவள் இல்லாமல் அவனலிருக்க முடியாது. அன்றிலிருந்து அவள் எழுதும் கதையைப் பற்றியே அவன் பேசுவது கிடையாது. இருந்தாலும் ஒவ்வொரு சமயம் பரிகாச வார்த்தைகள் வெளி வந்து விடும். மைதிலி கோபித்துக் கொள்வாள். உடனே ஜகந்நாதன் எப்படியாவது அவளை சமாதானப் படுத்தி விடுவான்.

மைதிலி எத்தனையோ கதைகள் எழுதினாள். பத்திரிகைகளுக்கு அனுப்பினாள். ஒன்றும் பிரசுரமாகவில்லை. அவள், திரும்பி தன் கதை வருவதற்குத் தபால் பில்லை வைத்து அனுப்புவதில்லை. அப்படி யிருந்தும் சில பத்திரிகைக்காரர்கள் 'மிக வருத்தத்துடன்' அவள் கதையை திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தார்கள்! இதுதான் அவளுக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. திரும்பி வரா விட்டால் என்றாவது ஒரு நாள் பிரசுரமாகுமென்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கலாம். போனது, ஆசிரியரின் வருத்தத்துடன் திரும்பி வந்த ஏமாற்றமும், ஜகந்நாதனின் பரிகாசமும் அவளைக் கொன்றன. திரும்பி வந்த கதையை வைத்துக் கொண்டு ஜகந்நாதன் இல்லாத அரட்டை யெல்லாம் அடிப்பான். கொஞ்ச நாள் வரை மைதிலிக்கு இந்தப் பரிஹாஸமெல்லாம் ரோஸமாயிருந்தது. நாளடைவில் அவளுக்குச் சகஜமாய்ப் போய் விட்டது. அவனுடன் சேர்ந்து அவளும் சிரிக்கத் தொடங்கினாள். தான் எழுதிய கதைகளெல்லாம் பிரசுரமாவதில்லையே யென்று அவள் எழுதுவதை நிறுத்தவில்லை. அவள் பாட்டுக்கு எழுதிக் கொண்டு தானிருந்தாள். "பேப்பருக்கும் மசிக்கும் ஆபத்து வந்திருக்கிறது!" என்று ஜகன்னாதன் மனதிற்குள் கூறிக் கொள்வான். "நீ என்ன வேண்டுமானாலும் எழுதிக் கொள்! என் பெயரை மாத்திரம் சேர்த்துக் கொள்ளாதே!", என்று கூறிக் கொண்டேயிருப்பான்.

மைதிலியின் முயற்சி வீண் போகவில்லை. அவள் எழுதிய சிறு கதை யொன்று 'லோக மாதா' என்ற பத்திரி

கையில் பிரசுரமாகியது. 'லோக மாதா' பத்திரிகை வந்த அன்று மைதிலி, சாக்ஷாத் லோகமாதாவே பிரசன்னமாகி விட்டதைப் போல் குதூகலத்துடன் துள்ளினுள். ஜகந்நாதனிடம் குடுகுடுவென்று ஓடினுள். "துரைவாள்! இதோ பாருங்கள்! ரொம்பப் பரிகாச மெல்லாம் செய்தீர்களே! என் கதை பிரசுரமாகி யிருக்கிறது!" என்று பெருமையுடன் 'லோக மாதா'வைக் கொடுத்தாள். "எங்கே, கொண்டா பார்ப்போம்! பாவம்; உன் தொந்திரவு பொறுக்க முடியாமல் பிரசுரித்து விட்டார்கள் போலிருக்கிறது! இல்லா விட்டால் ஸ்ரீமதி மைதிலி தேவி நம்மை விட மாட்டாள் போலிருக்கிறது என்று பயந்து பிரசுரித்து விட்டார்கள்!!' என்று ஜகந்நாதன் வேடிக்கையாய் கூறிக் கொண்டே அதை வாங்கிக் கொண்டான்.

"இதோ பாருங்கள்! இந்த மாதிரி பரிகாசம் செய்தால் நான் கட்டாயம் உங்களுடன் பேச மாட்டேன். கதையை எடுத்துக் கொண்டாலும் பரிகாசம், திருப்பி அனுப்பித்தாலும் பரிகாசமா? நீங்களொன்றும் அதைப் பார்க்க வேண்டாம். கொடுங்கள் அதை!" என்று மைதிலிகோபித்துக்கொண்டு பத்திரிகையைப் பிடித்து இழுத்தாள். "ஐயோ! கிழிந்து விடப் போகிறதே! வாயைத் திறக்கக்கூடாதென்கிருயே! நான் தமாஷுக்கு ஏதாவது சொன்னுல் இப்படி கோபித்துக் கொள்கிருயே! உன் கதை தான் அச்சில் ஏறி விட்டதே அதற்குப் பிறகு என்ன பரிகாசம்? அதுவும் 'லோக மாதா' உன் கதைக்கு அபயமளித்து விட்டாளென்ருல் அதை விட வேறு என்ன பாக்கியம் வேண்டும்! உன் ஜன்மம் இன்றே சாபல்யமாயிற்று!" என்று அவள் முதுகில் மெல்லத் தட்டிக் கொண்டே விஷமச் சிரிப்புடன் பழைய தோரணையிலேயே கூறினுன்.

மைதிலி சந்தோஷத்துடன் நாசூக்காக கொஞ்சம் நெளிந்தாள். "என்ன சொன்னுலும் உங்கள் 'இடும்பு' போகாது!" என்று பொய்க் கோபத்துடன் கூறினுள். வெளியில் பரிகாசமாய்ப் பேசினுலும் உள்ளூர ஜகந்நாதனுக்கு தன் மனைவியின் கதை பிரசுரமாகி யிருப்பதில் சந்தோஷம் தான் என்று மைதிலி அறிந்து கொண்டாள். பத்திரிகையைப் புரட்டிக் கொண்டே ஜகந்நாதன், "சரி! இனிமேல் நம்மை கவனிக்க மாட்டாய். கதைகள் திரும்பி வந்து கொண்டிருக்கும் பொழுதே விழுந்து, விழுந்து எழுதிக் கொண்டிருப்பாய்!

இப்பொழுது கொஞ்சம் இடம் கிடைத்து விட்டது. இனிமேல் மடத்தைப் பிடுங்க வேண்டியது தானே? உன் எழுத்து மும்மரத்தில் நான் எந்த மூலே?'' என்று மைதிலியைப் பார்த்து சிரித்தான்.

''நீங்கள் ஏதாவது பேசிக் கொண்டிருங்கள்! நான் போகிறேன்!'' என்று மைதிலி ஓர் துள்ளலில் அவ்விடத்தை விட்டுச் சென்ருள். நாட் செல்லச் செல்ல மைதிலியின் கதைகள் எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரமாகத் தொடங்கின.

ரொம்ப பெருமையாய்த்தானிருந்தது. ஆனுல் அதனுடன் ஓர் சிறு குறையும் குடிகொண்டிருந்தது. மைதிலி தன் பெயரை ஸ்ரீமதி மைதிலி தேவி என்று தான் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஜகந்நாதனுக்கு அவள் பெயருடன் தன் பெயரையும் சேர்த்துக் கொண்டு தனக்கும் கௌரவம் அளிக்க வேண்டுமென்று ஆசை.

ஒருநாள் ''என் மைதிலி,'' இப்பொழுது சிறு கதையெழுதும் பெண்மணிகளெல்லாம் தங்கள் பெயருடன் தங்கள் கணவன்மார்களின் பெயர்களேயும் சேர்த்துக் கொள்கிருர்களே; அந்த மாதிரி நீயும் என் என் பெயரை சேர்த்துக்.........?'' என்று கூறி என்ன காரணத்தினைலோ நடுவில் நிறுத்தி விட்டான். மைதிலி ஒரு தினுசாக அவனைப் பார்த்துச் சிரித்தாள். ''உங்கள் பெயரையா போட்டுக் கொள்ளச் சொல்கிறீர்கள்? ஐயோ, அவமானம்! ஓர் குமாஸ்தாவின் பெண்டாட்டி தானென்று நினைப்பார்கள்!'' என்று உடனே பளிச்சென்று கூறி விட்டாள். இது அவள் அந்தரங்கமாகக் கூறியதல்ல. முன்பு அவன் சொன்னதை சமயம் வந்தபொழுது துப்பி விட்டாள். ஜகந்நாதனின் முகம் இறங்கி விட்டது.

அவன் முக மாறுதலேப் பார்த்த மைதிலி அவன் அருகில் சென்று, ''கோபித்துக் கொண்டு விட்டீர்களா? நான் சும்மாவானும் சொன்னேன். இனி மேல் நான் மைதிலி ஜக......!'' என்று ஆரம்பித்தவள் புருஷன் பெயரைச் சொல்வது தவறு என்று கருதி அத்துடன் நிறுத்தி விட்டாள். மேலே அவள் சிரிப்புப் பூர்த்தி செய்தது. ஜகந்நாதனுக்கு பூரண சந்தோஷம் பொங்கிற்று. தான் ஓர் பிரபல ஆசிரியையின் கணவன் என்னும் பெருமை அகத்தில் பொங்கி மைதிலியின் முகத்தில் வழிந்தது!

லக்ஷ்மி லோகசுப்ரமண்யம் வீணைகானம்

வீணைவாசிப்பிலே இந்த அம்மாள் இனிமையுடன் அற்புதங்களும் செய்து வருகிறார் என்று சொல்லிக்கொள்கிறார்கள். அதை அப்படியே நம்புகிறோம். கொலம்பியா இசைத்தட்டு ஒன்றைக் கேட்டுவிட்டுத்தான் சொல்கிறோம்.

பழனி விஜயலக்ஷ்மி என்று பிரமாதப்படும் இவர், பெயர், ஊரில் மட்டுமல்ல, பாட்டிலும் அப்படித்தான் என்று கேள்வி. குரலினிமையைக் கொண்டு குளுகுளுவென்று சில இசைத் தட்டுகளை கொடுத்திருக்கிறார் இவர். பஞ்சாமிர்தம் வாழ்க!



பிஞ்சிலே பழுத்தவன வெம்பிப்போவது வழக்கம். அதற்கு நேர் விரோதமானவர் ஸ்ரீ எஸ். வி. பார்த்தசாரதி. இந்த இளவயதிற்குள் சங்கீத உலகிலே பிரமாதமாக ஞான பாவத்துடன் பாடி பேர் வாங்கி விட்டார் இவர். எஸ். வி. வி. பிள்ளையோ கொக்கோ!

வைக்கம் சரஸ்வதி ஜீப் வேகத்தில் முன்னுக்குவருகிறார்

வைக்கம் சரஸ்வதி என்று இப்போது கொஞ்சகாலமாக ரேடியோவிலும் சங்கீத மேடைகளிலும், சினிமா பின்னணிப் பாடல்களிலும் அடிபடுகிறது. நல்ல சாரீரம், ஞானபாவம் எட்டிப் பார்க்கும் பாட்டு, சரஸ்வதி ஸ்டார்ஸ் நட்சத்திரம்.

கொஞ்ச காலத்திற்கு முன்னால ரவைக்குப் பஞ்சம் வந்ததற்குக் காரணம் ஜி. என். பி. தான். ஊரிலுள்ள ரவை எல்லாம் அவரது சாரீரத்தில் போய் தங்கிவிட்டது என்று சொல்லிக் கொண்டார்கள். மேற்படி ரவயை பெரிய மனதுடன் விற்பனைக்கு வெளியே அனுப்பிவிட்டு, புது மெருகை பக்க பலமாக கொண்டிருக்கிறார்.

கும்பகோணம் பிள்ளைவாள் ‘சங்கீத ஞானமு’



“கும்பகோணய” என்பதற்கு எவ்வளவோ அர்த்தங்களுண்டு. ஆனல் பிடில் ராஜமாணிக்கம் பிள்ளையைப் பொறுத்த வரையில் கும்பகோணம்—என்ன தமிழ்நாட்டிற்கே பெருமை ஏற்பட்டிருக்கிறது. “பிடில்” என்ற வாத்யமே இவருக்காகத்தான் ஏற்பட்ட்தோ என்று தோன்றுகிறது.



மிருதங்கத்திலே வாய்ப்பாட்டை அப்படியே திருப்பிப் பாடி விடுவது என்பது எளிதல்ல. அப்படிப்பட்ட அருஞ்செயலை அற்புதமாகச் செய்து வருகிறார் பாலக்காடு மணி. மிருதங்க வாசிப்பிலே அவருக்கு இணை அவர்தான். ஆட்சேபிக்க முடியாத பகிரங்க இரகசியம் இது. மிருதங்கம் வாழ்க!

வெண்கலக்கடையில் யானை புகுந்து நாம் பார்த்ததில்லை. ஆனால் செம்பையின் வஜ்ரநாத சாரீர சம்பத்தைப் பார்க்கும் போது, யானை புகுவது நமக்கு ஒரு பொருட்டாகப் படவில்லை. இப்படிப்பட்ட சாரீரம், சரீரமும், உச்சுக்குடுமியும், உடம்போடு கூடப்பிறந்த ஹாஸ்யப் பேச்சும் கர்நாடக உலகில் சிரஞ்சீவித்வம் பெற்றுவிட வேண்டுமென்று ஆசை

நளினியின் புன்முறுவல்

த்விஜன்

அறையிலிருந்த கடிகாரம் ஏழு மணி யடித்தது. படுக்கையில் புரண்டு படுத்தான் ராமு. ஆனால் மேலும் தூங்க விடாமல் எக்கட்டாக அவன் முகத்தில் பட்டது சூரியனொளி! முனகிக் கொண்டே எழுந்திருந்தான்.

"என்னு, உங்களைத் தானே! காப்பீ வாசனை மூக்கிலே ஏறினப்புறம் கூட எழுந்திருக்க மனசு வரலையா உங்களுக்கு! ஆபீஸில் லேன்னு தூங்கணம்னு இல்லை. பல் தேய்க்கறத்துக்குள்ளே காப்பி 'ஜில்'லிட்டு போயிடும். குடிங்கோ!"

மனக்கிளர்ச்சியி லீடுபட்டிருந்த ராமு திடீரென்று எழுந்து உட்கார்ந்தான்.

அவன் ஆறு வயதுப் பெண் பிரேமா தன் இயற்கை எழிலுடன் சிரித்தாள்!

வேறொரு சமயமா யிருந்தால் அவளை வாரியணைத்து முத்தமிட்டிருப்பான். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அவனுக்கு கோபம் வந்தது!

அதே வார்த்தைகள்! அதே சுதந்திர தோரணை! அதே அன்பு கலந்த அதிகார தொனி! அம்முகத்தின் பிரதிபிம்பம்! அதில் தோன்றும் அதே களையும் புன்னகையும்!

உள்ளத்தில் இருக்கும் அந்த சித்திர உருவத்தின் உண்மையான நகல். உயிர் உள்ள நகல்!

கேலி செய்கிறாளா அவள்? ஆம்! இல்லாமல் என்ன? கொழுப்பு! கொஞ்சிக் குலாவுகிறோமோ இல்லையோ, தாயில்லாப் பெண் என்று. இதுவும் செய்வாள், இன்னமும் செய்வாள்!

"அடேடே, ஒஹோ! பாட்டுப் பாடலென்னு கோவமா?

என்னடான்னு பாத்தேன். "சந்திரபிம்ப முக......"

பிரேமா தன் கீச்சுக் குர லில் பாட ஆரம்பித்தாள்.

அவன் கோபம் எல்லே மீறி விட்டது. "கேலியா செய் யறே, கழுதை. அவ்வளவு திமிரா உனக்கு? என்று ஓங்கி அடித்தான் கன்னத் தில்!

அதை சற்றும் எதிர்பாராத பிரேமா பயந்து அலற ஆரம் பித்து, அந்த அறையிலிருந்து வெளியேறி விட்டாள்!

2

ராமுவுக்கு அந்த கஷ்டம் வந்திருக்க வேண்டியதில்லே. தண்ணீரில்லாமல் வாடி வதங் கும் செடி போல், அன்பு வார்த்தைகள் கேட்காமல் அவதிப்பட்டான் அவன்!

வானமே விரிந்து விட்டது போல் கொட்டிக்கொண்டிருந் தது மழை! கடும் இருள். மழைத் துளிகள் வழியே தோன்றின கார்ப்பரேஷன் எலக்டிரிக் விளக்கின் வெளிச் சம் வானவில்லின் பல வர்ணங் களேயும் சித்தரித்துக் காண் பித்தது. வெள்ளம் பெருக் கெடுத்ததே போல் தார் ரோடில் வழிந்தோடிக்கொண் டிருந்தது மழை ஜலம்! ஜன நடமாட்டம் அடியோடு நின்று விட்டது! இடையர்களால் கவனியாமல் விடப்பட்ட ஓரிரண்டு மாடுகள் மாத்திரம் சுவரோறமாக ஒண்டிக்கொண் டிருந்தன!

தன் அறையில் எல்லாக் கதவுகளேயும் இறுக மூடி படுத் துக்கொண்டிருந்தான் ராமு! படுத்துக் கொண்டே மழை யின் சோ வென்ற ஓசையின் லயத்தில் பலவித கற்பனேகளே ஓட்டிக் கொண்டிருந்தான். அந்த கோர மழையிலும் யாரோ அவன் அறையின் கதவைத் தட்டினுர்கள்! காற் றினுல் உண்டான ஓசையா யிருக்கும் என்று அசட்டை செய்தான்.

ஆனுல் கதவு தட்டும் சப் தம் நிற்கவில்லே. அதன் கூடவே "சார்" என்ற மெல் லிய குரலும் கேட்டது.

யாரோ என்னமோ என்று பார்க்க கதவைத் திறந்தான். எதிரே சுமார் எட்டு வய துள்ள ஒரு சிறுவன் உடல் முழுதும் நனேந்து நின்று கொண்டிருந்தான். அவன் பின்னுல் ஒரு உருவம். ஒரு இளம்பெண், சுமார் பதி னேந்து வயது மதிக்கலாம் நின்றுகொண்டிருந்தாள். அவ ளும் நன்ருக நனேந்திருந்தாள்.

தலை குனிந்து கொண்டிருந்தாள். இருவருடைய உதடுகளும் 'கட கட' வென்று அடித்துக் கொண்டிருந்தது குளிரினால்!

'பட்டனம் பிஸினஸ்' ஆயிருக்குமோ என்று பயந்து விட்டான். அம்மாதிரி எவ்வளவோ பேர் ஏமாந்ததாக அவன் கேள்விப்பட்டிருந்தான்.

ஆனால் ஒன்றும் பேசவில்லை அவன்.

சிறுவன் பேச ஆரம்பித்தான். "சார், பர்மாவிலிருந்து ஓடி வருபவர்கள் சார் நாங்கள்! தாய்தந்தை எல்லாரும் இறந்துவிட்டனர். எஞ்சியவர்கள் நானும், அக்காவும் தான். சாப்பிட்டுஇரண்டு நாட்களாய் விட்டது. எங்கள் தகப்பனாருடைய சிநேகிதர் ஒருவர் இங்கிருப்பதாக கேள்விப்பட்டு இங்கு வந்தோம். ஆனால் எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. மழை கொடூரமாயிருக்கிறது. தங்குவதற்கு இடம் கொடுப்பீர்களானால் அதுவே போதுமானது. பசியாவது தாங்கலாம் போலிருக்



கிறது. இந்த மழை பொறுக்க முடியவில்லை.'' என்ருன்.

இறக்கம் மேலிட்ட ராமு அவர்களை உள்ளே வரச் சொன்னுன். ஈரத்துணியை அவிழ்க்கச் சொல்லி தன்னிட மிருந்த துணியைக் கொடுத்து அணிந்துகொள்ளச் சொன்னுன். காலை ஆகாரத்திற்காக வைத்திருந்த ரொட்டியை அவர்களிடம் கொடுத்தான்.

எல்லாம் உதவின அவனுக்கு அப் பெண்ணிடமிருந்து ஒரு வாய்மொழியும் கூட கிட்டவில்லை. நன்றி நிறைந்த அவள் முகத்தில் இருளில் தோன்றும் மின்னல் போல் புன்முறுவலின் ரேகை தோன்றியது முதன் முதலாக.

அறையின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள் அவள். அச் சிறுவன் தான் அவர்கள் பூர்வோத்தரத்தை சொன்னுன். நிர்கதியான அவர்கள் பிராமணகுலம் என்றும், சொந்தக்காரர்களை அணுக எண்ணுவதாகவும் சிறுவன் சொன்னபொழுது ராமுவுக்கு என்னவோ செய்தது. அபலையாக அணுகும் பெண்களை உறவினர்கள் செய்யும் பாடு அவனுக்கு தெரியாததல்ல. அந்த பெண்ணை அம்மாதிரி கஷ்டங்களுக்கு ஆளாக்க அவன் மனம் ஒப்பவில்லை.

வாடி வதங்கின அவளுடைய சௌந்தர்யம் அவன் கற்பனையைத் தூண்டிவிட்டது. காய்ந்து கருகும் பொழுதே இவ்வளவு பொலிவுடன் இருந்தால், பச்சை ஓடி களையுடன் பூத்திருக்கும் பொழுது எப்படி இருப்பாள்? மெலிந்த அவள் உடலுக்கேற்ருர் போல அமைந்திருந்தது அவள் வெண்மதி முகம்! வளைந்து வளைந்து படிந்திருந்த அவள் கூந்தல் கடலலையே போல் காட்சியளித்தது. கஷ்டத்தின் சிகரத்திலும் மறையாமல் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த புன்முறுவல் கண்காட்சியா யிருந்தது அவனுக்கு !

வலிய வந்த லக்ஷ்மியை, நழுவ விடுவானேன், என்று யோசனை செய்தான். வீட்டிற்கு அவன்தான் முக்யமானவன் தந்தை இறந்து விட்டார். ஒரு சிற்றப்பன் கவலையற்றவன். அவனைக் கண்டிப்பதற்கும் யாரும் இல்லை. தாய் மறுக்காமலிருந்தால், தன்னுடையவள் அவள்!

மறுநாள் லீவ் எடுத்துக் கொண்டு அந்த பெண்ணும் பையனுமாக ஊர் போய்ச்

சேர்ந்தான். தாயிடம் அவன் யோசனையைச் சொன்னான். அவளும் சம்மதித்து விட்டாள்.

அவள்-அவளுக்கு அடைக்கலம் அளித்த அவனை விட அவளுக்கு வேறு யார் கிடைப்பார்கள்! அவள் சௌந்தர்யத்துக்கு மட்டமல்ல ராமுவின் அழகு. அழகு மாத்திரமல்ல அவனுடைய கருணையுள்ளமும், அன்புகொண்ட நடத்தையும் அவளுக்கு கிடைக்குமா?

பி. எல். பாஸ் செய்ததும் ஒரு நல்ல முகூர்த்தத்தில் ராமுவுக்கும், நளினிக்கும் விவாஹம் நடந்தது!

3

ஈசனின் செயல்களில் மிகவும் நுட்பமானது இந்த விவாஹ பொருத்தம். "கல்யாணம் கடவுளால்தான் நிச்சயிக்கப்படுகிறது" என்பது முற்றிலும் உண்மை. இல்லாவிடில் கலியாணத்தைப் பற்றியே எண்ணாத ராமுவின் வீட்டைத் தேடி பர்மாவிலிருந்த அப்பெண் நடந்து வருவானேன். வந்தாலும் அவளுக்கு அபயமளித்தவன், அவள் அழகில் லயித்து தன் மனதையே மாற்றுவானேன். விவாஹமே விசித்திரம்தான். கடவுளின் கலையின் சிகரமோ என்னமோ?

அநாதையான நளினி ராமுவினிடத்தில் கணவனை மாத்திரமல்ல, தந்தையும் தாயையும் அடைந்தாள் எனலாம். கோரமான வாழ்க்கையை எதிர் பார்த்திருந்த நளினியின் முகத்தில் முதன்முதலாக தோற்றுவித்த அந்த புன் முறுவலை, மறையாமலிருக்க கூடிய மட்டும் பிரயத்தனம் செய்தான் ராமு! ஒரு வருஷ சல்லாப வாழ்க்கையில் காதலும், சிருங்காரமும், உருண்டு உருண்டு ஓடிற்று! ஒரு வருஷத்தில் தங்கள் இருவருமே உள்ள ஒரு புது உலகத்தையே சிருஷ்டித்துக் கொண்டார்கள் அவர்கள்!

பிரேமா வாழ்க்கையில் புதிதாக தோன்றின பொழுது இருவரும் அளவிலா மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால் நாளாக ஆக ராமு நளினியை சந்தேகிக்க ஆரம்பித்தான். நளினியின் அன்பை முழுதாக அனுபவித்த அவனுக்கு, பிரேமாவை நளினி கொஞ்சிக் குலவுவது அவ்வளவாக பிடிக்கவில்லை. தன்னைவிட பிரேமாவிடமே நளினி அதிக அன்பு செலுத்துவதாகவும், அதனாலேயே தன்னை அலட்சியம்

செய்வதாகவும் எண்ண ஆரம்பித்தான்.

தன்னைப் போலவே குணத்திலும் பிரேமாவைப் பழக்கி வந்தாள் நளினி! ராமுவுக்கு எப்படிப் பேசினால் பிடிக்கும், எப்படி நடந்தால் அவன் சந்தோஷப்படுவான், எப்படியெல்லாம் பார்த்து சிரிக்கவேண்டும், எப்படிப் பாடவேண்டும் ....நளினியின் போக்கிலேயே வளர்ந்து விட்டாள் பிரேமா!

ஒருநாள் பிரேமாவை கொஞ்சிக்கொண்டிருந்தாள் நளினி. ராமு வந்ததைக் கவனிக்க வில்லை. ஏற்கனவே பிரேமாவின்மேல் கோபமடைந்த ராமுவிற்கு கோபம் வந்துவிட்டது. "ஆள் வந்தது கூட தெரியாமல் விளையாட இந்த 'வண்டி'யிடம் என்ன இருக்கு தெரியலையே, குழந்தையா லக்ஷணமா பொம்மையை வச்சுக்கொண்டு விளையாடாமல் கொஞ்சறுள் அம்மாவோடு!" என்று ஆத்திரத்துடன் அடித்த விட்டான்!

"ஆமாம் அதுக்காக குழந்தையை போட்டு அடிக்கற தாக்கும், அழாதே அம்மா!" என்று பிரேமாவை அணைத்துக்கொண்டு சமாதானம் செய்தபடியே உள்ளே சென்றுள் நளினி!

அன்றிரவு நளினி ராமுவிடம் சொன்னுள், "பிரேமா நம்முடையே இருவர் உள்ளமும் கலந்த அன்பில் உதித்த உருவம். நம்மிடம் அன்பை அவள் எதிர்பார்ப்பது உண்மைதானே. இவ்வளவு வயதான பிறகும் நான் உங்களிடம் கொஞ்சம் குறையாக அன்பு காண்பித்தால் உங்கள் மனம் என்னபாடு படுகிறது, அதுபோல் தானே குழந்தையும்? அறிவு வளர்ந்த உங்களாலேயே அன்பு இல்லாமல் இருக்க முடியாதென்றுல் சிறு குழந்தை எப்படி தாங்கும்? பாவம். குழந்தை அழுகை என்னுல் பார்க்கமுடியவில்லை" என்றுள்.

இது நடந்து ஆறுமாதங்களிருக்கலாம். கடும் ஜுரம் வாய்ப்பட்ட நளினியின் அருகில் அமர்ந்திருந்தான் ராமு! பிரேமாவும் அவள் அருகில் உட்கார்ந்திருந்தாள்.

ராமுவின் முகத்தில் துக்கம் படர்ந்திருந்தது! தன்னை விட்டு அவள் பிரிகிறுள் என்பதை நினைக்க நினைக்க அவன் உள்ளம் துடித்தது! அவன் கையைப் பிடித்துக்கொண்டு சொன்னுள் நளினி! "பிரேமாவை நானிருக்கும் பொழுதே கடுகடுப்பீர்கள். அவளைக் கண்டாலே உங்க

ளுக்கு பிடிப்பதில்லை. இப்பொழுது நான் உயிர் நீத்தால் உங்களைவிட அவள்தான் அதிகமாக வருந்துவாள். பாவம், என்னிடம் அவள் எதிர்பார்த்த அன்பை இனி அவள் அடைவது முடியாது. இனி நீங்கள்தான் அவளுக்கு என்னைப்போல் அன்பு செலுத்தக் கூடியவர். பிரேமாவை ஆசையோடு வளர்த்து வருவீர்கள் என்று நீங்கள் சொன்னால் அதுவே என் கடைசி வேட்கையாகும்,'' என்றாள்.

கண்களில் நீர்மல்க அவள் கண்முன் பிரேமாவை உச்சி மோந்தான் ராமு! அப்பொழுது நளினியின் முகத்தில் தோன்றின ஜ்வாலை, அந்த பிரகாசம் அவளையே எடுத்துக் கொண்டு சென்று விட்டது!

4

அன்று அவளுக்கு மானஸீகமாக அவன் கொடுத்த வாக்குறுதியை அவன் நிறைவேற்றியிருக்கிறானா? நாள் தவறினாலும், பிரேமா வாங்கும் அடி தவறியிருக்கிறதா? இருந்தாலும் அடிக்கிறான் என்பதற்காக அவள் அவனை வெறுத்தாளா? தினமும் அவன் மனமாற எப்படியெல்லாம் விளையாடி, பாடி, பேசி அவன் மனதை குதூஹலமடையச் செய்கிறாள்! அதற்கு பதிலாக அவள் தன்னிடம் எதிர்பார்ப்பது என்ன? தகப்பன் காண்பிக்கும் வாஞ்சை தானே? நளினியிருந்திருந்தால் பிரேமாவை எப்படியெல்லாம் கொஞ்சிக் குலவுவாள். எம்மாதிரியெல்லாம் அவளை சந்தோஷப்படுத்துவாள்?

அடுத்த அறையில் பிரேமாவும் அவன் தாயும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"அவன் கிடக்கிறான்டி முரடன்! குழந்தைன்னு தெரிஞ்சால் தானே! போட்டு அடிக்கத் தெரியும் நன்னா! உன் வயசில், அவன் இருந்த லக்ஷணம் எனக்குன்னா தெரியும். அழாதேடா கண்ணு!"

"இல்லே பாட்டி! அம்மா தானே சொன்னாள், காத்தாலே அப்பாவை நான் கவனிக்கிறப்பலே கவனிக்கணும், அப்பா கொஞ்சம் 'லேட்'டா எழுந்திருந்தா நீ எழுப்பணும்! காப்பி கொடுக்கணும். ஆபீஸுக்கு போறபோது 'டிபனை' மறந்துடுவா. அதை எடுத்து கொடுக்கணும். அப்பாவுக்கு வேணுங்கற துணி யெல்லாம் ரெடியா எடுத்து வைக்கணும் அப்படீன்னு அம்மாதான் செத்து போறபோது சொன்

னாளே! ஏம்மா! அம்மாவை அப்பா அடிப்பாளோ?"

"போடி அம்மா! நாளேலே ருந்து அப்பா உன்னை அடிக்க மாட்டான். நான் அடிக்க வேண்டாம்னு சொல்ல றேன்."

"அதோ, அப்பாவே வந் தூட்டா பாட்டீ. காப்பி கொடுங்கோ!" என்று ஓடி னாள் பிரேமா!

ராமுவுக்கு உச்சி குளிர்ந்து விட்டது. பிரேமாவை வாரி அணைத்துக் கொண்டான்.

"இனிமே அடிக்கமாட்ட யோன்னோ அப்பா. அம்மா தானே அப்படி யெல்லாம் பண்ணச் சொன்னா! அம்மா அப்படியெல்லாம் செய்வா ளோன்னோ!"

"ஆமாம்டி கண்ணு. சமத் துடீ!" என்று அவளை முத்த மிட்டபடியே நளினியின் படத்தைப் பார்த்தான்.

அவள் புன்முறுவல் செய்து கொண்டிருந்தாள்! மழைக்கு அடைக்கலமளித்த அன்று தோன்றின அதே புன் முறுவல்.

ஸ்டேஜ் & ஸ்க்ரீன்

(மாதமிருமுறை சினிமாப் பத்திரிகை)

பிரதிமாதம் 10-25, தேதிகளில் வெளிவருகிறது.

தனிப்பிரதி அணா நான்கு

வருட சந்தா ரூ 6-0-0

விளம்பர விகிதம் :

கடைசி அட்டை	ரூ. 150/-.
உள் அட்டை	ரூ. 100/-.
சாதாரண முழுப்பக்கம்	ரூ. 75/-.
சாதாரண அரைப்பக்கம்	ரூ. 40/-.

ஸ்டேஜ் & ஸ்க்ரீன்

அரண்மனைக்காரத் தெரு, சென்னை —1.

மிஸ் ஷாகுந்த்

பி. ஆர். எஸ். கோபால்

காட்சி 1

துஷ்:—"எப்படிப் பாடி ஞரோ" என்ற பாட்டை வாயில் மொண மொணத்துக் கொண்டே வருகிறுன்.

மாதவ்:—"இப்படிப் பாடி ஞரே" என்று கிண்டலாகப் பாடுகிறுன்.

துஷ்:—என்ன மாதவ்! நீ எப்ப வந்தே? வந்து ரொம்ப நாழியாச்சோ?

மாதவ்:—இல்லே. இப்பத் தான் துஷ் வந்தேன், பத்து நிமிஷமிருக்கும். கொஞ்சம் இரு. இதைப் படிச்சுட்டு வந் துடறேன்.

துஷ்:—அடெ, என்னப்பா பரீக்ஷை தான் முடிஞ்சு போச்சே. இன்னும் ஏன் புஸ் தகத்தை கட்டிண்டு மாரடிக் கிறே? தூர எறியப்பா அதை.

மாதவ்:—புஸ்தக மில்லேயே இது. "ஹாஸ்ய நேசன்" பத்திரிகைன்னு.

துஷ்:—ஓகோ! இன்னும் விசேஷந்தான். "வொர்க் ஒய்ல் யு ஒர்க்,ப்ளே ஒயில் யு ப்ளே"ன்னு சொல்லி யிருக்கே தெரியுமா?

மாதவ்:—நன்னுத் தெரியும். ஆனுல் நீகூப்பிடறது ப்ளேய்க் கில்லேயே பேசறதுக்கின்னு.

துஷ்:—சரி, அது போகட் டும். உன்னுடைய ஹாலி டேஸ் ப்ரொக்ராம் என்ன?

மாதவ்:— தினசரி காலே யிலே எழுந்திருக்க வேண் டியது.

துஷ்:—ஹூம்.

மாதவ்:—குளிக்க வேண் டியது.

துஷ்:—பலே பலே!

மாதவ்:—சாப்பிட வேண் டியது.

துஷ்:—ரொம்ப ஜோர்!

மாதவ்:—ரெஸ்ட்டுக்காக தூங்கவேண்டியது.

துஷ்:—நாசமாப் போச்சு. ஹூம்.

மாதவ்:—அப்பறம் டிபன் சாப்பிட்டுட்டு வாக்கிங் போறது.

துஷ்:—சரிதான்.

மாதவ்:—அப்பறம் ராத்திரி சாப்பிட்டுட்டு தூங்கறது.

துஷ்:—சே, சே! எப்ப பாத்தாலும் தூக்கம் தூக்கம். உன் தூக்கத்தைப் பற்றி யார் கேட்க வந்தது. வெளியூர் ப்ரொக்ராம் ஏதாவது உண்டான்னு கேட்டா..........

மாதவ்:—அதெல்லாம் உன்னைப்போல கொழுப்பெடுத்த பணக்காரப் பசங்களுக்குன்னு நான் கேட்கிறேன் உள்ளூர்லே இருந்தா லீவ் கழியாதோ?

துஷ்:—வருஷ முழுதுந்தான் ரொட்டினு சாப்பிடறது, படிக்கறது, தூங்கறதுன்னுதான் இருக்கே 'ஸம்மர் வெகேஷன்லே' கூடவா இந்த பாழாய்போன ஊர்லே வெய்யல்லே கிடந்து வதங்கணும் சே, நம்மாலே முடியாதப்பா.

மாதவ்:—உன்னை யாரும் அப்படி வற்புறுத்தலயே ஜோரா துரைவாள் ஊட்டிக்கோ, கொடைக்கானலுக்கோ போயிட்டு வறது.

துஷ்:—ஸர்டன்லி. நாம் இரண்டு பேரும் இந்த வெகேஷனுக்கு ஊட்டிக்குப் போறதுன்னு முன்னலேயே பிளான் போட்டிருக்கேனே!

மாதவ்:—நாம் இரண்டு பேருமா! அப்பா கோடி நமஸ்காரம். போனதடவை ஆனைமலைக்கு உன்னோடே வந்து சோறு தண்ணியில்லாமே செத்து சுண்ணும்பானதே ஜென்மத்துக்கும் போதும்.

துஷ்:—ஊட்டி டிரிப் நிச்சயமா அப்படி இருக்காது. இந்த தடவை முன்னெச்சரிக்கையா ரொட்டி, பிஸ்கெட், சாக்லெட், கோகோ, சிகரெட், ஸ்டவ், கிவ் எல்லாம் எடுத்திண்டு போகலாம். நீயும் ஒரு டின் மூக்குப் பொடியை ஸ்டாக் பண்ணிக்கோ.

மாதவ்:—அதெல்லாம் சரிதான். ஆனல் எனக்கொண்ணு தோண்றது புளுமௌண்டன் கபே ஏர்கண்டிஷன் ரூம்லே போய் உட்கார்ந்திட்டா ஊட்டி மாதிரியா யிருக்காதா இத்தனை செலவும் ஸ்ரமமும் இராது.

துஷ்:—ஊட்டிக்குப் போறது வெறுமனே குளிர்ச்சிக்கு மாத்திரம் தானு? ஒரு புது ஊருக்கு போனமாதிரி இருக்

கும். எத்தனையோ இயற்கை விநோதங்களைப் பார்க்கலாம். கேட்ட பால்டை வைத்துக் கொண்டு வேண்டிய குருவி சுடலாம்.

மாதவ்:— ஓகோ ! துஷ்யந்த மஹாராஜா அவர்கள் வேட்டைக்குப் புறப்படணுமா?

துஷ்:—(குறும்பாக) ஆம். மாடவ்யனையும் கூட வரும்படி அழைக்கிறார்.

மாதவ்:—மாடவ்யன் மறுப்பதாக மஹாராஜாவிடம் சொல்லிவிடு.

துஷ்:—மாடவ்யன் இல்லாவிட்டால் பிரயாணம் ஸ்வாரஸ்யப் படாதுன்னு மஹாராஜா சொல்லுகிறார்.

மாதவ்:—ஊஹூம். நான் வர்லே.

துஷ்:—வராட்டா உன்னை யாரு விடறா மாதவ்! நீ ஊட்டிக்கு வந்தால் உன் தூக்க ப்ரோக்ராமுக்கு பங்கம் வந்திடுமோன்னு பயப்படாதே. ஒரு கம்பிளிக்கு ரெண்டு கம்பிளியா போர்த்திண்டு குசாலாய்த் தூங்கலாம்.

மாதவ்:—நீ இத்தனை சொல்றதுக்காக வறேன். ஆனா மஹாராஜா வேட்டைக்குப் போறபோது மாடவ்யனும் கூட அலைந்து அவஸ்தைப்பட மாட்டான் சம்மதந்தானா?

துஷ்:—சரி. காலம்பர ஆறு மணிக்குப் புறப்படணும்.....தயார் பண்ணிக்கோ ....தெரிஞ்சுதா.

காட்சி 2

(துஷ், மாதவ், காட்டில், காரில் வந்திறங்குகிறார்கள்)

துஷ்:— அப்பொ, தர்மலிங்கம் நீ போயிட்டுவா. ஐயாகிட்டெ பத்திரமா வந்துடறம்னு சொல்லு.

தர்:—சரிங்க. இதோ பாத்தீங்களா இந்த ஒத்தையடிப் பாதைலே ரெண்டு மைல் போனீங்கன்னா கேட்டி ஸ்டேஷன் இருக்குதுங்க நான் உத்தரவு வாங்கிக்கிறேனுங்க.

துஷ்:— சரி....போயிட்டுவா

(மோட்டார் கதவு படார் என்று சாத்தப்படும் சப்தம் கார் புறப்படும் சப்தம்.)

மாதவ்:—என்ன துஷ் ! மோட்டாரை அனுப்பிட்டயே இந்தக் காட்டிலேயே தங்கறதாக உத்தேசமா ? பாத்தா ஒரே நிர்மானுஷ்யமாயிருக்கே!

துஷ்:—நிர்மானுஷ்யம்னு சொல்றது கொஞ்சமும்

பொருந்தாது. நாம் இருவரும் மனுஷ்யர்களில்லையா என்ன?

மாதவ்:—சரி சரி வழக்கம் போல விதண்டாவாதம் பண்ண ஆரம்பிச்சுட்டியா கேட்ட கேள்விக்குப் பதிலைக் காணம்.

துஷ்:—என்ன மாதவ்! கோவிச்சுக்காதப்பா! தமாஷா இருக்கமாட்டேங்கிறியே.

மாதவ்:—ஆமாமா வ்யிறு காயறபோது எப்படி தமாஷா இருக்க முடியும்?

துஷ்:—அடபாவி! ரெண்டு மணி நேரத்துக்கு முன்னுலே தான் காப்பி, இட்லி, தோசை, பூரி, வடை, பொங்கல்எல்லாத்தையும் ஒரு கை பார்த்தே, அதுக்குள்ளயா பசி!

மாதவ்:—நீ என்னமோ சொல்றே இந்த மலை ரோட்டுலே மேலே இருந்து கீழே பள்ளத்தைப் பார்த்ததுமே வயிறு என்னமோ பண்ணித்து சாப்பிட்டதெல்லாம் எங்கே போச்சுன்னே தெரியலே.

துஷ்:—சரி, மாதவ்! வெண்ணை வச்சிண்டு நெய்க்காக ஏன் அழணும்? அந்த ட்ரெங்க்லே பிஸ்கெட் இருக்கு எடுத்து ரெண்டே வாயிலே போட்டுக்கோ. ஸ்டவ்வை பத்தவச்சு கொஞ்சம் கொக்கோ தயார் பண்ணு நான்கூட சாப்பிடறேன்.

மாதவ்:—ங்........வா அப்படி வந்தியா வழிக்கு. அப்பொ உனக்கும் பசிக்கிறதுன்னு சொல்லு.

துஷ்:—ஊஹூம். பசியில்லை. ஸ்லைட்டா களைப்பாயிருக்கு. சரி. மொதல்லே நெருப்பு பெட்டி எடுத்துக் கொடு ஒரு சிகரெட் பத்த வைக்கணும்.

மாதவ்:—(தேடிக்கொண்டே) ட்ரங்க்லே காணலியே ஹூம் அந்த ஸூட்கேஸ்லே இருக்கான்னு பாரு துஷ்.

துஷ்:—இல்லையே இதிலேயும்! ட்ரங்க்லேதான் வச்ச ஞாபகம் நன்னு தேடிப்பார்.

மாதவ்:—எல்லாம் தேடிப் பாத்தாச்சு!

துஷ்:—இல்லியா?

மாதவ்:—இல்லை ....இல்லை... இல்....லை!

துஷ்:—ஒருவேளை எடுத்து வைக்க மறந்துட்டோம் போலிருக்கு........

மாதவ்:—போலிருக்கு என்ன? நிச்சயமா எடுத்து வைக்க மறந்தே போயிட்டோம்.

துஷ்:—அடெ இழவே! சிகரெட் பத்தவைக்றதுக்கு என்ன பண்றது?

மாதவ்:—அதுக்காகத் தான் நான் அப்பவே சொன்னேன் மோட்டாரை அனுப்பிடாதேன்னு. இப்பொ அது இருந்தா சுலபமா வரவழைக்கலாம் பாரு.

துஷ்:—சே சே! சுத்த முட்டாள் தனம்........

மாதவ்:—கொஞ்சங்கூட சந்தேகமே இல்லே. ஆனல் அதுவும் நல்லதுக்குத் தான்....

துஷ்:—ஏன்?

மாதவ்:— சிகரெட் இல்லாமே ஒரு நிமிஷங்கூட உன்னலே இருக்கமுடியாது பாரு. அப்பொ உடனே புறப்பட்டுடுவே.

(தூரத்திலிருந்து பாடும் சப்தம் கேட்கிறது)

துஷ்:—மாதவ்! இரு இரு யாரோ பாடுற சப்தம் கேட்கிறதே!

மாதவ்:— ஆமாமா இந்த ஆளில்லாக் காட்டுலே உனக்கு ரடியோக் கூட வச்சிருக்கா!

துஷ்:—உஷ்! கொஞ்சம் சும்மா இரேன், நிஜமாத்தான் கேள் யாரோ பெண் பாடுருள்.

மாதவ்:—ஆமாமா, கேக்கறது....இப்பொ நன்ன கேக்கறது........பெண்பிள்ளை குரல் தான்........அதுக்கு என்ன செய்யணும்கிறே. ஓகோ! நான் இங்கேயே இருக்கணும் துரை அப்படி தனியாப்போய் அந்தக் குரலுக்கு 'ஓனர்' யாருன்னு பாத்துட்டுவரணும் ....அவ்வளவுதானே?

துஷ்:—ஆமா. நான் சொல்லவேண்டிய ஸ்ரமத்தை மிச்சப்படுத்திட்டே.

மாதவ்:—புறப்பட்டுட்டியா.

துஷ்:—நீ இங்கேயே இரு. நான் சீக்கிறமா வந்துடறேன்.

மாதவ்:—ஏன் இரண்டு பேருமே போவோமே.

துஷ்:—வேண்டாம் வேணடாம் இந்த ட்ரெங்குப் பெட்டிகளை எல்லாம் ஏன் தூக்கிண்டு அலையணும்? அந்தப் பெண் வீட்டிலே நெருப்புபெட்டியிருந்தா வாங்கிண்டு வராங்கற எணணமே தவிர வேறென்று மில்லே........

மாதவ்:—ஆமா அதுவரையிலே என்னைத் தனியா இருக்கச் சொல்றியா?

துஷ்:—பயப்படாதப்பா மாதவ்! அப்படி ஏதாவது ஆபத்துன்னு ஒரு விஸில் கொடு போதும் ஓடி வந்துடறேன் அதோ பார் குரல் ரொம்ப சமீபத்திலேயே கேக்கறது. வரட்டுமா? என்ன? மாதவ்........

(துஷ் போகிறான்)

மாதவ்:—(உரக்க) துஷ்! சீக்கிரமா வந்துடணும் நாலு மணிக்குள்ளே வரலேன்னு நான் பேசாமல் ஊரைப்பார்க்கப் போயிடுவேன் தெரிஞ்சுதா........ங்........ மஹாராஜா வேட்டைக்குப் போயிட்டார். அவனாவது நாலு மணிக்குள்ளே திரும்பறதாவது.... ஹூம் நான் பேசாமே ஊருக்குப் போகவேண்டியது.

காட்சி 3

(ஷாகுந்-ப்ரேமா இருவரும் ஒரு ஓடையில் நீஞ்சிக்கொண்டிருக்கின்றனர். ஷாகுந்த் பாடிக்கொண்டே நீஞ்சுகிறாள். பாட்டு முடிந்ததும்)

ப்ரேமா:—ஏது ஷாகுந்! என்னைவிட நன்றாய் நீஞ்சுகிறாயே?

ஷாகுந்:—எனக்கு நீஞ்சறதுன்னா ரொம்ப பிரியம். எங்கள் காலேஜிலே ஒரு ஸ்விம்மிங் பூல் இருக்கு. அதிலே தினமும் நீஞ்சுவேன். நீஞ்சறதிலே பிரைஸ் கூட வாங்கி இருக்கேன். தெரியுமோ பிரேமா!

ப்ரேமா:—அப்படியா! நான் பிரைஸ், கீஸ் ஒண்ணும் வாங்கல்லையம்மா.... சாதாரணமாத்தான் நீஞ்சத் தெரியும். ஷாகுந்! எங்கப்பா வறதுக்குள்ளே போகணும் புறப்படலாமா?

ஷாகுந்:—உம், புறப்படலாம். தினமும் மத்தியானம் இங்கே வந்து நீஞ்சுவமா?

ப்ரேமா:—என்ன பிரமாதம் அப்படியே செய்வோம்.

ஷாகுந்:—ப்ரேமா! போவோமா?

ப்ரேமா:—உம், போவோம் (இருவரும் பாடிக்கொண்டே நடக்கிறார்கள்)

ப்ரேமா:—ஷாகுந்! ஒண்ணு கேட்கணும்னு இருந்தேன். வகேஷனுக்கு அப்புறம் உனக்கு கல்யாணமாமே? நீ என்னிடம் சொல்லல்லே பார்த்தயா?

ஷாகுந்:—உனக்கு யார் சொன்னது?

ப்ரேமா:—உங்கப்பா எங்கப்பா கிட்டே சொன்னாராம்.

ஷாகுந்: — எங்கப்பாவுக்கு வேறே வேலே என்ன? நான் மெடிகல் காலேஜிலே சேரணும்னு இருக்கேன்; அதுக்குப்பதிலா அவர் கல்யாணம் பண்ணிவச்சுப் பார்க்கணும்கிருர்.

ப்ரேமா:—நீ மெடிகல் காலேஜிலே படித்துவிட்டு மற்றவர்களுக்கு வைத்தியம் பண்றதுக்கு முன்னலே நீ முதல்லே வைத்தியம் பார்த்துக்கோ! பேசாமே கல்யாணத்தை பண்ணிண்டு லக்ஷணமாய் ஒரு பிள்ளையைப் பெத்துண்டு...........

ஷாகுந்:—நான்ஸன்ஸ்! பிள்ளையுமாச்சு குட்டியுமாச்சு. இப்பொ இந்தியாவிலிருக்கிற ஜனத்தொகை போதாதாக்கும்.......

ப்ரேமா:— ஐயய்யோ! ஷாகுந்! அதோபாருடீ எத்தனும் பெரிய கழுகு!

ஷாகுந்:— நான் மியூஸியத்திலே பார்த்த அதே கழுகு உசுரோடே வந்துட்டாப் போலே இருக்கு. இருடி அது கிட்டவறது. நன்னு பார்க்கலாம்.

ப்ரேமா:—பாக்கறதா! ஐயய்யோ!....ஷாகுந் ஓடியே போயிடலாம் வா!

ஷாகுந்: —அதென்னடி அது நம்ப தலேக்குமேலேயே வட்டமிடறதே!

ப்ரேமா:—நீ சுத்தப் பைத்தியம். மண்டையிலே குத்திடும் வா....வா....வா....இதோ வந்துடுத்து...ஆஊய்!

ஷாகுந்:— உஷ் ஷ் ஷ்! ப்ரேமா! நீ சுத்த பயந்தாங்குள்ளி....அடியே! அதோபார்! அந்தக் கழுகை யாரோ கல்லாலே அடிச்சுட்டா!

ப்ரேமா:—ஆமாண்டி. குப்புற அடித்துக்கொண்டு விழறது பாரு....அதோ வாய்க்கால்லே விழுந்துடுத்தே........ ஐயோ பாவம்! அதை யாருடி அடிச்சா!........

ஷாகுந்:—அதைத்தான் பாக்கிறேன்...அதோ யாரோ ஒத்தர் வரார், பாரு....அவராத்தான் இருக்கும்....

ப்ரேமா:—அவர் நம்ம பக்கமாத்தான் வரார்....நாம் போகலாம் வா.

ஷாகுந்:—வந்தா என்ன? நம்மைக் கடிச்சா முழுங்கிடுவார்? ஏன் இப்படி பயப்படறே?

ப்ரேமா:—ஷாகுந்! அவரும் உங்க பட்டணத்து மனுஷர்போலே யிருக்கே! அடியே

ரொம்ப பக்கத்திலே வந்து விட்டார்....போகலாம்.... வாடி ....வா!....

ஷாகுந்:—சுத்த காட்டு மிருண்டியாயிருக்கியே...அவர் ஏதாவது கேட்டால் நான் பதில் சொல்லிக்கறேன் நீ சும்மா இரு.

(துஷ் நெருங்கிவந்து)

துஷ்:—இந்தப் பக்கத்திலே ஏதாவது கழுகு விழுந்ததைப் பார்த்தீர்களா ?

ஷாகுந்:—அதோ, அந்த வாய்க்கால் தண்ணியிலே விழுந்துடுத்து.

துஷ்:—ஓ! கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே யாரே வீச் சென்று கூச்சல் போட்டது நீங்கள் தானே?........

ஷாகுந்:—ஆம். அந்தக் கழுகு எங்கள் தலைக்கு மேலே சிறகால் அடிச்சிண்டு பறந்தது இவள் பயந்து போய் கூச்சல் போட்டுட்டா அந்தக் கழுகை அடிச்சு வீழ்த்தின ஹீரோ நீங்கள் தானே?

துஷ்:—ஆம். இந்த கேட்ட பால்டுக்கு அது இரையாகி விட்டது!........

ஷாகுந்:—உங்கள் பெயர்?

துஷ்:—என் பெயர்? துஷ்.

ஷாகுந்:—ஷாகுந்த் உன் பெயரோ நவநாகரீகமாய் இருக்கு....ஆனால் இந்தக் காட்டிலே ஏன் ?........

ஷாகுந்:—எங்கப்பா இங்கே பாரஸ்ட் ரேஞ்சராய் யிருக்கார்.

துஷ்:—வெகேஷனுக்காக இங்கே வந்திருக்கேன்........

ஷாகுந்:—கண்ணப்பரு பேரு?

துஷ்:—ஓ! அப்படியானால் நீங்கள் ஒரு ஸ்கூல் கேர்ள் என்று சொல்லுங்கள்.

ஷாகுந்:—ஸ்கூல் கேர்ள் இல்லே. காலேஜ் கேர்ள் ப்ளீஸ் !

துஷ்:—ஐ ஆம் ஸாரி. எந்த காலேஜ் ?

ஷாகுந்:— வர்ஜின்ஸ் காலேஜ்.

துஷ்:-இன்டரா, பீ.ஏ. யா?

ஷாகுந்:—பீ. ஏ. பரீக்ஷை எழுதி இருக்கேன், நீங்கள்?

துஷ்:—நானும் அதுதான் எழுதியிருக்கேன்.

ப்ரேமா:—ஷாகுந்த்! உனக்குப் பேசறதுக்கு உங்க ஊர் மனுஷர் கிடைச்சுட்டார். நான் போயிட்டுவரேன்........

ஷாகுந்:—(உரக்க) ப்ரேமா! ....ப்ரேமா !!........போகாதே

இரு!....இதோ நானும் வரேன் ....ப்ரேமா....அடி, ப்ரேமா!....

ப்ரேமா:—(போய்க்கொண்டே) இல்லே....இல்லே....நீ நிதானமாய் பேசிட்டுவா .... நான் போறேன்.

ஷாகுந்:— எக்ஸ்கியூஸ்மி.... நானும் போயிட்டுவரேன்....

துஷ்:—அவள் போனுலென்ன....... நீ இருக்க கூடாதா.

ஷாகுந்:—சரி ஒரு பைவ் மினிட்ஸ் இருக்கேன். அப்பப்பா! என்ன வெய்யில் ஊட்டியிலேயே இப்படியிருக்கே!

துஷ்:—இந்தா, ஷாகுந்த்! இந்த பெப்பர்மின்டைச் சாப்பிடு. தாகம் தணியும்.

ஷாகுந்:— என்ன! இதன் மேல் "ஐ - லவ் - யூ" என்று எழுதியிருக்கிறது!

துஷ்:—அந்தப் பெப்பர் மின்ட் முந்திரி வர்க்கத்தைச் சேர்ந்தது. என் மனதிலுள்ளதை முன்கூட்டியே சொல்லி விட்டது!

ஷாகுந்:—அப்படியாஞல் அதை என்னிடமிருந்து திருப்பி வாங்கிக்கொண்டு விடுங்கள்!

துஷ்:—அப்படிச் செய்தால் அந்த பெப்பர்மின்ட் உன் மனதையும்வெளிக்காட்டி விடாதோ?

ஷாகுந்:— அப்படி நேர்ந்தால் அதற்காக சந்தோஷப் படத்தானே செய்வீர்கள்?

துஷ்:— வெறும் சந்தோஷமா! என் ஆயிசுலேயே அதுக்கிணையான சந்தோஷம் வேறெதுவும் இருக்காது. ஆனு—உங்கப்பா அதுக்கெல்லாம் சம்மதிக்கணுமே.

ஷாகுந் :— எங்கப்பாவுக்கு நான் ஒரே பெண். செல்லமாக வளர்த்து வருகிறுர். என் கல்யாண விஷயத்தில் அவர் என் இஷ்டப்படியே விட்டுடுவார்.

துஷ்:—நாம் இருவரும் தம்பதிகளாறதுக்கு சர்வ பொருத்தங்களும் இருக்கு. கடவுள் கிருபையும் அதோடு பொருந்தியிருக்கணும்.

ஷாகுந்:—தாராளமாய் இருக்கும். இதோ பாருங்கள். என் இடது தோளும் கண்ணும் துடிக்கிறது. இதை நல்ல சகுனம்னு பெரியவா சொல்லுவா!

துஷ்:—ஓ! அப்படியா! வா ஷாகுந்த்! அந்த ஓடையருகில் குளிர்ச்சியாய் இருக்கும்; அங்கே போகலாம்.

(ஷாகுந்த் பாடிக்கொண்டே நடக்கிறாள்)

துஷ்:—அடடே! ஷாகுந்த்! உனக்கு பாடத் தெரியும்போ லிருக்கே!

ஷாகுந்:—என் பாட்டைப் பாராட்டுவதற்கு நீங்கள் நிச்சியமான ரஸிகராகி விட்டதால் பாட்டு தானாகக் கிளம்பு கிறது!

துஷ்:—அடேயப்பா!என்ன சாதுரியமான பேச்சு! பேச்சே இப்படி யிருந்தால் பாட்டு அதை விட விசேஷமாய்த்தா னிருக்கும். உம் எங்கே ஒரு பாட்டு நைஸா!

ஷாகுந்:—சரி நான் பாடு கிறேன். ஆனால் ஒன்று அதைப் போல நீங்களும் ஒரு பாட்டு நை....ஸா! அப்படி!

துஷ்:—எனக்குப் பாடத் தெரியுமென்று உனக்கு எப் படித் தெரியும்?

ஷாகுந்:—நீங்கள் மனசுக் குள்ளே பாடிக்கொண்டதை அப்பொழுதே கவனிச்சேன்.

துஷ்:—சரி நீ முதல்லே பாடு; பிறகு நான் பாடுறேன்.

(ஷாகுந்த் பாடுகிறாள்
துஷ் ஹூம் போடுகிறான்)

ஷாகுந்:—ஏன் என்னவோ மாதிரி முகம் மாறி யிருக் கிறது.

துஷ்:—ஒண்ணு மில்லே, என்னுடைய சிநேகிதனைத் தனியா விட்டுட்டு நெருப்புப் பெட்டி வாங்கறதுக்காக வந் தேன். உன்னே மீட் பண்ணி னதும், சிகரெட்டும் மறந்து போச்சு. சிநேகிதனும் மறந்து போச்சு. சரி நான் போயிட்டு டுமாரோ இதே டயத்துக்கு கரக்ட்டா வந்துடறேன். அடடே, டையம் ஆருச்சு. நாலு மணிக்கே வறேன்னு சொன்னேன், இருக்கானோ போயிட்டானோ? ஹூம், ஷாகுந்த்! வரட்டுமா?

ஷாகுந்:—ஓ. எஸ்—!

காட்சி 4

துஷ்:—ஏன் ஷாகுந்த்! இன்னிக்கி இவ்வளவு நேரம்?

ஷாகுந்:—என்ன இப்படிக் கேட்கிறீர்களே! யூஷுவல் டையத்துக்கு அரைமணி நேரம் முன்னடியே யல்லவா வந்திருக்கேன்!

துஷ்:—அப்படியா?........

ஷாகுந்:—ஆம். நீங்கள் ஊருக்கு முந்தியே வந்து காத் திண்டிருந்தா அப்படித்தான் தோணும்.

துஷ்:—அதெல்லாம் சரி. ஷாகுந்த்! நாளை இந்நேரம் நம் மிடையே பல மைல் தூர மிருக்கும். உன்னை விட்டு எப்படி இனி காலங்கழிக்கப் போறேன்.

ஷாகுந்:—நகரத்துக்குப் போகும் உங்களுக்கே அப்படி தோண்ணு எனக்கு எப்படி யிருக்கும் யோசித்துப்பாருங் கள்.

துஷ்:—நீயுந்தானே நகரத் துக்கு வரப்போறே. இந்த காட்டுவாசம் எல்லாம் வகே ஷன் முடியற வரையிலுந் தானே?

ஷாகுந்:—இல்லை. நம் கல் யாணம் வரையில் நீடிக்கும்! உங்களிடம் ஒண்ணு சொல்ல மறந்துட்டேனே. அப்பா, படிப்பை நிறுத்திடும்படி முடி வாச் சொல்லிவிட்டார்.

துஷ்:—அடடா! நம்ப இரு வரும் மெடிகல் காலேஜிலே சேந்தாப்போல படிக்கப்போவ தாகக் கனவு கண்டு கொண்டி ருந்தேனே.

ப்ரேமா:—(வந்து கொண் டே) ரெண்டு பேருமே டாக் டர்களாகி விட்டால் வைத்தி யச் செலவு மிச்சம். அடாடா! சந்தர்ப்பம் சரியாயில்லை........ அப்பறம் வரேன்........

ஷாகுந்:—ப்ரேமா! ப்ரேமா! ....போகாதே இங்கேவா.... ஒரு சமாச்சாரம்........இப்படி உட்காரு.

ப்ரேமா:—ஐயய்யோ! அத் திம்பேர் எதிரிலே நான் உட் காரமாட்டேன்.

ஷாகுந்:—சீ! எப்பப்பார்! இந்தக் குறும்புப் பேச்சுத் தான்!

ப்ரேமா:— அத்திம்பேரே! உங்கள் மேலே எனக்கு ரொம்பக் கோபம்.

துஷ்:—என் ப்ரேமா? எதுக்காக?

ப்ரேமா:—ஷாகுந்தை நீங் கள் பட்டணத்துக்கு கூட் டிண்டு போயிட்டா எனக்குப் பொழுது எப்படிப் போகும்?

துஷ்:—வாஸ்தவந்தான். உன்னையும் பட்டணத்துக்கு கூட்டிண்டு போக முன்னு டியே பிளான் போட்டிருக் கேனே, தெரியுமா?

ப்ரேமா:—அந்தப் பிளானை என்னிடம் சொல்லவே இல் லையே.

துஷ்:—இதோ சொல்லிட றேன்........அந்த அவசரக் குடுக்கை இப்பொ இருந் தால்............

ப்ரேமா:—நீங்கள் யாரைக் குறிப்பிடுறேள்?

துஷ்:—என்னுடைய நண்பன் மாதவை. நாங்கள் இருவருமாய்த் தான் இங்கு வந்தோம். முதல் நாள் உங்களைச் சந்திச்சுட்டு திருப்பறதுக்குள் அவன் சொல்லிக் கொள்ளாமல் ஊருக்குப்போய் விட்டான்.

ப்ரேமா:—(கிண்டலாக) அவர் போனதும் உங்களுக்குச் சௌகரியமாய்த் தான் இருந்தது.

துஷ்:—வாஸ்தவந்தான்! அவன் இருந்தாலோ உனக்கு சந்தோஷமா யிருந்திருக்கும்!

ப்ரேமா:-என்ன! எனக்கா?

துஷ்:—ஆமா! உனக்கே தான்....அவனை உன் கணவனுக்கப் பிளான் போட்டிருக்கிறேன்........

ப்ரேமா:—போங்கள், அத்திம்பேரே.......நான் கலியாணமே செய்து கொள்ளப் போறதில்லை........

ஷாகுந்:—மாதவ்வைத் தவிர வேறெ யாரையும்ன்னு சேத்துச் சொல்ணேலடி!

ப்ரேமா:—சரி, சரி நீயும் அவருடன் சேந்து பேச ஆரம்பிச்சுட்டயா........நான்........ வரேன்........

(ப்ரேமா போகிறாள்)

ஷாகுந்:—நீங்கள் இன்னிக்கி என்னைப் பிரியப் போறேன். அதை நினச்சா ரொம்பப் பயமாருக்கு.

துஷ்:—பயமா? ஏன்?

ஷாகுந்:—நம்முடைய "லவ்" இருக்கே அது துஷ்யந்தன்-சகுந்தலை காதல் போலவே இருக்கு. துஷ்யந்தனுக்கு ஏற்பட்ட ஞாபக மறதியும் உங்களுக்கு ஏற்படாமல்ருக்கணுமேன்னு தான் பயப்படறேன்.

துஷ்:—சே! சே! ஒருக்காலும் அப்படி யாகாது. இந்த என் பெயர் பதிந்த பௌண்டன் பேனாவை ஞாபகமா வைத்துக்கொள்.

ஷாகுந்:—அப்படி ஆகக் கூடாதுன்னு தான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்... .... இந்தாருங்கள் .... இந்த நெக்டை நானே பின்னினது........ இதை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்.

துஷ்:—ஷாகுந்த்! ஊருக்குப் போய் லெட்டர் எழுதறேன். அதற்குள் நம் 'மேரியேஜ்' விஷயத்தை உன் பாதரி

டம் சொல்லி சம்மதம் வாங்கிவை.

ஷாகுந்:—அதைப் பற்றி உங்களுக்கு கவலேயே வேண்டாம்.

துஷ்:—ஓ. கே! நான் கிளம்பட்டுமா?

ஷாகுந்:—போய் வாருங்கள். மறந்து விடமாட்டீர்களே?

துஷ்:—என் உயிரை மறந்தாலும்....உன்னே மறக்க மாட்டேன்........மைடியர்!

காட்சி 5

ஷாகுந்:—அப்பா! நான் ஒண்ணு • கேக்கப்போறேன் கோவிச்சுக்க மாட்டியளே!

கண்:—ஷாகுந்த்' கோவிச்சுக்கறதுக்கு என்னம்மா இருக்கு?

ஷாகுந்:—நான் உங்களுடைய பெண்ணில்லே யாமேயப்பா?

கண்:—யாரம்மா உனக்குச் சொன்னது?

ஷாகுந்:—நம் ப்ரேமா சொன்னுள். அவளுக்குஅவள் அப்பா சொன்னுராம்.

கண்:—சே! முன் யோசனேயில்லாத மனுஷன் அவன், ஏன் இந்த விஷயத்தை வெளிப்படுத்தினுன்?

ஷாகுந்:—ப்ரேமா சொன்னது உண்மைதானுப்பா?

கண்:—உண்மைதாம்மா. நீ என் வளர்ப்புப் பெண்தான். மனசு வருத்தப்படுவென்னு நினேச்சு உனக்கு கலியாணம் ஆறவரைக்கும் சொல்லப்படாதுன்னு இருந்தேன்.

ஷாகுந் :— அப்படியானுல் என் அப்பா, அம்மா யாருப்பா ?

கண்:—அது ஒரு பெருங் கதையம்மா!

ஷாகுந்:—நான் தான் பெரியவளாகி விட்டேனே சொல்லுப்பா?

கண:—வாஸ்தவம்.எத்தனே நாளேக்குத் தான் மறைச்சு வைக்க முடியும்? இருபது வருஷத்துக்கு முந்தி நான் அரவங் காட்டிலே பாரஸ்ட் ரேஞ்சராயிருந்தேன். அப்பொ ஒருநாள் அப்படிச் சுத்திப்பாத்துண்டு வரப்போ ஒரு குழந்தையின் அழு குரல்கேட்டது. ஓடிப்போய்ப் பார்த்தால் ஒரு ஸ்திரீயும் குழந்தையும் இருந்தார்கள். பாவம்! அந்த ஸ்திரீ இறந்து கிடந்தாள். அந்தக் குழந்தை மட்டும் பசியால் துடித்துக்கொண்

208429
சென்னை-600 008

டிருந்தது. அதை எடுத்து வளர்த்துண்டு வந்தேன். அந்தக் குழந்தை தாம்மா நீ!

ஷாகுந்:—நிஜமா அப்பா! ஆ! அம்மா! அப்பா! உங்களுக்கு என் தேகத்தை செருப்பாத் தைத்துப் போட்டாலும் தகும்!

கண்:—ஷாகுந்த்! எனக்கு உன்னைத் தவிர வேறே யாருமில்லே. என் மனைவி பல வருஷங்களுக்கு முந்தியே காலமாயிட்டாள். ஒரு பெண் இருந்துது அதுவும் பத்து வயசு வளர்ந்து செத்துப் போயிட்டுது. அதனால் உன்னை என் பெண்ணாகவே பாவித்து வந்திருக்கேன் இனியும் அதே போலத் தான். உனக்கு ஒரு கலியாணத்தைப் பண்ணிவைத்து விட்டால் என் மனக் கவலை தீர்ந்து விடும்.

ஷாகுந்:—அப்பா! உங்ககிட்டே நான் ஒரு மாச காலமாய் ஒரு சமாச்சாரத்தை மறச்சே வைச்சிருந்தேன். சொன்னால் கோவிச்சுக்க மாட்டியளே!

கண்:—இல்லே. சொல்லம்மா!

ஷாகுந்:—பீபிள்ஸ் காலேஜில் மிஸ்டர் துஷ்ஷான்னு ஒருவர் படிச்சிண்டிருக்கார். அவரும் இந்த வருஷம் பீ. ஏ. பரீக்ஷை எழுதி யிருக்கார். ரொம்பத் தங்கமான குணம். நல்ல சொத்துள்ள குடும்பத்தில் பிறந்தவர். நான் அவரைத் தான் கல்யாணம் பண்ணிக்கிறதுன்னு நெனச்சிருக்கேனப்பா.

கண்:—அவரை உனக்கு நேரிலே தெரியுமாம்மா?

ஷாகுந்:—தெரியும்பா. ஸம்மருக்காக அவர் இங்கே வந்திருந்தார். நேரிலும் அவரோடு பழகி யிருக்கிறேனப்பா.

கண்:—அவருக்கும் உன் மேல் பிரியந்தானும்மா?

ஷாகுந்:—என்னைத் தவிர வேறெ யாரையும் கல்யாணம் செய்து கொள்றதில்லேன்னு அவர் ப்ராமிஸ் செய்து கொடுத்திருக்காரப்பா?

கண்:—நல்லதும்மா! உன் மனசுக்கேத்த புருஷன் வாய்க்கணுமேன்னு தான் கவலைப் பட்டுண்டிருந்தேன். பரீக்ஷை ரிஸல்ட் வந்ததும் கலியாணத்தை முடிச்சுடுவோம்மா.

காட்சி 6

(ஷாகுந் தேக அசௌக்கிய மாய் படுத்திருக்கிருள்.)

ஷாகுந்:—டாக்டர் வந்தி

ருந்தாரேப்பா! என் உடம்பை பத்தி என்ன சொன்னூர்?

கண்:— உடம் பொன்னு மில்லையாம்மா........

ஷாகுந்:— அப்படியானு நீங்க ஏப்பா கவலையாயிருக் கேள்?

கண்:—என் வாழ் நாள்லே நடுவிலே சில வருஷந்தான் கவலையில்லாமலிருந்தேன். இப்போது அது வட்டியும் முதலுமாய் ஆரம்பமாகி விட்டது.

ஷாகுந்:—ஏப்பா அப்படி சொல்றேள்? இப்போ உங்களுக்கு என்ன கவலே?

கண்:—என்ன கவலையா? நீ பிள்ளையுண்டாகி யிருப்பதாக டாக்டர் சொல்ருரம்மா.

ஷாகுந்:—ஆ! அப்பா!....ஆ! ....நிஜமாவா....ஆ!....அப்பா!.. அப்பா!........

கண்:—ஏம்மா!........

ஷாகுந்:—என்னை மன்னிப்பாயா?

கண்:—ஷாகுந்! நீ அறியாப் பெண். ஏதோ நடந்தது நடந்துட்டுது. அதுக்காக உன்னை கோபிப்பதில் என்னம்மா பிரயோஜனம்?

ஷாகுந்:—நீங்கள் உறுதியா நம்புங்களப்பா. உங்கள் கௌரவத்திற்குப் பங்கம் வரும்படி நான் நடக்கலையப்பா. அவரை சந்திச்ச அன்னிக்கே ரெண்டு பேரும் கல்யாணம் செய்து கொள்றதுன்னு சத்தியம் செய்து கொடுத்திருக்கோம். அவர் நேம் போட்ட பௌண்டன் பேனுக் கூட கொடுத்துட்டுப் போனூர். அப்பா!

கண்:—எங்கேம்மா அந்தப் பேனு?

ஷாகுந்:—அது எங்கயோ காணலே தவறிட்டுது.

கண்:—சரி. போகட்டும், சிறு பிள்ளைத்தனமா தப்பு செஞ்சுட்டே. ஆனு உலகம் ஏற்றுக்கொள்ளணுமே அம்மா !

ஷாகுந்:—உலகம் ஏற்றுக் கொள்ளாட்டா போகட்டும் அப்பா! அவர் நிச்சயமாய் என்னை ஏற்றுக்கொள்வாரப்பா.

கண்:—ஐயோ! அதையும் சொல்லணுமா? அவர் இப்பொழுது உன்னை ஏற்றுக் கொள்ளும் நிலைமையில் இல்லையே யம்மா.

ஷாகுந்:—ஏன்? என்னப்பா அவருக்கு?

கண்:—சித்த ஸ்வாதீன

மில்லையாம். பேப்பர்லே போட்டிருக்கம்மா.

ஷாகுந்:—ஆ! என்ன? சித்த ஸ்வாதீன மில்லையா?

கண்:—ஆமாம்மா! உனக்கு பரீக்ஷை பாஸாயிடுத்து....அவருக்கு ஆகல்லே.... ரிஸல்டைப் பார்த்தவுடனேயே பிதற்ற ஆரம்பிச்சுட்டாராம்.... இப்ப சுய ஞாபகம் துளிக்க கூட இல்லையாம்மா.

ஷாகுந்:—ஐயோ, துஷ்!.... உங்களுக்கு இந்த கதியா வரணும்? ரொம்ப நன்னு எழுதியிருக்கேன்னு சொன்னேளே.

கண்:—அம்மா ஷாகு! நீ பிரலாபிப்பதில் என்ன பயன்? வரவேண்டிய கஷ்டங்களெல்லாம் வந்தே தீரும். விதி அப்படியிருந்தால் நாம் அவைகளை அநுபவித்துத் தானே ஆகணும்? எல்லாம் நன்மையாக முடிய வேண்டுமென்று பகவானைப் பிரார்த்தனை செய்துக்கோம்மா!

ஷாகுந்:—அப்பா! எனக்கு ஒரு யோசனை தோண்றதப்பா........

கண்:—என்னம்மா?

ஷாகுந்:—நான் இப்பவே பட்டணத்துக்குப் போகணும்ப்பா.

கண்:—பட்டணத்துக்கா, எதுக்கம்மா?

ஷாகுந்:—அவரை உடனே பார்க்கணும்பா!

கண்:—சித்த ஸ்வாதீன மில்லாத அவரை நீ பார்ப்பதில் என்னம்மா பிரயோஜனம்?

ஷாகுந்:— அப்படியில்லேப்பா. நான் அவரைப் பார்த்தால் ஒரு வேளை பித்தம் தெளிஞ்சு போகலாம்.... நீங்கள் கதைகள்லே படிச்சதில்லையாப்பா?

கண்:— படிச்சிருக்கேன்.... ஆனால் தற்போதுள்ள உன் தேக நிலைமையில் நீ பிரயாணம் செய்றது சரியல்லம்மா.

ஷாகுந்:—பரவாயில்லையப்பா...........அவரைப் பார்க்கும் வரையிலே எனக்குச் சாப்பாடு, தூக்கம் ஒண்ணும் பிடிக்காதப்பா.

கண்:—ஷாகு! பிடிவாதம் செய்றியே? நான் சொல்றதைக் கேட்கப்படாதா?

ஷாகுந்!— அப்பா! நீங்கள் தடை செய்யாதியள். ஆசீர்வாதம் செய்தனுப்புங்கோ. நிச்சயம் நல்ல செய்தியோடு திரும்புவேன்.

கண்:—சரி. அதற்கு மேல் நான் என்னம்மா சொல்ல

முடியும்? உன்னிஷ்டப்படியே செய். நம்ப முனியனை கூட அனுப்புகிறேன். பத்திரமாய் போய் வா........வ! முனியா! குழந்தை சாயந்திரம் வண்டியிலே பட்டணம் போகணும். நீயும் அதுகூடப் போயிட்டு பத்திரமாய் கூட்டி வரணும். வேண்டியதை எடுத்து வச்சுண்டு தயாராய் இரு, போ.

பரேமா:—ஷாகு! ஷாகு! என்னடி நீ ஊருக்குப் போகப் போறதாக முனியன் சொல்ரூனே, நிஜமாகவா?

ஷாகுந்:— நிஜமாத்தான். இதோ பார் பெட்டியை.

ப்ரேமா:—என்னடீ இப்படி திடீர்னு புறப்பட்டுட்டியே?

ஷாகுந்:— அவருக்கு உடம்பு சரியில்லேன்னு சமாச்சாரம் வந்துது பாத்துட்டு வரலாம்னு........

ப்ரேமா:— பகவானே! அவரை நல்லபடியாக் காப்பாத்து. ஷாகு! நீ போயிட்டா எனக்குப் போதே போகாது.

ஷாகுந்: —ப்ரேமா! கவலைப் படாதே! சிக்கிரமா வந்துடறேன்.

ப்ரேமா:— (சற்று மெதுவாக) வெறுமனே வந்தால் போராது. ஒரு சின்ன பாப்பாவோடே.

ஷாகுந்:—போடி ப்ரேமா!

ப்ரேமா:—இந்தா இந்த "பீடிங் பாட்டிலே" என் ஞாபகமா வச்சுக்கோ.

ஷாகுந்:—சீ! கழுதை! .... முனியா படுக்கை பெட்டிகளை எடுத்துக்கோப்பா .....அப்பா, நான் வரட்டுமா?

கண்:—போய் வாம்மா! என்ன கஷ்டம் வந்தாலும்சரி. இங்கே வந்துடும்மா - ஊருக்குப் போன்வுடன் லெட்டா போடு....மறந்து விடாதே.

ஷாகுந்:—அப்பா! நீங்கள் கவலைப் படாதேயுங்கோ. லெட்டர் போடறேன்...வரட்டுமா...ப்ரமோ! .. .... போய் வரேன், அழாமே இரு ப்ரேமா வரட்டுமா ?

ப்ரேமா:—ங்....போய் வா.

காட்சி 7

ஷாகுந்:—என்னப்பா! உங்க சின்ன எஜமான் இருக்காரா ?

சேவகன் — இருக்காருங்க. ஆனா அவருக்கு ஒடம்பு சரியாயில்லீங்களே! ஒத்தறையும் உள்ளே விடாதேணனு பெரிய எசமான் சொல்லி யிருக்காரு.

ஷா குந்:—நான் அவரைப் பாக்கணும்னே ஊட்டியிலேருந்து வந்திருக்கேனப்பா.

சேவகன்:—அம்மா! இதே பாருங்க......உங்களுக்கு விசயம் தெரியாமெ சொலறீங்க. ...அவருக்கோ சித்த சுவாதீனமில்லே....யாராவது கிட்டப் போயிட்டா கையிலே எது கெடைக்குதோ அதை எடுத்து அவுங்க மேலே வீசிடுறாரு, தெரிஞ்சுதுங்குளா?

ஷாகுந்: - இதெல்லாம் தெரிஞ்சிண்டுதானப்பா வந்திருக்கேன்.

சேவகன்: — தெரிஞ்சுகிட்டும் எதுக்காக வந்தீங்க? எங்க பெரிய எசமான் வந்தா கோவுச்சுக்குவாரு, போங்கம்மா.

ஷாகுந்:—நீ கதவைக்கூட திறக்க வேண்டாம்ப்பா. ஜன்னல் வழியா வெறுமனெ அவரைப் பாத்துட்டுப் போயிடறேன். அப்பா! உனக்குப் புண்ணிய முண்டு.

சேவகன்:—சரி, வாங்கம்மா!

துஷ்:—நான் பெயில்! நீ பாஸ்! பிரின்ஸ்பால் பெயில்! புரபஸர் பெயில்! எல்லோரும் பெயில்! பெயில்! எல்லோரும் முட்டாள்! எல்லோரும் பெயில்! (பாட்டு) முட்டாளே உந்தனுக்கு பட்டால் தெரியுமடா ஸரிகமபதநிஸா முட்டாளே பெயில்! பெப் பெப் பெயில்-ராமசுப்பு பப் பப் பாஸ்! முட்டாள்! பாஸ்! மூனு பெயில்! ஷேம்! வெவ் வெவ்வெவ்-ஹல்லோ மாடம்! லேடிஸ் அண்ட் ஜென்டில் மேன்! ஆல் பெயில். ஆல் கெட்டவுட் - மேடம் நீயும் கெட்டவுட் - நானும் கெட்டவுட்-சீ, நிக்காதே மை பாதர் பூல்! யுவர் பாதர் பூல்! ஒன்லீ டு மினிட்ஸ் மோர்... ரைட் யுவர் நேம்ஸ். டிங், டிங் டிங்!

ஷாகுந்:—துஷ்!....துஷ்!....

துஷ்:—உஷ்!....உஷ்!...... துஷ்ஷு மாச்சு புஷ்ஷு மாச்சு,! எங்கே வந்தே? மாதே! வள்ளி! உன் மானைத் தெடி வந்தனையா? ஆகையினாலே, (பாட்டு) 'உன்னைக் கண்டு வெறுக்காத பேர்களுண்டோ...'

ஷாகுந்:—துஷ்! என்னைத் தெரியலையா உனக்கு நான் ஷாகுந்த்! நன்னுப் பாடு!

துஷ்:—ஓ. கே! ஐ நோ. என் கற்பிற் சிறந்த கண்ணகி! (விருத்தம்) 'காயாதகான

கத்தே நின்று வாடும்' (மாதவி யே) அடி, 'இவள் யாரோ என்ன பேரோ எந்த ஊரோ' அறியேன். வள்ளி! என் சித்ரக் குள்ளி நீ பாஸ்! நான் பெயில்!

ஷாகுந்:—துஷ்! என்னை அடையாளம் தெரியலே!

துஷ்:—ஓ. ஐ. ஸீ. ஷாகுந், குல்கந்த், அப்பறம் ஹல்வா, ஜாங்க்றி ரொம்ப சாப்பிட்டா திகட்டிப் போயிடும். ஆனு ஐ ஆம் ஸாரி, அத்தனைக்கும் இப்பொ சர்க்கரை எங்கே கிடைக்கறது? நோ ஷுகர் நோமார்க் பெயில்....ஹி....ஹி ஹி........

ஷாகுந்:--துஷ்! துஷ்! துஷ்! இதோ பார்! நான் ஷாகுந்த்! ஸம்மர் வெகேஷனுக்கு நீங்கள் ஊட்டிக்கு வந்திருக்கலே! துஷ்! நன்ருு உற்றுப் பாருங்கள்! தெரியலேயா?

துஷ்:—உன்னையா, தெரியாது! எனக்கு நன்னுத் தெரியுமே, "அம்பிகாபதியிலே" ஹீரோயினு நடிக்கும் வசுந்தராதேவி தானே நீ. பேஷ்! நீ போயிட்டுவா! என்ன போகமாட்டியா? அடடா! சந்திரமதி! உன் ஆசையினுனல்லவா, 12 கப்பல் நாணயத்தையு மிழந்து கண்ணகியின் கடனைத் தீர்க்க மாதவியின் காற்சிலம்பை விற்க வந்தேன். இதற்காகவா அழறே? நீபாஸ்! நான் பெயில்! (ப்ரேமையை முழுதும் மறந்தேனே) (ருக்மணியா, சுபத்திரையா வந்தது யாருடா சீக்கிரம் சொல்) ஹி....ஹி.... ஹி .... இன்னுமா நிக்குறே? ஹூம் ஐயோ! இடியட்! நான்ஸன்ஸ்! நான் பாஸாம் அவ்வளவு துணிச்சலா யார் முன்னிலையில் நின்று பேசுகிறேம் என்பதை அடியோடே மறந்து என் முன்னே (பவளமெங்கே விளைகிறது. பாவையரே |பவளமெங்கே) (கற்க கசடற-நிற்கத் துணைபெற-தீம்-தா-திங்கிண தக்ஜொணு, திமிகிடதா-தத்தளாங்க்ருத - நீ-தக-ப-ம-ஸரிகமபா - ரிகம - ஸரிகமபத தநி-ஸ்ரிகம க்ரிஸா-கரீஸநித-ரீஸ்நிதப (அப்பா மகனே உன்னை எப்போ நான் காண்பேண்டா) ஹூம், ஜல்தி, ஜாவ்-ஏன் நிக்கறே?

(ஒரு டம்ளரை ஜன்னல் கம்பி மீது வீசும் சப்தம்)

ஷாகுந்:-ஐயோ! அவருக்கு கொஞ்சம் கூட ஞாபக சக்தியில்லையே, எல்லாம் என் தலைவிதி! போதாத காலம். கடவுளே!

காட்சி 8

மாதவ்:—துஷ்! நானும் நீயும் இது போல சேர்ந்து பீச்சுக்கு வந்து ஐந்து வருஷம் இருக்குமா?

துஷ்:—எனக்கு உடம்பு அசௌகரியம் ஏற்படுவதற்கு முன்னல் எப்பொழுதோ வந்தது. உடம்பு குணமானதும் தான் நான் பம்பாய்க்கு வேலையாபோய்விட்டேன். தாராளமாய் ஐந்து வருஷமிருக்கும்.

மாதவ்:—காலம் எவ்வளவு வேகமாப் போறது பார்த்தயா?

ரிபேரர்:—ஸார்! பௌண்டன் பேனு ரிப்பேர் ஸார்!

மாதவ்:—இந்தாப்பா! இங்கே வா! நிப்பிருக்கிறதா?

ரிப்பேரர்:— இருக்கிறது ஒரு ரூபாய் ஸார் பவுண்டன் பேனவை எடுங்க?

மாதவ்:—நல்ல நிப்பா போட்டுக் கொடப்பா.

ரிபேரர்:—நான் போட்டுத் தறேன் எழுதிப் பாருங்க. திருப்தியாயிருந்தா துட்டு குடுங்க.

துஷ்:—இந்தப் பேனு வெலேக்குத் தறதப்பா.

ரிப்பே:—ஆமா, ஸார்!

துஷ்:—ஆ! அடடா! என்ன மறதி!........

மாதவ்:—ஏன் மணிபர்ஸைக் கொண்டு வற மறந்துட்டயா? பணம் வேணும்னு நான் தறேன்.

துஷ்:—இல்லே. இது வெறெ விஷயம் சொல்றேன். என்னப்பா இந்தப் பேனு என்ன விலே?

ரிப்பே:—ஆறு ரூபா ஸார்.

மாதவ்:—இதே போல நீ முன்னே ஒரு பேனவைச் சிருந்தே போலிருக்கே!

துஷ்:—ஆமா இந்தாப்பா பணம் மாதவ்! நாம ரெண்டு பேரும் முன்னே ஊட்டிக்குப் போயிருந்தோமே அப்பொ நான் ஒரு பெண்ணேச் சந்திச்சதாகவும், அவளேத் தான் மேரியேஜ் பண்ணிக்கப் போறதாயும் சொல்லலே! ஞாபகம் இருக்கா!

மாதவ்:—ஆமா!

துஷ்:—அந்தப் பெண்ணிடம் ஞாபகார்த்தமா இந்தப் பேனவைக் குடுத்திட்டு வந்தேன்.

மாதவ்:—இந்தப் பேனவை யல்ல. இதோ போல நீ முன்னே வச்சிருந்த பேனவைன்னு சொல்லு.

துஷ்:—இல்லே, இல்லே. இதே பேனுத்தான் அது. இதோ பார் என்னுடைய நேம் இருக்கு!

மாதவ்:—என்ன ஆச்சரியம்!

துஷ்:—நான் ஒரு பாபி. ஷாகுவை அடியோடு மறந்துட்டேன். அவளுடைய வாழ்க்கையைப் பாழ்பண்ணிட்டேன் அவள் என்னவாளோ? விதி என்னென்ன விபரீதங்களே ஏற்படுத்தி விட்டது மாதவ்! நாம் இன்னிக்குராத்திரியே ஊட்டிக்குப் புறப்படணும் என்ன!

மாதவ்:—என்னப்பா இப்படி திடீரேன்று யோசனே?

துஷ்:—தாமதிக்கவே கூடாது. நான் அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளணும். அவள் அகப்பட்டால் அவளேயே தான் கல்யாணம் செய்து கொள்ளப் போறேன். புறப்படு, மாதவ்!

மாதவ்:—சரி, போவோம்.

காட்சி 9

கண:—ஷாகுந்! வரதன் எங்கேம்மா?

ஷாகுந்:—எங்கே யாவது காட்டையும் மேட்டையும் சுத்திண்டிருப்பான். ஆனு ஆவன்னு எழுதிக் காட்டுடான்னு மாட்டானும். பம்பரத்தை எடுத்திண்டு போயிருக்கான்.

கண்:—அவன் சின்னக் குழந்தை தானேம்மா! இன்னும் கொஞ்ச நாள் போனு தானு படிக்க ஆசை வந்துடறது பாரு,பாரு! நம்ம வரதன் பிரஸிடன்ஸி பஸ்டா எம். ஏ. பாஸ் பண்ணிட்டு பாரிஸ்டரா வரப்போருன், அப்ப சொல்றேன் இரு.

ஷாகுந்:—ஆமாமாம்! அப்பா கிழிச்சுட்டார் பிள்ளே அதை விட கிழிச்சுடப் போருன்.

வரதன்:—தாத்தா! தாத்தா! இதோ பாரு தாத்தா! இந்த ரெண்டு மாமாவும் என்னுடைய பம்பரத்தை எடுத்துண்டு தரமாட்டேங்கரு!

ஷாகு:—(மெதுவாக) அப்பா, அவர்தான் உங்கமாப்பிள்ளே.

துஷ்:—என்னே மன்னிக்கணும். விதி எங்கள் இருவரையும் இப்படிப் பிரித்துவிட்டது.

கண:—துஷ்! எழுந்திருங்கள்....விதி வலிது!.... அதை யாரால் மாற்ற முடியும்?

ஷாகு:—வரதா! அவர் தான்டா உங்கப்பா....கிட்ட போடா!

துஷ்:—ஷாகு! உனக்குப் பெரிய துரோகம் செய்துட்டேன், என்னை மன்னிப்பாயா?

ஷாகு:—நீங்கள் தான் என்னை மன்னிக்கணும். நான் மறுபடியும் உங்களை வந்து பார்க்கமலே இருந்துட்டேன். போகட்டும், இத்தனை வருஷத்துக் கப்பறமாவது என் பேர் ஞாபகம் வந்ததே.

வரத:—அப்பா! அம்மா தினமும் உங்களைப் பத்தி நினைச்சிண்டு நினைச்சிண்டு அழுவாளப்பா. நீ அட்ரஸைக் குடு, நான் போய் கூட்டிவரேன்னு சொல்லுவேன்பா.

மாதவ்:—பலே! பயல் ரொம்ப பொல்லாத பயலப்பா!

கண:—ஏன், என்ன செஞ்சான்?

மாதவ்:-அடேயப்பா! நாங்க மோட்டார்லே வந்திறங்கினோம். அப்ப இவன் ஒரு வேட்டை நாயின் முதுகிலே உட்கார்ந்திண்டு அதன் பல்லே எண்ணிக் கொண்டிருந்தான். நாங்கள் பயந்து போய் நாய் கடிச்சுடும், விட்டுடப்பான்னோம். உங்களை யார் கேட்டது? உங்க வேலையைப் பார்த்திண்டு போங்கோன்னுட்டான்!

கண்:—ஏண்டா! கழுதை! பெரியவாளை அப்படி சொல்லலாமாடா?

வரத:—தெரியாமே சொல்லிட்டேன் தாத்தா!

மாதவ்:—அதோடே விட்டானா? பம்பரத்தை வீசி எறிந்தான் பாருங்கோ டையர் பொத்துப் போயிட்டுது.

கண & ஷாகு:—ஐயய்யோ! ஏண்டா அப்படிச் செய்தே?

வரத:—இனிமே இந்த மாதிரி எல்லாம் செய்யல்லை தாத்தா!

மாதவ்:—போனா போகட்டும் வரதா! அதுக்காக உன்னை நாங்க கோவிச்சுக்கல்லேப்பா.

ஷாகு:—இவர் தான் உங்கள் நண்பர் மாதவ் வோ?

துஷ்:—ஆம் சாக்ஷாத் அவரே தான்.

ஷாகு:—ப்ரேமா, வா வா! உனக்கு நூறுயிசு நல்ல சமயத்துக்கு வந்து சேர்ந்தே உன் அத்திம்பேர் ஐந்து வருஷத்துக்கு முன்னே ஒரு வாக்

குறுதி செஞ்சாரே; ஞாபக மிருக்கிறதா?

ப்ரேமா:—போ, ஷாகு! கிண்டல் பண்ணுதே.

ஷாகு:—கிண்டல் இல்லே, ப்ரேமா! நிஜம்மா! மறுபடியும் ஞாபக மறதி வந்திடுமோன்னு பயந்து மாப்பிள்ளையைக் கையோடே அழைச்சிண்டே வந்துட்டார், இவர்தான் மாதவ்!

ப்ரேமா:—போடி, ஷாகு, இவர் எதிரே எல்லாம் பரிஹாசம் பண்ணறயே.

வரத:—அப்பா! அம்மா வீணை வாசிக்கக் கத்துண்டிருக்காளே தெரியுமோப்பா. எனக்கும் கத்துக்கணும்னு ஆசையாயிருக்கு. ஆனா வீணை கிட்டப் போனுலே வைரு ப்பா!

துஷ்:—அப்படியா? நான் உனக்கு சின்னதாய் ஒரு வீணை வாங்கித்தறேன் பேசாமே இரு. ஷாகு! புதுசா கத்துண்ட வித்தையை எங்களுக்கெல்லாம் காட்டக் கூடாதா?

ஷாகு:—இதென்ன பிரமாதம். இதோ வீணையை எடுத்திண்டு வறேன்.

(வீணையில் மங்கள கீதம் ஒலிக்கிறது.)



(கமலன்)

மறு நாள் சோமுவின் கல்யாணம். அறைக்குள் ஏதோ, யோசித்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். வாசலிலிருந்து "ஸார்; தபால்" என்று ஒரு குரல் கேட்டது. சோமு வாசலுக்கு எழுந்து வந்தான். தபாற்காரன் ஒரு கல்யாண அழைப்பிதழைக் கொடுத்துவிட்டு அப்பாற் சென்றான். என்ன ஆச்சரியம்! அவனுடைய திருமண அழைப்பிதழை அவனுக்கே யாரோ அனுப்பி வைத்திருந்தார்கள்! உள்ளே ஒரு சிறிய காகிதத் துண்டில் "இதையும் மறந்துவிடப் போகிறீர்கள் என்று பயமாயிருக்கிறது," என்று எழுதப்பட்டிருந்தது. இதை யார் அனுப்பியிருக்கக் கூடும் என்று யூகிக்க அவனுக்கு வெகு நேரமாகவில்லை. சிரித்துக்கொண்டே உள்ளே சென்றான்.

சோமசுந்தரம் பி. ஏ. சென்னையில் ஒரு கலாசாலையில் உபாத்தியாயரா யிருந்தான். சம்பளம் நூறு ரூபாய்தான். தஞ்சையில் ஒரு கிராமத்தில் சிறிது நிலம் இருந்தது. இதிலிருந்து வந்த வரும்படியையும் தன் சம்பளத்தையும் வைத்துக் கொண்டு தாய் தந்தையற்ற அவன் நுங்கம்பாக்கத்தில் ஒரு சிறிய வீட்டிலிருந்தான். குணத்தில் சோமுவுக்கு ஈடு அவனே தான். ஏசுநாதர் போதித்தது போல் ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறு கன்னத்தைக் காண்பிக்கும் சுபாவமுடையவன் ஆனால் அவனிடம் ஒரு பெருங்குறையும் காணப்பட்டது. அது தான் அவனுடைய மறதி. அவ்வளவு மறதிக்குணமுள்ள அவன் எவ்வாறு உபாத்தியார் வேலையை ஒழுங்காகப் பார்க்க முடிந்தது, என்று அவனுடைய நண்பர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

ஒரு நாள் சோமு, தன் இயற்கைக் கேற்ப, வகுப்பில் சில புத்தகங்களை மறந்து வைத்துவிட்டான். (அதிர்ஷ்டவசமாக அப்புத்தகங்களில் தன் பெயரை எழுத மறக்கவில்லை). மாலையில் வீட்டுக்

குச் செல்லும் பொருட்டு வெளியே வந்த சோமு "மிஸ்டர் சோமசுந்தரம்" என்று அழைப்பதை யறிந்து திரும்பினன். அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள் இரண்டாம் வகுப்பு உபாத்தியாயினி மிஸ் மீனுக்ஷி. "இப் புத்தகங்களை வகுப்பில் வைத்துவிட்டீர்கள். அடுத்தாற்போல் அங்கேயே நான் பாடம் நடத்த நேரிட்டதால் அவைகளை எடுத்துவைத்திருந்தேன்" என்று கூறியவாறு, புத்தகங்களை அவனிடம் கொடுத்துவிட்டு, அவன் தன் நன்றியை எவ்வாறு தெரிவிப்பது என்று யோசிப்பதற்குள், "அதெல்லாம் எனக்கு வேண்டாம்" என்று சொல்வது போல, ஒரு புன்முறுவல் புரிந்து விட்டுத் தன் வீட்டை நோக்கி விரைந்து சென்றாள்.

சோமுவுக்கும், மறதியின் பயனால் அவன் சந்திக்க நேரிட்ட மீனுவுக்கு மிடையே நட்பு தோன்றி, வளர்ந்து, காதலாக மாறிற்று என்று சொல்லவும் வேண்டுமா?

மீனுவின் தந்தை பொன்னாசை பிடித்தவர் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் தனது ஒரே மகள் நல்ல இடத்தில் கல்யாணம் செய்துகொண்டு சுகமாய்வாழ வேண்டுமென்பது அவர் எண்ணம். கலாசாலையில் கொடுக்கும் சம்பளத்தைக் கொண்டு, சென்னையில், சோமுவும் மீனுவும் குடித்தனம் செய்ய முடியாது என்பதை யறிந்த அவர், தன் மகளைச் சோமுவுக்குக் கொடுக்க இசையவில்லை.

மீனுவுக்குத் தன் தந்தை மேல் கோபம் குமுறிக் கொண்டு வந்தது. மகள் மீதுள்ள வாஞ்சையினாலேயே, கல்யாணத்திற்கு அவர் சம்மதிக்கவில்லை, யென்பதை யறிந்த சோமு அவளைத் தேற்றினான். தான் எப்படியாவது பணம் சம்பாதித்து உயர்ந்த நிலைக்கு வந்து அவளை மணப்பதாக வாக்களித்தான்.

வாக்களித்தானே யொழிய அதை நிறைவேற்ற வகையற்றுத் திகைத்தான். பல பத்திரிகைகளில் உள்ள பகுத்தறிவுப் போட்டிகளில் கலந்து கொண்டான். பெரிய பரிசுத் தொகைகளுடைய லாட்டரிகளிலும் கலந்து கொண்டான். ஆனால் பயனில்லை. கையிலிருந்த பணந்தான் செலவாயிற்று.

"அதிர்ஷ்டத்தை நம்பிக் கொண்டு காத்திருப்பதற்கு பதிலாக, படித்தவர்களாகிய நீங்கள் ஏன் ஒரு புத்தகம் எழுதக் கூடாது?" என்றாள் மீனு ஒரு நாள்.

"எழுத்தாளனுக வேண்டுமென்பது தான் எனது ஆசை. நான் எழுதிய சிறு கதைகளைப் பத்திரிகாசிரியர்களுக்கு அனுப்பிய போது அவை மறு தபாலில் என்னிடம் வந்து சேர்ந்தன. ஆறு மாதமாக கஷ்டப்பட்டு ஒரு நாடகங் கூட எழுதினேன். ஆனுல் பயனில்லை."

"ஏன்! அந்த நாடகம் என்னவாயிற்று"

"மிஸ் லக்ஷ்மி என்ற ஒருவர் 'சேற்றில் தாமரை' என்ற ஒரு காவியத்தை இயற்றியிருந்தார். அதை நாடக ரூபமாக மாற்றி எழுதி அவ்வாசிரியையிடம் அனுப்பினேன். பதில் வரவேயில்லை அது என்னவாயிற்றென்றே தெரியவில்லை."

"அச்சண்டாளிக்கு பதிலெழுதக்கூட நேரமில்லையோ" என ஆரம்பித்த மீனு "ஆனுல் அதுவும் நல்லதுதான். வேறு ஒரு பெண் உங்களுக்கு உதவி செய்ய நேராமலிருந்ததுபற்றி சந்தோஷந்தான்" என முடிப்பதற்குள் வேறு ஒரு உபாத்தியாயர் சோமுவைத் தேடி அங்கு வரவே சம்பாஷணை அத்துடன் முடிவு பெற்றது.

நாட்கள் புரண்டோடின. சோமு இயந்திரம் போல் பள்ளிக்கு வருவதும், பாடம் கற்பிப்பதும் போவதுமாயிருந்தான். குபேரன் தனது ஜன்ம விரோதி என்று எண்ணித் தன் விதியை நொந்துகொண்டிருந்தான்.

இந்நிலையில் தான் மீனு ஒரு நாள் படபடப்புடன் அவனிடம் வந்து ஒரு பேசும்பட விளம்பரத்தை நீட்டினுள். தீபாவளியன்று "சித்தாஞ்சன்" டாக்கீஸில் மிஸ் லக்ஷ்மி எழுதிய "சேற்றில் தாமரை" என்ற படம் ஆரம்பமாகப் போவதை அவ்விளம்பரத்திலிருந்து அறிந்து கொண்டான்.

"அத்திருடி நீங்கள் எழுதிய கதையை இரண்டு வருடங்கள் வைத்திருந்து, இப்போது தன் பெயரை வைத்து அதை வெளியிட்டிருக்கிருள்" என்ருள் மீனு ஆத்திரத்துடன். மேலும் அவ்வாசிரியை மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கும்படியும் வற்புறுத்தினுள்.

படத்தை ஒரு முறை பார்த்து அது தான் எழுதியது தான் என நிச்சயித்த பிறகு தான் எதுவும் செய்யலாம் என்று எண்ணியவனுய் தீபாவளியன்று சித்தரஞ்சன் டாக்கிஸை அடைந்தான். அந்

நாடகம் தான் எழுதியதுதான் என்று நிச்சயிக்க வெகு நேரமாகவில்லை அவனுக்கு.

சோமு நாடகம் எழுதுவதில் முனைந்திருக்கும்போது, ஒரு நண்பன் அவனைப்பார்க்க வந்தான். சங்கரன் என்ற அந் நண்பன் எப்போதும் ஏதாவது வேடிக்கையாகப் பேசுவான். அவனைப் பார்த்ததும் சோமுவுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. 'நகைச்சுவையேயில்லாத இக்கதையில் அவன் பொருட்டு ஒரு புதிய பாத்திரத்தைப் புகுத்தினால் என்ன' என்பதுதான் அந்த யோசனை. தான் புகுத்திய சங்கரன் என்ற அதே பாத்திரம் திரையில் தோன்றவே, கதை தான் எழுதியதே என ஐயமற விளங்கிற்று.

"ஆனால் கதையைத் தான் எழுதியதாக எப்படி நிரூபிக்க முடியும்" என்ற எண்ணம் அவனை வாட்டியது. யோசனையில் ஆழ்ந்தவாறே பதினேழாம் நம்பர் பஸ்ஸில் ஏறினான்.

சோமு தினந்தோறும் காலையில், தன் வகுப்பிலுள்ள கோபாலன் என்ற சிறுவனுடைய வீட்டுக்குச் சென்று பாடம் கற்பிப்பதுண்டு. கோபாலனுடைய தகப்பனார் ஒரு கவிஞர். பல அருங்காவியங்களை இயற்றியவர். சிறு கதைகளும் எழுதுவதுண்டு. அவரிடம் தன் நிலைமையைச் சொன்னால் ஏதாவது உதவி செய்வார் என்ற நம்பிக்கையில் சோமு மறுநாட் காலையில் அவரிடம் சென்று நடந்தவற்றை கூறினான். தன் வரலாற்றைக் கூறிக்கொண்டிருக்கும்போதே கவிஞர் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சிக் குறிகளைக் கண்டு சோமு வியந்தான். தன் கூற்றில் மகிழ்ச்சி தரக்கூடியது என்னவென்று எண்ணினான்.

"கதையின் பிரதி இருக்கிறதா?" என்று வினவினார் கவிஞர்.

"இல்லை" என்றான் சோமு தயங்கியவாறே.

"கதை நீ எழுதியதுதான் என்று எப்படி நிரூபிக்க முடியும்"

சோமு சங்கரனைப்பற்றிக் கூறினான்.

"கதையை எந்த ஊரிலிருந்து அனுப்பினாய்?"

மதுரையில் திருவிளையாடல் புரிந்த சோமசுந்தரர்தான் அவனுக்கு அச்சமயம் அவ்வளவு ஞாபகசக்தியை அளித்திருக்க வேண்டும். "மதுரை

யிலிருந்து'' என்றான் சிறிது நேரம் யோசித்த பிறகு.

கவிஞர் களிப்புக்கோர் கரையில்லை. அவர் கூறலானார் "நான் தான் மிஸ் லக்ஷ்மி. எனக்குப் புகழ் வருமுன் அப்புனைப் பெயரைக் கொண்டே எழுதினேன். சில வருடங்களுக்கு முன் தபாலில் எனக்கு ஒரு கவர் வந்தது. அதனுள், நான் எழுதிய "சேற்றில் தாமரை'' யென்ற காவியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அழகிய நாடகம் எழுதியிருந்தது. உணர்வற்று இருந்த எனது காவியம், ஆதவனைக்கண்ட அரும்பு போல் சங்கரனைப் புகுத்தியதிலிருந்து, மலர்ந்து சிரித்தது. அக்கதை மதுரையிலிருந்து வந்திருந்தது. ஆனால் அதை எழுதியவர் பெயரோ விலாசமோ அதில் காணப்படவில்லை. அதன் ஆசிரியரைக் கண்டு பிடிக்க எவ்வளவோ முயற்சி செய்தேன். பத்திரிகைகளில் விளம்பரம் செய்தேன். ஆனால் என் முயற்சி வீணாயிற்று. கதையைப் பத்திரமாக வைத்திருந்தேன். ஒரு சமயம் பட முதலாளியாகிய எனது நண்பரொருவர், தற்செயலாக அக்கதையைப் படிக்க நேரிட்டது. நான் எவ்வளவு கூறியும் கேளாமல், பத்தாயிரம் ரூபாய்க்குச் "செக்'' எழுதிவிட்டு அந்தக் கதையை எடுத்துக்கொண்டு போய்விட்டார். நான் அப்பணத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. கதை எழுதியவருக்காக பாங்கியில் போட்டு வைத்திருக்கிறேன். நீ தான் அக்கதையை எழுதினாய் என்பது ஐயமற விளங்குவதால் அப்பணத்தை நீயே எடுத்துக் கொள்ளலாம்.''

கல்யாணத்தைப் பற்றி சோமு மறந்து விடுவான் என்று ஒருவர் ஐயமுற்றதில் வியப்பேதேனும் உண்டோ? அல்லது அவ்வாறு ஐயமுற்று அழைப்பிதழை அவனுக்கு அனுப்பியது யார் என்று சொல்லவும் வேண்டுமா?

மடிந்த காதல்

(கலாராணி லலிதா)

பகல் மணி பண்ணிரெண்டிருக்கும். ஹம்ஸா பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டிருந்தாள். அவள் கத்தும் ஒவ்வொருகந்தலும் அவள் உயிரையும் கூடவே எடுத்துச் சென்றுவிடுமோ என்று கவலையடைந்தவனாய் வாயிலுக்கும் உள்ளுக்குமாக நடந்துக் கொண்டிருந்தேன்.

"அம்மா! பேரன் பிறந்தாண்டி" என்றவாறே சப்தமிட்டுக்கொண்டு என் தங்கை ஜனகம் ஓடிவந்தாள். என் மனம் சிறிது சாந்தி அடைந்தது என்தங்கை, என் அம்மா எல்லோருமாக "ஏண்டா கிட்டு, இங்கேவந்து பாரேன்; யார் ஜாடை.யாக இருக்கிறது" என்று என் அம்மா என்னை கூப்பிட்டாள். நான் சிறிது வெட்கமுற்றவனாய் தயங்கி நின்றேன்.

ஒரு மாதம் சென்றது. குழந்தையும் வளர்பிறை சந்திரன்போல் ஒளி பெற்று விளங்கியது. ஆனால் ஹம்ஸாவின் தேகநிலை மட்டும் கவலைக்கிடமாய் இருந்தது.

என் தாயார் தங்கை இவர்கள் மட்டும் குழந்தையை பார்க்கும் போதெல்லாம் "இதென்னடா அதிசயமா இருக்கு! குழந்தை நம்குடும்பத்திலே ஒருவர் ஜடையையும் கொள்ளவில்லை—அவன் அம்மா வம்சத்திலேயேயும் ஒருவர் சாயலும் இல்லையே என்று" அங்கலாய்த்துக் கொள்வார்கள். எனக்கும் அப்படித்தான் தோன்றிற்று. இருந்தாலும் அவளுக்கு உடம்பு குணம் இல்லாமல் இருக்கும்போது அவள்காதில் பட இவ்வாறு பேசக்கூடாது என்று அவர்களை எச்சரித்தேன்.

"ஸார்! ரிஜிஸ்டர் லெடர்" என்கிறவாறே அழைத்தான் தபால்காரன். ரிஜிஸ்தரில் ஹம்ஸாவின் விலாசம் வரையப்பட்டிருந்தது. அங்கீகார

ரசீதில் ஹம்ஸாவின் கையெழுத்து வாங்கி தபால்காரனை அனுப்பிவிட்டு ரிஜிஸ்தரை உடைக்கப்போனேன். "ஹா அம்மா! என்னவோ பண்ணுகிறதே உடம்பை" என்ற ஹம்ஸாவின் அலரல் என்னை தடுத்தது. ஹம்ஸா என் கைகளை பிடித்துக்கொண்டு "இப்பொழுது அதைஉடைக்காதீர்கள் என் உடம்பு சிறிது குணம் ஆகட்டும் பிறகு பார்த்துக்கொள்ளலாம்." என்று சொன்னாள்.

"சரி உன்னிஷ்டடப்படியே" என்று அதை அவள் பெட்டியில் வைத்து பூட்டிவிட்டு சாவியை அவளிடம் கொடுத்து விட்டுப்போய் விட்டேன்.

அன்றிரவு மணி சுமார் மூன்று இருக்கும். தூக்கமே இல்லாமல் படுக்கையில் புரண்டுக் கொண்டிருந்தேன். திடீரென்று ஹம்ஸாவின் அறையில் வெளிச்சம் தென்படவே மெதுவாக எழுந்து ஹம்ஸாவின் அறைபக்கம் சென்றேன். உள்புறம் தாளிடப்பட்டிருந்தது. சாவித் துவாரத்தின் வழியே நோக்கினேன். ஹம்ஸா நடுநடுக்கும் கைகளால் கவரை உடைத்துக்கொண்டிருந்தாள்.

அதில் இரண்டு போட்டோக்களும் ஒரு நீண்ட கடிதமும் ஒரு ஜம்பர் ரவிக்கையும் இருந்தன. என் கண்களை என்னால் நம்பவே முடியவில்லை. ஹம்ஸா அப்போட்டோவில் ஒன்றை தன் மார்பின் மீது வைத்து அழுத்திக் கொண்டு கடிதத்தை படித்துக் கொண்டே அழுது கொண்டிருந்தாள்.

இக்காட்சியை காணச்சகிக்காதவனாய் நான் என் அறையில் போய் படுத்துக்கொண்டேன்.

மறுநாள் மத்தியானம். ஆபீஸ் பியூன் அவசர அவசரமாக வந்து "எஜமான்! அம்மா அவங்களுக்கு உடம்பு அதிகம் ஆயிடுத்துங்களாம். ஆள் வந்திருக்குது," எனவே பரபரப்புடன் எழுந்து ஆஸ்பத்திரியை அடைந்தேன். ஹம்ஸா பேச்சற்று கிடந்தாள். படுக்கையில் அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தலையில் கட்டியிருக்கும் ஐஸ் பையை மாற்றிக்கொண்டே இருந்தேன். இரவுமணி எட்டாகிவிட்டது. இருட்டு அதிகம் ஆக ஆக என் மனதிலும் கவலை அதிகரித்துக் கொண்டே இருந்தது.

அசைவற்றிருந்த ஹம்ஸாவின் சரீரத்தில் ஓர் அசைவு ஏற்பட்டது. சிறிது கண்களை திறந்து சுற்றிலும் பார்த்தாள் வேறு ஒருவரும் இல்லையா?'' என்றாள். "இல்லை என்ன வேணும்'' என்றேன்.

'கதவை தாளிடுங்கள்' என்று ஜாடை காட்டவே, எழுந்து சென்று கதவை தாளிட்டு விட்டு வந்துநின்றேன். எட்டி என்கைகளை பிடித்து இழுத்து என்னை அவளருகில் அமர்த்திக்கொண்டாள். கண்களில் நீர் பெருக "என்னை மன்னிப்பீர்களா? நான் ஒரு துரோகி. என் உயிர் இன்னும் சில மணிகளே தான் இந்த கிராதகர் உலகத்தில் இருக்கும். அதற்குள் என் கதையை சொல்லி முடித்து விடுகிறேன்'' என்று தனது தலையணையின் கீழ் இருந்து கவரில் வந்தவைகளை எடுத்து என்கையில் கொடுத்தாள். அதில் ஹம்ஸாவின் போட்டோ; அதன் கீழ் 'ஹம்ஸராமனுத்' என்று ஹம்ஸாவின் கையெழுத்திருந்தது. ஒரு கடிதத்தில 'பர்மாயுத்தத்தில் வீரமரணம் அடைந்த கேப்டன் ராமனுதன் என்பவரின் கடைசி விருப்பப்படி இதை அனுப்பி இருக்கிறோம்.

தென் கி. ஆ. கமாஸ்ட்

"எனக்கு வயது பதினான்கு. அப்பொழுது ஒருவர் என் தகப்பனரிடம்தேடிக்கொண்டு வந்தார். அவர் பெயர் ராமனுதன். பின்பு விசாரித்ததிலிருந்து அவர் நல்ல பட்டம் பெற்றவர் என்றும், என் தகப்பனரிடம் வேலையை நாடிவந்ததாகவும் தெரிந்தது. நல்ல அழகு உடையவர். கட்டுவாய்ந்த திரேகம். வயது சுமார் இருபத்தொன்று இருக்கும் அப்பொழுது.

வேலைக்காக வந்த அவர் கொஞ்ச நாட்களில் எங்கள் குடும்பத்தில் ஒருவராய் விட்டார். அவரை கலந்து ஆலோசிக்காமல் என்தகப்பனராகட்டும் தாயாராகட்டும் ஒருகாரியமும் செய்ய மாட்டார்கள். தவிர அவர் சித்திரம் வரைவதில் வெகு சமர்த்தர்.

என் அப்பாவிற்கு என்னை பள்ளிக்கூடம் அனுப்புவதில் இஷ்டமே கிடையாது. அதனல் நான் பள்ளிக்கூடமே போவது கிடையாது. வீட்டிலேயே நான் பரதநாட்டியம் கற்று கொண்ட நாழி போக மீதி அவருக்கு ஒழிந்த நேரங்களில் அவரிடம் நான் கல்விபயிலலானேன் இந்த

தொடர்பினால் என் தாய் தந்தையரின் அன்பிற்கு பாத்திரமான அவர் என் அன்பிற்கும் அருகதையுள்ளவராய் விட்டார். நான் பாடம் படிக்கும் போது ஏதாவது குறும்பு செய்யத்தொடங்கினால் அவர் என் துடையில் கிள்ளுவார். அவர்கிள்ளும்பொழுதெல்லாம் எனது உடலில் ஒரு வித உணர்ச்சி ஏற்படும். அவ்வுணர்ச்சியை அடிக்கடி அனுபவிக்கவேண்டி நான் அதிகமாகக் குறும்பு செய்யலானேன்.

சில நாட்களாக அவர் என்னை கண்டிப்பதை விட்டு விட்டார். முன்போல் என்னை கிள்ள மாட்டார். அவர் என்னைத் தொடும்பொழுதெல்லாம் அவருக்கும் ஏதாவது இன்ப உணர்ச்சி ஏற்பட்டிருக்குமோ என்னமோ. நான் இவ்வுணர்ச்சிக்கு அடிமை ஆகக்கூடாது என்ற தீர்மானம்போலிருக்கிறது. கையில் சிறு பிரம்புடன் காட்சி அளிக்கலானார். ஆனால் என் பருவம் அவரிடம் விரும்புவது பிரம்பால் அடி இல்லை என்பதை அறியவில்லை. அவர் ஸ்பரிச இன்பமே எனது விருப்பம். ஆகையினால் அவருக்குபிரம்பு கிடைக்காமல் செய்து கொண்டே வந்தேன் நான்.

என் மன நிலைமையை ஒருவாறு யூகம்செய்துக்கொண்ட அவர் "ஹம்ஸா நீயோ இப்படி அட்டகாசம் செய்கிறாய். நான் உன்னை எப்படி கண்டிப்பது? உன் தாய் தகப்பனாரிடம் சொல்லலாம் என்றாலோ....நீ அவர்களின் ஒரே செல்வப் புதல்வி. என்னடா இவன் நம் சோற்றை சாப்பிட்டுக்கொண்டு நம் குழந்தையின்மேல் கோழ்ச்சொல்ல கிளம்பி விட்டான் என்று நினைத்துக் கொள்வார்களோ என்று என் மனம் அஞ்சுகிறது. நீயோ உன் வயதை மறந்து இப்படி சிறு குழந்தை போல் விளையாடுகிறாய்" என்று என்னைக் கண்டிக்காத முறையில் கண்டித்தார்.

அன்றிரவு எல்லோருமாக சினிமாவிற்கு சென்றிருந்தோம். மறு நாள் காலை வழக்கம்போல் புத்தகக் கட்டுடனும், ஒரு குடலை பூவுடனும் அவர் அறையை அடைந்தேன். "இப்பூக் குடலை எதற்கு?" என்றார். எல்லாம் காரியமாகத்தான் என்று சொல்லி புஸ்தகத்தை எடுத்துக்கொணடு உட்கார்ந்தேன். சில பாடங்களைச் சொல்லி முடித்தார். பிறகு நான் எழுந்து அப் பூக்குடலையை அவர் தலைமேல் கவிழ்த்து

புஷ்பாபிஷேகம் செய்து விட்டேன். சினிமாவில் வந்த ஒரு பாட்டை பாடிக்கொண்டே சினம் கொணட அவர் "பரம கிருபாலனுவும் ஆச்சு, பார் வதி ரமணுவும் ஆச்சு" என்று என் பாட்டை பரிகசித்துக் கொணடே, தலையில் பூக்களுடன் என் தகப்பனுரிடம் சென்று நடந்ததைச் சொல்லி விட்டார். நான் என்ன ஆகுமோ என்று பயந்து கதவின் ஓரத்தில் மறைந்து பார்த்தேன். என் தகப்பனுர் என் தாயாரை கூப்பிட்டு "பார்த்தாயா உன் பெண்ணின் நடிப்புத் திறமையை" என்று சிரித்தார். பிறகு அவரைப்பார்த்து "நீ இதுக்கெல்லாம் மனம் தளரக்கூடாது. குழந்தைக்கு நடிப்பில் பிரியம் அதிகம் அவ்வளவுதான் போ. இதெல்லாம் எங்கள் காதில் போடாதே" என்று சொல்லவே, அவர் அசடு வழியும் முகத்துடன் திரும்பிவிட்டார்.

என் தகப்பனுரின் பதில் என்னை நான் கொணட பாதையில் முன்னேரச் செய்தது பயமின்றி. அன்று சாயங்காலம் வழக்கம்போல் அவர் பாடம் சொல்ல வரவில்லை. என் தாயாரிடம் சென்று "வயிற்றைப் பசிக்கிறது. ஓட்டலுக்கு போய்விட்டு வருகிறேன்" என்ருர். நான் அங்கு சென்று "அம்மா! எனக்கும் பசிக்கிறது, நானும் அப்படியே சிறிது தூரம் நடந்து விட்டு வருகிறேன்" என்று செங்கமலத்தை (எங்கள் வீட்டு வேலைக்காரி) அழைத்துக் கொணடு கிளம்பி விட்டேன். அவருக்கு இதில் இஷ்டமில்லை என்ருலும், என் தாயாரின் பேச்சை தட்டமுடியாமல் எங்களுடன் கிளம்பினுர். ரோட்டு வழியே சென்ருல் வெகு தூரம். ஆகையினுல் வயல்களூனூடே சென்ருேம். பெரிய கால்வாயை தாண்ட வேண்டி வந்துவிட்டது. நான் தாணட முயற்சி செய்கையில் பாதியில் விழுந்து தண்ணீரில் மூழ்கிவிட்டேன். அவர் வந்து கைகொடுத்தார் என்னைத் தூக்க. நான் உடனே எனது இரு கைகளையும் அவரது கழுத்தில் பிண்ணிக்கொண்டேன்; இரண்டு கால்களாலும் அவரது இடையைச் சேர்த்துக்கொண்டேன். எனது உடலில் மின்சாரம் ஊடுருவி செல்வதுபோல் ஓர் உணர்ச்சி என்னை அவரிடம் ஐக்கியப் படுத்தியது.

அடுத்த நாள் எனக்கு என் அம்மா எண்ணை ஸ்நானம் செய்து வைத்தாள். வீட்டில் தடபுடலாக விருந்துக்கு ஏற்

பாடாயிற்று. நான் "என் னம்மா இன்றைக்கு - நம்ப வீட்டில்'' என்றேன்.

"ஒன்று மில்லே போ—இன் னிக்கி ஆடி வெள்ளிக்கிழமை'' என்று சொல்லி விட்டாள். நானும் சென்று விட்டேன்.

இப்பொழுது ராமு என்னு டன் முன்போல் பேசுவதும் இல்லே. பாடமும் சொல்லிக் கொடுப்பதில்லே. நான் ராமு வின் அறை பக்கம் செல்லும் பொழுதெல்லாம் யாராவது என்னைத் தொடருவார்கள், என் அம்மாவோ, அல்லது மாமாவோ, அல்லது செங்க மலமோ. இந்தத் திடீர் மாறுதல் என்னேயும் மாற்றி விட்டது. நானும் ராமுவை தனிமையில் சந்திக்க முயற்சி செய்யலானேன்.

இரண்டு மூன்று மாதங்கள் கழிந்தன. என் தகப்பனர் கேம்ப் போயிருந்தார். அமமா கடைசாமான் வாங்குவதற் காக டவுனுக்கு சென்றிருந் தாள். வீட்டில் செங்கமலம் தோட்டத்து செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண் டிருந்தாள். எனக்கு பொழுது போகவே இல்லே. மனம் ஒரு பாட்டில் இல்லே. அம்மாவின் அலமாரியைச் சோதனே செய்ய ஆரம்பித்தேன். சிற் றின்பத்தை விளக்கும் சில புத் தகங்கள் தென்பட்டன. அவைகளே எடுத்துப் புரட்டிக் கொண்டே போனேன். அநேக விதமாக ஆலிங்கனத்தைச் சித்தரித்திருந்தது. இதைப் பார்த்துக் கொண்டே இருந் தேன். கீழே யாரோ வரும் சப்தம் கேட்க, படியின்மேல் நின்றுக்கொண்டு பார்த்தேன். ராமு ஆபீஸிலிருந்து திரும்பி வந்து விட்டான். வீட்டில் யாரும் இல்லாமல் இருக்கவே, தன் உடுப்பை மாற்றிக் கொண்டு எங்களது பங்க ளாவை அடுத்திருக்கும் மரங் கள் அடர்ந்த பள்ளத்தாக்கு பக்கம் சென்று விட்டான். அவன் மறையும் வரை மாடி யிலிருந்து கவனித்தவாறே இருந்து விட்டு பிறகு செங்க மலத்தினிடம் "டீ! நான் ஹெட்கிளார்க் வீட்டிற்கு போகிறேன். அம்மா வந்த வுடனே வந்து கூப்பிடு'' என்ற வாறே நானும் வேறு வழியாக பள்ளத்தாக்கை அடைந்தேன்.

சூரியன் அஸ்தமனம் ஆகி விட்டான். சந்திரன் தன் குளிர்ந்த கிரணங்களே வாரி இறைத்துக்கொண்டேகிளம்பி விட்டான். வெளியில் சென்ற பக்ஷித் தம்பதிகள் திரும்பி வந்து கூட்டில் கூடி மகிழ ஆரம்பித்து விட்டன. நானும்

அம்மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளவே அவர் பின் சென்று அவரது கண்களைப் பொத்தினேன். ஸர்பத்திஞல் தீண்டப்பட்டவர் போல் திடுக்கிட்டு எழுந்து எனது கையை அப்புறப் படுத்திஞர். என்னைக் கண்டவுடன் என்ன ஹம்ஸா! நீயா....இங்கு தனிமையில்.... என்றவாறே சிங்கத்தைக் கண்ட ஆடு போல் ஓட்டம் எடுக்க ஆரம்பித்து விட்டார்.

நான் அவரது கைகளை பிடித்து இழுத்தவாரே! "நான் என்ன பேயா! பிசாசா! ஏன் இப்படி ஓடுகிறீர்கள்" என்றேன்.

"ஹம்ஸா! யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்னைப்பற்றி! துரோகி, உண்ட வீட்டிற்கே இரண்டகம் நினைக்கின்ருன் என்றல்லவா என்னைத் தூற்றுவார்கள். நீயோ முன்போல்இல்லை. இப்பொழுது பருவம் அடைந்தவளாய் விட்டாய். இனி நாம் முன்போல் பழகுவது நியாயமன்று."

"நான் இங்கு இதோபதேசம் படிக்க வரவில்லை. இதோ பாருங்கள் எத்தனை விதமான ஆலிங்கன வகைகள் இப்புத்தகத்தில். இதைப் பழகவே இங்கு தனிமையில் உங்களைத் தேடிவந்தேன்" என்றேன்.

"ஹம்ஸா, நீ உன் ஸ்திதியைத் தாழ்த்திக்கொள்கிருய். நீ ஒருபெரிய பிரபுவின் செல்வப் புதல்வி. நானே! ஓர் ஏழை. வேலையைத் தேடி உன் தந்தையை அண்டினவன். அவரால் முன்னுக்கு வந்தவன் நீயோ ஒரு வம்சம். நானே வேருெரு வம்ஸம். நீ கோறுவது கைகூடாத காரியம். நான் இதற்கு ஆசைப்பட்டால் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசை படுவது போல் தான் முடியும்" என்ருர்.

நான் "அக் கொம்புத் தேனே முடவனைத்தேடி வரும் போது" என்றவரது முகத்தை என் பக்கம் திருப்பினேன். அவரால் ஒன்றும்பேச முடியவில்லை. பாம்பாட்டியின் மகுடியில் மயங்கிய நல்ல பாம்பு போல் அவரும் என் பருவநிலையின் எழிலை பருகியவாறு நின்றுவிட்டார். என் சாகஸங்கள் அவரை எனக்கு அடிமைப் படுத்தியது. நான் விரும்பியபடி ஆட ஆரம்பித்து விட்டார். அதுதான் நாங்கள் அவ்வூரில் அடைந்த முதலும் கடைசியுமான இன்பம். அடுத்த நாள் நாங்கள் சென்னை வந்த

டைந்தோம். என் தகப்பனாரை மாற்றிவிட்டார்கள். அன்று நான் அவருக்கு அளித்த அன்பளிப்பு தான் இந்த போட்டோ" என்று என்னிடம் காண்பித்தாள்.

அதிலிருந்த ஒரு வருஷ காலம் உருண்டோடியது. நான் அவரைப்பற்றி கேள்விப் படவே இல்லை. ஒருநாள் இரவு திடீரென்று எங்கள் முன் வந்து நின்றார். மிலிடெரியில் சேர்ந்துவிட்டதாயும் அடுத்தநாள் லாகூர் போவதாகவும் சொன்னார். என் தலையில் ஓர் இடிவிழுந்த மாதிரி இருந்தது. அவர் சொல்லை அவர் காப்பாற்றி விட்டார் 'ஹம்ஸா உன்னிடம் முதல் முதலாக அமுத சுவைபருகினேன். இனியாரையும் மணம் புரிந்துக் கொள்ளமாட்டேன் என்று அன்று கொடுத்த வாக்கை இன்று நிறைவேற்றிவிட்டார். இனி அவர் என் அங்கங்களில் இன்பம் காண முடியாது என்று யோஜனை செய்து என் மங்கை பருவத்தின் மானத்தை போற்றிக் காப்பாற்றிய இந்த உள் ரவிக்கையை அவருக்கு என்னை ஞாபகம் ஊட்டும் பொருட்டுக் கொடுத்தேன்,' என்று கவரில் வந்த உள் ரவிக்கையை சுட்டிக் காட்டினாள்.

அன்று போனவர் இன்று வரை ஒன்றும் தெரிவிக்காமல் இருந்தார்—விதியின் விளையாட்டு உங்களையும் என்னையும் பிணைத்தது. நான் உங்களிடம் அனுபவித்தது இரண்டாவது இன்பம்தான். எப்பொழுதும் எனக்கு என் பருவத்தில் அடைந்த முதல் இன்பம்தான் நிலையாக இருந்தது. அந்த இன்பத்தின் பிரதிபிம்பம் தான் இப்பொழுது நம் வீட்டில் தூங்கிக்கொண்டிருக்கும் பாலகன்.

"நான் சொல்லுவது கதை போல் இருக்கும். இத்துடன் இருக்கும் இந்த போட்டோவையும் குழந்தையின் முகத்தையும் ஒத்திட்டுப்பாருங்கள் உங்கள் அம்மாவினுடையதும் உங்கள் தங்கையினுடையதுமான சந்தேகம் நிவர்த்தியாகி விடும்.

இப்பேர்ப்பட்ட பாவியை நீங்கள் அங்கீகரித்துப் போற்றினீர்கள்— நான் அதற்கு அருகதை அற்றவள். என்னை மன்னிப்பீர்களா? என் ஆத்மா சாந்தி அடைய செய்வீர்களா; என்று அழுத கண்களுடன் என்கால்களைப் பிடித்துக் கொண்டாள்.

"ஹப்ஸா! உன் மீது தவறு ஒன்றுமில்லை. உன் தாய் தந்தையர்கள் மீதுதான் எல்லாத் தவறும். உன் பருவ நிலையில் உன்னை ஒருவருடன் பழக விட்டார்கள்—பிறகு அவனிடம் இருந்து உன்னை அபகரித்து விட்டார்கள். வருந்தாதே.' குழந்தைக்கு அதே ராம நாதன் என்று பெயரை வைத்து விடுகிறேன்' என்று முடித்தேன்.

அவ்வளவுதான்; அவள் ஆயுளும் முடிந்தது. அவன் உலகச் சண்டையில் வீர சுவர்க்கம் அடைந்தான் இவள் வாழ்க்கைச் சண்டையில் அடைந்தாள், அதே சுவர்க்கத்தை. இருவரும் மேலுலகிலாவது சுகமடையட்டும்!



நல்ல சிக்கனம்

என். நாராயணன், பி. ஏ.

"இதோ பாருங்கள்! உங்களைத்தானே?" என்ற பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்தாள் கமலா.

"என்ன விசேஷம்?" என்று சாந்தமாகவே கேட்டேன்.

"எவ்வளவு நாளைக்குத்தான் குடித்தனத்தை இப்படியே நடத்திக்கொண்டு போவதாக உத்தேசித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் கமலா.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஏன், குடித்தனத்திற்கு என்ன ஆபத்து வந்து விட்டது?........" என்று கேட்டேன்.

"போதும்! ....'என்ன வந்து விட்டது' என்று கேட்கிறீர்களே!...........இன்னும் நிலைமை மோசமான பிறகுதான் விழித்துக் கொள்வீர்களோ?.... ஹூம்....! சாமான்கள் ஒன்றுக்குப் பத்து விலை விற்கின்றன ....எதை எடுத்தாலும், யானை விலை குதிரை விலை சொல்கிறான்........ இந்த மாதிரி நாம் செலவழித்துக் கொண்டிருந்தால் குடித்தனம் என்ன ஆகும் என்று கேட்கிறேன்!....கொஞ்சம் சிக்கனமாகக் காலந்தள்ளினுலொழிய பின்னுல் ஒரு சமயத்திற்கு, இரண்டு காசு வேண்டுமென்றுல் கிடைக்கும்? ஒவ்வொரு மாதமும், உங்களுக்கு வரும் எழுபது ரூபாய் சம்பளத்தையும், ஒரு தம்பிடி விடாமல் செலவழித்து விட்டால் பின்னுல் என்ன செய்வது?....கொஞ்சம் செட்டாகக் குடித்தனம் பண்ணினுல் மாதம் பத்து ரூபாயாவது மிச்சம் பண்ணலா மல்லவா? ....இப்படியே, மாதா மாதம் பத்து ரூபாய் சேர்த்துக் கொண்டு போனுல், கொஞ்ச நாள் கழித்து, ஏதோ மொத்தமாக கிடைக்கு மல்லவா?.... அது ஒரு ஆபத்து சம்பத்திற்கு எவ்வளவு உபயோகமாக விருக்கும்?...."

"நீ சொல்வதெல்லாம் ரொம்ப சரிதான்!....எனக்குக் கூட வெகு நாளாகவே அந்த

மாதிரி எண்ணம் இருந்து வருகிறது........உன்னிடம் சொன்னுல் நீ கோபித்துக் கொண்டு விடுவாயோ வென்று பயந்து சொல்ல வில்லை........ உனக்கே இப்பொழுது நல்ல புத்தி வந்து விட்டது என்று தெரிகிறது. மிக்க சந்தோஷம்....இனியாவது நீ அதிகச் செலவு பண்ணுமல் சிக்கனமாக இருப்பாய் என்று நம்பு கிறேன்!........''

''நானு அதிகச் செலவு செய்கிறேன்?.... ஹூம்.... நான் சொல்வதெல்லாம் உங்களுக்குத்தான்!....இதோ பாருங்கள்; இனி நீங்கள் ஒரு நாளைக்கு இருபது தடவை வெற்றிலை, சீவல், புகையிலை போடுவதை நிறுத்த வேண்டும். வேண்டுமானுல் மூன்று தடவைகள் போடலாம்!''

''என் உயிர் நிலையான புகையிலையின் மீது முதல் தடை யுத்தரவைப் போடுகிருயே! இது தர்மமா?''

''ஆம்!....நான் சொல்வதை விளையாட்டாக எடுத்துக் கொள்ளாதீர்கள்!.... பொடி போடுவதை நிறுத்தி விடுங்கள்!....முன்பெல்லாம் காலணுவிற்குத் தினம் வாங்கிக் கொண்டிருந்தீர்கள்; 'காலணுத்தானே' என்று பேசாமலிருந்தேன்; இப்பொழுது பொடிக்காகத் தினம் ஒரு அணுவல்லவா செலவழிகிறது! அது மிச்சமாகுமல்லவா?....''

'அப்புறம்?'

'வாரத்திற்கு மூன்று தடவை சினிமாவுக்குப் போகிறீர்களல்லவா?....இனி மாதத்திற்கு மூன்று தடவை தான் போக வேண்டும்!....'

'ஹூம்....இன்னும் என்ன கட்டுப்பாடுகளோ?....'

'இனிமேல் நீங்கள் தினமும், மத்தியானம் ஹோட்டலில் டிபன் சாப்பிட வேண்டாம். காப்பி ஹோட்டல்களில் இப்பொழுதெல்லாம் ஒரு வேளைக் காப்பி சாப்பிட்டால் குறைந்தது ஆறணுவாகிறது. நான் நல்ல தயிர் சாதமாகக் கட்டித் தருகிறேன்; ஆபிஸிற்குப் போகும் பொழுது அதை எடுத்துச் செல்லுங்கள். காப்பி ஹோட்டல் செலவு மிச்சமாகும்!'

'ரொம்ப சரி,....இவையெல்லாம் எனக்கு நிர்ணயிக்கப் பட்டிருக்கும் விதிகள்; உனக்கு ஒன்றும் தேவையில்லையோ?........'

'எனக்குச் சொல்லவும் வேண்டுமோ? நானே பார்த்

துக் கொள்கிறேன்'....இந்த மாதிரிச் சிக்கனமாகக் குடித்தனம் செய்து வந்தால், அதன் பலனை நீங்களே காண்பீர்கள்!' என்று வெற்றியடைந்த வீரனைப் போல் பெருமிதத்துடன் கூறினுல் கமலா.

*   *   *

அன்றைய தினத்திலிருந்தே எனது சிக்கன வாழ்க்கையை ஆரம்பித்து விட்டேன். வெற்றிலை போடுவதை மிகவும் சிரமப்பட்டு ஒரு நாளைக்கு மூன்று தடவைக்குக் கொண்டு வந்தேன். பொடி போடுவதை வெகு சிரமத்துடன் நிறுத்தினேன். என் சிநேகிதர்கள் எல்லோரும் என்னை நையாண்டி செய்ததை நான் சிறிதும் பொருட்படுத்தவில்லை. என் ஆசையை அடக்கிக்கொண்டு, பத்து நாட்களுக்கு ஒரு தடவை சினிமாப் பார்க்கத் தொடங்கினேன். ஆபீஸிற்குத் தினமும் கையில் சாதப் பொட்டணத்துடன் சென்றேன். ஆபீஸில் மற்ற குமாஸ்த்தாக்கள் என்னைப் பார்த்துச் சிரித்தனர். நான் லட்சியம் செய்தால் தானே? மாதக் கடைசியில், கமலா சொன்னது போலவே பத்து ரூபாய் மீந்திருந்தது! கமலாவிற்கும் எனக்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை.....பத்து ரூபாய்களும் எங்களிருவர் கண்களிலும் பத்தாயிரம் ரூபாய்கள் போல் தோன்றின. அந்தப் பத்து ரூபாய்களையும் ஒரு சிறிய உண்டியல் பெட்டியில் போட்டு வைத்தோம்.

இப்படியே ஆறு மாதங்கள் சென்றன. உண்டியல் பெட்டியில் எனது தியாக வாழ்க்கையின் பிரத்தியட்சப் பிரமாணமாக அறுபது ரூபாய் சேர்ந்திருந்தது. என்றைக்காவது ஒரு அவசர சமயத்தில் அது உபயோகப்படும் என்பதை எண்ணி நான் மனதிற்குள் வெகு சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தேன்.

இன்னும் பொங்கலுக்கு இரண்டு நாட்களே பாக்கியிருந்தன. அன்று சாயங்காலம் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்தவுடன், கமலா, கையில் ஒரு புடவையை வைத்துக் கொண்டு, 'இதைப் பார்த்தீர்களா?' என்று கேட்டாள்.

புடவையைப் பார்த்தேன். நன்றாகத்தானிருந்தது. 'என்ன விலை?.... உனக்கா?'.... என்று கேட்டேன்.

அவள் பிடிவாதமாக 'எண்பது ரூபாய்' என்றுள். நான் விடாமல் சண்டை பிடித்துக்

(தொடர்ச்சி 131ம் பக்கம்)

புயல்

ஸ்ரீமதி ராஜம் நரசிம்மன்

கமலா வேறு ஒருவனுக்கு மாலையிடுவதா? அப்ப, நினைக்கும்போதே என் உள்ளத்தில் வேதனை குமுறுகிறதே. என் மனதை அத்தனை தூரம் கவர்ந்து விட்டாள். ஊமை கண்ட கனவைப்போல என் உள்ளக் கிளர்ச்சியை வெளியிட வகையின்றி நான் ஏங்கித் தவிப்பது யாருக்குத் தெரியும்? அவள் என்னை மணக்க சம்மதிப்பாளா? ஹூம், முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டானாம். எங்களிடையே எத்தனை வித்தியாசம்! நாற்பது வயது நிரம்பிய அரைக் கிழம் நான். கமலாக்கோ பதினேழு வயது தான் ஆகிறது. எலுமிச்சம் பழ நிறம். மூக்கும் முழியுமாக மோகினி போல இருப்பாள். பருவ கால சோபை அவளுடைய தேகத்தில் தவழ்ந்து விளையாடுகிறது. கமலாவுக்குச் சரியான ஜோடி சேகரன் தான். அவனைக் கண்டதும் அவளுடைய அகத்தில் பொங்கும் ஆனந்தத்தைமுகம் கண்ணாடி போல பிரதிபலிக்கிறதே. சேகருக்கு இருபத்தி ஐந்து வயது தான் ஆகிறது. அவனை மாரன் என்று சொன்னால் அந்த ரூபனை அமிதமாக புகழ்ந்தவனாவேன். குமரன் என்றால் வேலன் கர்வம் கொள்வான். டாக்டர் சேகரன் என்னுடைய அஸிஸ்டெண்ட். என் மறதியைப் பாருங்கள், நான் ஒரு பிரைவேட் பிராக்டிஷனர் என்பதை இதுவரை சொல்லவே இல்லை. ஊரில் எல்லோரும் என் கை ராசியைப் புகழுகிறார்கள். நான் என் அதிர்ஷ்டத்தைப் போற்றுகிறேன். என் மனைவி இறந்து எட்டு வருஷங்களாகிறது. வீட்டில் சகல வேலைகளுக்கும் ஆட்கள் இருக்கின்றனர். என் வாழ்க்கையே ஒரு யந்திரம் தான். சேகரனுக்கு முன் டாக்டர் ரகுபதி என்னுடைய அஸிஸ்டெண்டாக இருந்தார். அவருடைய ஒரே பெண்தான் கமலா. சிறு வயதிலேயே தாயை இழந்தாள். மூன்று வருஷங்களுக்கு முன் ரகுபதி ஒரு ஆபரேஷன் செய்யும் போது, கையில்கத்தி கீறி விட்டது. காலன் தன் பாசக் கயிற்றை அவர்மீது இதன் மூலம் வீசிவிட்டான்போலும்.

ஸெப்டிக் ஆகி, சில நாட்களில் அந்த மனுஷன் கண்ணை மூடி விட்டார். மரண வாயிலில் இருக்கும்போது கூட தன் பெண்ணை அனுதையாக விட்டுப் போகிறேமே என்ற கவலை அவருக்கு. அவளை என் கண்களைப்போல பார்த்துக் கொள்வதாக வாக்களித்தேன். அப்போது தான் அவருடைய மனம் நிம்மதி பெற்றது. என் வார்த்தையில் தான் அவருக்கு எத்தனை நம்பிக்கை! அதற்கு நான் அருகனுக வேண்டுமே. கமலாவிடம் நான் வெகு ஜாக்ரதையாகத் தான் பழகுகிறேன். என் உள்ளக் கிளர்ச்சி வெளியாகி, அதனுல் அவள் மனம் நிலை குலைந்தால் நம்பிக்கை துரோகமாகுமே.

கமலா பள்ளியில் படிக்கிருள். ஹாஸ்ட்டலில் தான் வாசம். ரொம்ப சங்கோசமுள்ள பெண். தலை கவிழ்த்துக் கொண்டு தான் என்னிடம் பேசுவாள். சேகரனும் அவளும் பழக ஆரம்பித்தபோது எனக்கு பொருமையாகத்தானிருந்தது. இத்தீயை வெகு கஷ்டத்துடன் அணைத்தேன். ஆயினும் நிலைமையை இப்படியே நீடிக்கவிட நான் விரும்பவில்லை. கமலாவுக்கும் சேகரனுக்கும் விவாகமாகி விட்டால், என் மனதை கட்டுப்படுத்த அது பெரிதும் உதவு மல்லவா? சேகரனின் தந்தையை சந்தித்து, இதைப் பற்றி பிரஸ்தாபித்தேன். அவர் சந்தோஷத்துடன் சம்மதித்தார். அச்சமயம் அங்கே வந்த சேகரன் விஷயத்தை அறிந்து பேரானந்தம் அடைந்தான். 'பெண்ணின் சம்மதத்தை கேட்டறிந்து கொண்டீர்களா?' என்று கேட்டார் அவனுடைய தகப்பனுர். 'அவசியமே இல்லை. அது தான் தெரிந்தே இருக்கே' என்றேன். அடுத்த ஞாயிற்றுக்கிழமை முகூர்த்தம் என்று நிச்சயித்து விட்டு வீடு திரும்பினேன். கமலா விஷயத்தை அறிந்தால் எத்தனை சந்தோஷப் படுவாள்? அவளுடைய நன்றிக்கு பாத்திரமாகும் பாக்கியமாவது எனக்கு கிடைத்ததே.

தலை குனிந்த வண்ணம் கமலா என்முன் வந்து நின்ருள்.

“கமலா, சேகரனுக்கு உன்னை கல்யாணம் செய்விக்க ஏற்பாடு செய்து விட்டேன். முகூர்த்தமும் குறித்தாய் விட்டது.......” என்னுல் மேற்கொண்டு பேச முடியவில்லை. தொண்டை அடைபட்டது. என்னதான் மனதுடன் போராடி உணர்ச்சிகளை

அடக்கி யிருந்தேனுயினும், இச்சமயம் அது பீறிட்டுக் கொண்டு வெளிவருவதை என்னுல் தடுக்க முடியவில்லை. இதோ, என் சவப்பெட்டிக்கு நானே ஆணி அறைந்து கொள்ளுகிறேன். இனி அவள் யாரோ, நான் யாரோ?

கமலா தலை நிமிர்ந்து பார்த்தாள். அவளுடைய கண்களிலிருந்து 'பொலபொல' வென நீர் பெருகி வழிந்தது. 'என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கக் கூடாதா? என் வாழ்வை நாசமாக்கி விட்டீர்களே. நான் உங்களுக்கு என்ன அபராதம் செய்தேன்?' என்றுகேட்டாள்.

'என்ன பேச்சு இது, கமலா? சேகரனை நீ காதலிப்பதாக அல்லவோ எண்ணிக் கொண்டிருக்கிறேன். அப்படியானுல், நீ யாரை விரும்புகிருய், சொல்' என்றேன் திடுக்கிட்ட வண்ணம்.

கமலாபதில்சொல்ல வில்லை. ஒரு கணம் என்னையே உற்று நோக்கினுள். பின் அவள் தலை கவிழ, அவ்விடம் விட்டகன்ருள். அப்போது தான் எனக்கு உண்மை விளங்கிற்று.

ஆம், கமலா என்னைக் காதலிக்கிருள்!

என் உள்ளத்தை யாரோ சம்மட்டி கொண்டு தாக்குவது போலிருந்தது. பயங்கரமான புயல் என்னுள் குமுறி எழுந்தது. பிரமித்து நின்றேன், கற்சிலையைப போல.

(128ம் பக்கம் தொடர்ச்சி)

கடைசியில், அறுபது ரூபாய்க்கு முடித்தேன்.....அறுபது ரூபாய்க்குக் கொள்ளை மலிவு இல்லையா?....நீங்களாக இருந்தால், பேசாமல் அவன் கேட்ட விலைக்கே ஒப்புக் கொண்டு வாங்கியிருப்பீர்கள்!'

'ஆமாம். புடவைக்குப் பணம் கொடுத்து விட்டாயா? ....எது பணம்?....' என்று கேட்டேன். ஏனென்ருல், அப்பொழுது என்னிடம் ஒன்றிரண்டு ரூபாய்களேயிருந்தன என்பது எனக்குத் தெரியும்.

'நான், 'சிக்கனமாக இருங்கள்' என்று சொன்னதன் பலன்தான் எனக்கு இப்பொழுது புடவை கிடைத்தது! உண்டியலிலிருந்த அறுபது ரூபாய் எனக்குச் சமயத்தில் உதவியது!....அந்த அறுபது ரூபாய் இல்லாமலிருந்தால் என்னுல் இதை எப்படி வாங்கியிருக்க முடியும்?'....

'அடி பாவி!....நான் இவ்வளவு நாள் வாயை ஒடுக்கி, மனதை அடக்கிச் சிக்கனமாக இருந்ததின் பலனுக உனக்கு ஒரு புடவை கிடைத்ததா?....பேஷ்!....இன்றைய தினத்திலிருந்து சிக்கன வாழ்க்கை போதும்!' என்று வயிற்றெரிச்சலுடன் கூறினேன். வேறு என்ன தான் பண்ணுவது?

மனோரதம்

(வசீகரன்)

'நான் உங்களை மணக்கப் போவதில்லை' என்று கத்தினாள்.

'யாரை?' என்றேன்.

'உங்களைத்தான்' என்று உரக்கக் கத்தினாள்.

'என்னைத்தான் மணந்து கொண்டிருக்கிறாயே... இப்பொழுதென்ன அதற்கு?' என்றேன்?

'இல்லை....நான் சொல்றேன்....மணக்கப் போவதில்லையென்று' என்று சொல்லிப் பக்கத்திலிருந்த ஒரு சிறு தாம்பாளத்தை எடுத்துச் சக்ராயுதம்போல் சுற்றி விசிறி எறிந்தாள். கடைசியில் அது சுழன்று சுழன்று....டண்.... டண் டணார்....என்று சப்தமிட்டு ரீங்காரமிட்டுக் கீழே உருண்டது.

'என்ன இது....? உனக்குப் பைத்தியமா? ஏ! ரமா....' என்றேன். ரமாவதி என்பது என் மனைவியின் பெயர். அதைச் சுருக்கி ரமா என்று தான் அவளைச் செல்லப் பெயரால் அழைக்கிறேன்.

'என்ன சொன்னீர்கள்.... பைத்தியமா?........ யாருக்கு?' என்று அருகிலிருந்த அவள் பைத்தியத்துக்காக வைத்திருந்த மருந்துப் புட்டியை எடுத்து விசிறி எறிந்தாள். உடனே வெளியில் வந்து 'பைத்தியம் .... பைத்தியம்....' என்று உரக்கக் கூக்குரலிட்டேன். வாசலில் சிறிது கூட்டம் சேர்ந்துவிட்டது.

'நானா பைத்தியம்?' என்று அவள் இன்னொரு புட்டியுடன் என்னை நெருங்கினாள்.

'பிடியுங்கள், கட்டுங்கள்' என்று சொல்லி ஆஸ்பத்திரிக்கு டெலிபோன் செய்தேன். ஆஸ்பத்திரி வண்டியும் கனவேகமாக வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய சிகப்புத் தலைப்பாக்காரர்களைப் பார்த்த உடனே, அவள் இட்ட கூக்குரல் எங்கேயோ ஓடி ஒளிந்து விட்டது. அவர்களிடம் இவளுக்குப் பைத்தியம்

முற்றி விட்டதெனச்சொல்லி போஷனைக் கான சில வைக் கொடுப்பதாயும், அடிக் கடி வந்து பார்த்துக் கொள்வ தாயும் கூறி, வண்டிலேற்றி அனுப்பினேன். அவளும் வெறிக்க வெறிக்க என்னைப் பார்த்துக்கொண்டே சொன் ஞள்.

ஆம்! அவள் பைத்தியந் தான். அந்தச் சம்பவம் நடந்து ஏன்-மூன்று வருடங்களுக்கு மேலேயே மறைந்து விட் டன. இன்னமும் அதை நினைத்துக் கொண்டால், எல் லாம் கனவுபோல் தோன்று கிறது. இன்றைக்கும் அவ ளைக் காணச் சென்றேன். அவளை அணுகிப் பேசும் பொழுது, என்னை வெறித்த பார்வையுடனே பார்த்தாள். கண்ணிலோ ஒளியில்லை, ஒரு பயங்கரமானசூன்யப்பார்வை! உள்ளுக் குள்ளே எனக்குக் கொஞ்சம் பயம்தான். அவ ளைப் பார்த்தபடியே அங்குள்ள மரத்தின் பட்டையின்மீது சாய்ந்தேன். என் எண்ணங் கள் மூன்று வருடங்களுக்கு முன் ஓடியது. பழைய சம்ப வங்கள் சிலருக்குத் தோன்றி ஞல் அவைகள் இன்பம் ஊட்டு வனவாக இருக்கும். ஆனல் அவையோ என் மனதை இரண்டாகப் பிளப்பதுபோ லிருந்தது.

அப்பொழுது நான் ஒரு வீரிய பிரம்மச்சாரி. நன்ருகப் படித்து விட்டு நல்லதோர் வேலையிலமர்ந்தேன். பெண் பெற்றவர்கள் கண்கள் சும்மா யிருக்குமா? நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு என்னைப் பேட்டி காண வந்த னர். கடைசியில் தான் நான் ரமாவைச் சந்தித்தேன். விதி என்று சொல்லுகிருர்களே அதன்படியாகத் தானே என் னவோ அவளே எனக்கு மனை வியாக அமைந்தாள். அப் பொழுது அவள் முகத்தில் சதா ஒரு புன்னகை; சுருண்டு விழுந்த கூந்தல்; ஒளி கக்கும் கண்கள்-ஆம்! அவள் ஒவ் வொரு அவயமும் இளமை யைக் கக்கிக் கண்களை மயக்க முறச் செய்தன. இவைக ளெல்லாம் அளவற்ற இன்பக் கடலில் என்னை மூழ்க்கி அவ ருக்கே என்னை அடிமையாக் கியதில் ஆச்சரியமில்லை.

ஒரு மாத காலம் எப்படித் தான் போயிற்றென்பது தெரியவில்லை. அடிக்கடி அவள் தாய் வீட்டாரும் பார்த்து புளகாங்கித மாயினர்.

பெரிய பாற்கடலில் ஒரு துளி விஷங் கலந்தாற்போல,

எங்களுடைய சந்தோஷமான வாழ்க்கைக்கு ஒரு அரைப் புள்ளி விழுந்தது. அன்றைக்கு ஆபீசில் எனக்கு அதிக நேர மாகி விட்டது. ஒரு வருஷ லாப நஷ்டக் கணக்குகளைப் பரிசீலனை செய்து வரத் தாமத மாகி விட்டது. ஓடோடியும், கை நிறைய புஷ்பமும், பழ மும் வாங்கிக் கொண்டு மனை வியை எதிர் நோக்கி வந்தேன். வீடு திறந்திருந்ததே தவிர உள்ளே சென்று பார்த்ததில் ஒரு விதச்சந்தடியையும் காண வில்லை. "தினமும் நாம் வரும் போது எதிர் கொண்டு அழைப்பாளே, இன்றைக் கென்ன இந்த விபரீதம்' என்று எண்ணி, சமையலறையில் சென்று பார்த்தேன். அங்கு அவள் ஒரு துண்டை விரித்து அதன் மீது முனகிக் கொண்டு படுத்திருந்தாள் அவளுக்கு என்ன உடம்போ என்று நினைத்து அணுகி, 'உடம்பு என்ன, ஏன் இப்படி முனகு கிறாய்?' என்றேன். அவள் சலித்துக்கொண்டு 'ஆமாம் உடம்புக் கென்ன?.... நீங்கள் இப்படித்தான் .... தினம் .... தினம்....நாழி கழித்து வருகி றீர்களே....வரவர ....என்றால் பொறுக்கவே முடியவில்லை.... நீங்கள் செய்வது....எனக்குத் தெரியும்' என்று விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள்.

அட, ஈஸ்வரா! இதேதடா சனியன்....அவலை நினைத்து உரலை இடிப்பது போலல்லவா இருக்கிறது என்று எண்ணி 'இன்றைக்கு ஆபீசில் ஜோலி அதனால் கொஞ்ச நாழியாகி விட்டது....இதற்கென்ன இவ் வளவு கோபம்....புருஷாள் என்றால்....வர பஸ் முதலிய வைகள் கிடைத்து வர வேண் டாமா? இந்தா .... புஷ்பம். எடுத்து வை' என்று சொன்ன தும் அதை வாங்கி அலட்சிய மாக விசிறி எறிந்தாள். எனக் குத் தூக்கி வாரிப் போட்டது. அன்போடு கணவன் வாங்கி வரும் சாமானைத் தூக்கிஎறிவ தென்றால் எந்த மனிதனுக் குக் கோபம் வராது? நேற்று வரையில் நன்றாக இருந் தாளே, இன்றைக் கென்ன இந்த மனமாற்றம்? 'என் மனம் ஆராய்ச்சி செய்தது. ஆனால் பெண்களே இப்படித் தான். ஆம்....ஊம் என்றால் சண்டை பிடித்துக்கொள்வார் கள்; பிறகு தனக்குத் தானே வந்து ஒட்டிக் கொள்வார்கள்; அது அவர்களோடு பிறந்த சுபாவம் என்று நினைத்து, எனக்கு நானே சமாதான மடைந்து ஒரு பெருமூச்சு விட்டேன்.

"என்ன மூச்சுவிடறேள்.... இந்தச் சனி தொலையாதா

என்று' என்றாள் கண்களில் கோபம் பறக்க.

'சம்மந்தம் இல்லாமல் பேசுகிறாயே; புத்தி சுவாதீன மில்லையா' என்றேன்.

'இருக்கு.... நன்றாயிருக்கு. உங்களை வர வரக் கேட்பார் யாருமில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்...' என்று சொல்லி ஏதோ போட்டேன் என்று காப்பி என்ற ஒரு கஷாயத்தை என் முன் வைத்தாள். அதுவும் ஒரே யடியாக ஆறியிருந்தது. வேலை செய்து களைப்புற்ற மனிதன் வீட்டுக்கு வரும்பொழுது, இன் சொல் கூடிய மனைவியின் புன்னகை ததும்பும் முகத்தை யல்லவா எதிர்பார்க்கிறான். அதற்கு மாறாக இருந்தால் உலகமே அவனுக்கு வெறுப்பாகி விடுகிறது. அதே போல் தான் எனக்கும் அவள் வைத்த காப்பியைச் சாப்பிட மனதில்லை. அப்படியே வைத்திருந்தேன்.

'போட்டு இரண்டு மணியாச்சு.... சாப்பிட்டால் தானே?' என்று அன்புடன் கடிவதுபோல் கடிந்தாள்.

அப்பொழுது மறுபடியும் பேச்சைத் தொடங்கினாள். காப்பியை அருந்திக் கொண்டிருந்தேன்.

'அது சரி...நீங்கள் ஆபீசிலிருந்து நேரேத்தான் வருகிறேளா?' என்றாள்.

'என்ன கேள்வி இது' என்றேன்.

'அதை விடுவிக்கத் தான் கேட்கிறேன்' என்றாள்.

'எதுக்கு?'

'சொல்லுங்கோ........எனக்குத் தெரிஞ்சு போச்சு' என்று தலையை ஆட்டினாள்.

'என்ன தெரிஞ்சுது?'

'நீங்க போன இடம்?'

'பின் ஏன் கேக்கறே?'

கொஞ்ச நேரம் மௌனம். பிறகு தொடர்ந்தாள்.

'அடுத்தாத்து அம்புஜம் சொன்னது சரியாய்ப்போச்சு. ...நான் என்னமோன்னு நெனைச்சேன்' என்று ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டாள்.

'அவள் என்ன சொன்னாள் ....அது வேறேயா?' என்றேன்.

'ஆமாம்....உங்க சிநேகிதர் என்று கூப்பிட்டுக் கொண்டு வருவேளே ... ராமதாஸ்....... தெரிகிறதா?'

'ஆமாம் சொல்லு, இன்றைக்கு அவருடன் தான் மார்க்கெட்டுக்கு போய் வந்தேன்....'

அவருக்கு ஒரு தங்கை உண்டாமே....அவள் வாழா வெட்டியா யிருக்கிறாளாமே'

'உண்டு; கேள்விப்பட்டிருக்கிறேன்....'

'கேள்விப் பட்டிருப்பேளா? கேள்வி தானுப்பட்டிருப்பேள் ....கொஞ்சம்...கொஞ்சமா.... அவா வீட்டைத் தேடிண்டு- சிநேகம் கொண்டாடி....நான் ஒருத்தி இருக்கிறேனே என்றதைக் கூடச் சிறிதும் நினைக்காது....'

'இது என்ன புதியபுகார்.... எனக்கு ராமதாஸ் நண்பன் தான்....அவனும் நானும் உலக விஷயங்களைப் பேசிக்கொண்டு மார்க்கெட்டுக்குப்போவோமே தவிர, அவள் வீடே எனக்குத் தெரியாதே; ஆனால் அவனுக்கு ஒரு தங்கை உண்டு; அவள் கணவனிடம் செல்ல மறுத்து வீட்டிலேயே இருக்கிறாள் என்று அவன் சொல்லக் கேட்டிருக்கிறேன்; அவ்வளவு தான்....இந்த சங்கதி.... அடுத்த வீட்டு சாரநாதன்- அம்புஜத்தின் கணவனுக்குக் கூடத் தெரியுமே .... ஆனால் அவளுக்கும் எனக்கும் ஏதோ சம்பந்தத்தை யுண்டுபண்ணி ஒரு புகாரை உண்டு பண்ணி, லேசாகக் காற்றில் பறக்க விட்டிருக்கிறார்கள். அட... ஈஸ்வரா .... ரமா... ரமா .... இதை நீ நம்புகிறாயா? .. என் குணம் உனக்குத் தெரியாதா ....' என்றேன்.

'நம்பறேனே இல்லையோ .. என் தலைவிதி அது—ஒரு பெண்ணாகப் பிறந்து...இப்படிக்கூட அவதிப்பட வேண்டும்' என்று மளமள வென்று தன் கண்களில் குற்றால நீர் வீழ்ச்சியை வரவழைத்து விட்டாள்.

நான் சிறிது யோசனை செய்து பார்த்தேன். இது பக்கத்து வீட்டார் பொய்யும் பித்தலாட்டமும் செய்து, ஏதோ கயிறு திரித்து விட்டிருக்கவேண்டும். இவ்வளவு அன்னியோன்னயமாயிருக்கிறார்களே, இதை எப்படிக் கலைப்பது, சகிப்பது என்று நாரதராக மாறி பொருமையால் தருமோபதேசம் செய்திருக்க வேண்டும். நாரதர் கலகம் நன்மையில் முடியும்என்கிறார்கள். ஆனால் இத்தகையவர்களோ தலையில்லாது கோள் மூட்டித் தமாஷ் பார்க்கிற பேர்வழிகளாகத் தானிருக்கவேண்டுமென்று எண்ணி, என் வேலையைக் கவனிக்க எழுந்தேன்.

அருமையான மனைவியை விட்டு, மனம் வேறிடத்தில் சென்றால், அவன் மனித வர்க்கத்தில் சேர்ந்தவனல்ல; கேவலம் மிருகம்கூட பாங்காகவே நடந்து கொள்ளுகிறது. நான் மனச்சாட்சியோடு தான் நடந்து வருகிறேன்; பொறு

மைக் காரணமாக ஒரு சிறு புகாரைக் கிளம்பினார்கள்.... அவ்வளவு தான் ...அதுவே குடத்திலிட்ட பூதம்போலாகி வெளிக்கிளம்பி, எரிமலை வெடிப்பது போல் வெடித்தது. மறுநாள் நான் ஆபீசிலிருந்து வந்ததும் உட்காரக் கூட இல்லை.

'எனக்கு ஒரு சத்தியம் செய்து கொடுங்கள்' என்றாள்.

'ஆஹா, அதுக்கென்ன.... என்னை மனமாற மணந்த உனக்கு மனம் மாறி விட்டதோ' என்று அங்கலாய்த்துக் கொண்டு, விஷமப் பிரசாரம் இன்றைக்கும் தீவிரமாக நடந்திருக்கிறதென்று அயரலானேன்.

'இருக்கிறது ... நம்பிக்கை போகவில்லை ... இருந்தாலும் ....ஊரார் சொலகிறார்கள்.... அதுக்காக' என்றாள்.

'அப்படியாவது என்ன செய்து விட்டேன்....செய்யத்தகாததை' என்று கேட்டேன்.

'ஆமாம்—என்னை விட்டு விட்டு, வேறு கல்யாணம் செய்துக் கொள்ளப் போகிறேளாம்...' என்று விம்மி விம்மி அழுது விட்டாள்.

'இல்லையே....அது சுத்தப் பொய்க் கதை.... நீ இருக்கும் போது.... எனக்கென்ன....கல்யாணமா அடி ....அசடே..... ஊரார் பேச்சுக்கு மதிப்பு வைக்காதே....காது கொடுத்து கேட்காதே .... அப்படித்தான் ஒருவன் வாய்வந்தால் ஆயிரம் பொய் சொல்லுவார்கள்.... அவர்கள் கண்கள் கொள்ளிப் பிசாசுக் கண்கள் .... உனக்கொன்றும் குறைவில்லை.... ரமா! நானும் உன்னைவிட்டுப் பிரியப் போவதில்லை....வீணே எதற்குக் கவலைப் படுகிறாய்.... நானா வேறு கல்யாணம் செய்து கொள்பவன்....சீ....சீ ....என்ன உலகம் இது....' அவளை அன்புடன் தலையைக் கோத முயன்றேன்.

'விடுங்கள்....சத்தியம் செய்யுங்கள்....வேறு ஒருவரையும் மணக்கப் போவதில்லையென்று' என்று கத்தினாள். 'ஆகட்டும், அப்படியே....' என்று கையடித்துக் கொடுத்தேன்.

அந்த இரவு அவளுக்குச்சரியான தூக்கமில்லை. புரண்டு புரண்டு படுக்கையில் படுத்தாள். அடிக்கடி 'அம்புஜம்.... நீ சொன்ன மாதிரியேசெய்து விட்டேனடி....சத்தியம்வாங்கி விட்டேனடி....' என்று மெதுவாக முணமுணுத்தாள்.... கொஞ்ச நேரம் கழித்து திடீரென்று எதையோ நினைத்து எழுந்தாள். என் கட்டிலருகில் வந்து நின்றாள். அப்பொழுது

மணியும் டாணடாண என்று பன்னிரண்டு அடித்து ஓய்ந் தது. 'சத்தியம் செய்தேளே ....மறந்து விட்டேளா அதுக் குள்ளே....'என்று அச்சமயத் தில் சொன்னபோது, அறைத் தூக்கத்தில் இருந்த நான் உண்மையாகவே நடுங்கிவிட் டேன். அதுவரையில் பய மென்பதே என்ன என்பது தெரியாமலிருந்தது. அந்த சுரம் தணிய இரண்டு நாளா யிற்று. அதைச் சொல்லி விட் டுத் தன் படிக்கையில் உட் கார்ந்து ஏதோ பெரிய சிந்தனை யில் ஈடுபட்டவள் போல் தோன்றி பிறகு வெகு நேரம் கழித்துப் படுத்தாள்.

மறுநாள் காலை. அவள் எனக்கு எப்பொழுதும் முன் னமேயே எழுந்திருந்து, பாத் திரம், பண்டம் முதலியவை களைத் துவக்கிவிட்டு, காப்பிப் போட்டு ரெடியாக வைத்தி ருப்பார்கள். ஆனால் அன்று நான் எழுந்தபொழுது அவளை அவள் கட்டில்மேலே உட்க் காந்துக்கொண்டு "யாரையும் மணக்கப் போவதில்லை....உம் ....மணக்கப் போவதில்லை..." என்று எதையோ பார்த்து சொல்லிச் சிறிது சிரித்தாள். இதைப் பார்த்த எனக்கு வயிற் றில் புளி கரைத்துக்கொண் டினது போல் ஒருணர்ச்சி ஏற் பட்டது. ஒரு வேளை நான் சொன்னது....அவள் மனதை யே மாற்றி விட்டதா?....அல் லது சித்தப்பிரமை என்று சொல்கிறார்களே....அதுவா... மகா பாவிகள்....அழகான மாசு மருவற்றுக் கிடந்த மன தை எப்படிக் கலைத்துவிட்டார் கள்...." என்று நினைத்தேன். நானே எழுந்து காப்பி போட்டு, ஒரு டம்ளர் என் ரமாவிடம் கொடுத்தேன். அதைக் கையில் வாங்கிக் கொண்டு வாயினருகில் கொண்டுபோய் சடாரென்று என் முகத்திலேவிசிறி எறிந்து விட்டாள். 'ஓஹோ....இப் பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பம் போன் றிருக்கு' என்றெண்ணி மறு விநாடியே அவளுடைய தாயா ருக்குத் தந்தி கொடுத்தேன். மாமியும் வந்து பார்த்து, 'அவ ளுக்கு ஏனோ மனக்கலக்கம்.... சரியாகப் பதிலே சொல்ல மாட்டேன்கிறாள்....ஒரு டாக் டரைக் கேளுங்கள்....'என் றாள். நானும் ரமாவை அழைத் துக்கொண்டு டாக்டர் சுலோ சனாவிடம் சென்று காண்பித் தேன். அவளுக்குச் சிறிது சுரம் இருக்கிறதென்றும், 'டெம்பரேசர்' எவ்வளவு இருக்கிறதென்று பார்க்கிறே

னென்று, 'தெர்மா மீட்டரை' எடுத்து வாயில் வைத்தாள். இதுவரை சும்மா இருந்த ரமா, அப்பொழுது அந்த தெர்மாமீட்டரை நறுக்கென்று ஒரு கடி கடித்தாள். 'ஹா....ஆ....ஐயோ....' என்ற சப்தத்துடன் டாக்டரும் நர்ஸும் ஓடிவந்து பார்த்தால், வாயில் ஒரே இரத்த வெள்ளத்துடன் அந்தக் கண்ணுடிச் சில்களை மென்றுகொண்டிருந்தாள். உடனே அவளுக்கு ஒரு மயக்க மருந்துகொடுத்து, சுய அறிவு வருமுன்னே அத்துண்டுகளை யெல்லாம் நீக்கி, அங்கேயே ஒரு வாரம் வைத்திருந்தார்கள்.

எட்டாம் நாள் மறுபடியும் சென்று பார்த்தேன், எப்படி இருக்கிறுளென்று. சுலோசன டாக்டர் என்னிடம் ஓடிவந்து 'ஏன் சார் அடிக்கடி அவள்... சத்தியம்....மணக்க மாட்டேன்' என்று ஏதோ உளறுகிறுளே சம்பந்தமில்லாமல்... ஒரு வேளை உம்மைக் காதலிக்காது, வற்புறுத்தலுக்காக மணம் செய்து கொண்டாளோ?' என்றுள். 'இல்லை டாக்டர், அப்படி யொன்றுமில்லை. தூய வெள்ளை வஸ்திரத்தில் ஒரு துளி மை பட்ட மாதிரி, அவளுடைய—என்னுடைய ரமாவினுடைய—வெள்ளை மனதை யாரோ கலைத்து விட்டிருக்கிறுர்கள். ஏன் என் பக்கத்து வீட்டுக்காரர்கள் தாம். நான் இல்லாதபோது கீதோபதேசம் போல் கலகோபதேசம் செய்து அவளை இந்த நிலைக்குக் கொண்டு வைத்துவிட்டார்கள்....எப்பொழுது டாக்டர் இது சரியாகும்? அவள் உடம்பு எப்பொழுது தான் குணமாகும் டாக்டர்' என்று தழதழைத்த குரலில் கேட்டேன். அவள் இருந்த நிலையை நினைத்து தொண்டையடைத்துக் கொண்டது. முழு விவரத்தையும் அவளிடம்—டாக்டரிடம்—கூறி முடித்தேனே இல்லையோ....ரமாவுக்கு நன்ருக ஞாபகம் வரத் தொடங்கி அங்குமிங்கும் ஓடத் தலைப்பட்டாள். ஆனுல் டாக்டர் கொடுத்துவந்த மருந்தினுல் அந்தச் சித்தப் பிரமை அதிகமாகாமல் கொஞ்ச நாள் அடங்கியே யிருந்தது.

கடைசியாக வீட்டிற்கு அழைத்து வந்தேன் ரமாவை. என் மாமியும் எவ்வளவோ ஜாக்கிரதையாகத் தானிருந்தாள். இருந்தாலும், மறுபடியும் லேசாக அந்த சித்தப் பிரமை ஆரம்பித்தது, வரவர அதிகமாகி அந்தப் பாழும் ஐயோ....சொல்ல நாக் கூசு

கிறதே—பைத்தியம்—என்னும் சொல்லில் முடிந்துவிட்டது. அன்றிலிருந்து அவளுக்கென்று எந்த உணர்ச்சியும் கிடையாது. மனித வர்கத்தின் நினைவையே இழந்தாள் – பூரண யோகியரையும், ஞானியையும் போல, ஆஹா! விதி சதிசெய்கிற தென்கிறார்களே....இதுதான் போலும்! அதன் பிறகு சாமான்கள் உடைக்கிறதும்....ஓடுவதும் குறிப்பதும்....அட....டா....

பைத்தியம் நன்றாக பூரண சோபையுடன் விளங்கிற்று. பௌர்ணமி வந்தால் அதற்குக் கொண்டாட்டம் தான். 'நான் உன்னை மணக்கப் போவதில்லை....' என்று கத்தினாள். நான் மணந்து அவளை வாழவிடவில்லை யென்ற எண்ணமோ? அல்லது சித்தப் பிரமையினால் இனி மேல் என்னை மறுபடியும் மணக்கப்போவதில்லை என்றும் தான் கன்னியாகவே யிருக்கப் போவதாக எண்ணும் அலைமோதலோ?

என் காரில் ஒரு வஸ்து விழுந்தது. அது காற்றில் பறந்து வந்தது. அதை எடுத்துப் பார்த்தேன். அது ஒரு ஏடு. அதில் என்ன எழுதியிருக்கிறதென்று எடுத்துப் பார்த்தேன்.

'மனிதன் தன்னாலே ஒன்றையும் வரவழைத்துக் கொள்வதில்லை. தன்னை மாற்ற முயல்வதில் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறான். மனம் தடுமாறுகிறது....உலகியல்பு அது....அரிய பொக்கிஷமாகிய உன் மனதைச் சுத்தமாக வை. மற்றவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு உண்மையை யறியாமல் செவி சாய்க்காதே, என்றிருந்தது. மேலே பார்த்தேன். மணி ஆறு. என் சிந்தனை கலைந்தது.

'நான் போய் வருகிறேன்....ரமா....மறுபடியும் அடுத்த வாரம் வருகிறேன்' என்று நீர் நிரம்பிய கண்களால் பார்த்தேன்.

'ஹி....ஹீ.... ஈ.... ஹா ....' என்று உரக்கச் சிரித்தாள். 'உம்....தாங்கள் எவ்வளவு தரம் வந்தாலும் உங்களை நான் மணக்கப் போவதில்லை....' என்றுகத்திகொண்டுநின்றாள்.

நான் வெளியுலகிலே, சிந்தனை அலையாலே மோதப்பட்டு என் வீட்டை நோக்கிப் புறப்பட்டேன். 'உன் மனதைச் சுத்தமாக வை' என்ற அந்த ஏட்டிலிருந்த வரி என்னுடைய நடையோடுகூட தாளம் போட்டுக் கொண்டு வந்தது போலிருந்தது. அந்தி வானச் சூரியனும் என் நிலைமையைப் பார்த்துப் பரிதாபங்கொண்டு, மேற்கில் மறைந்து கொண்டான். வானமும் அனுதாபத்தால் இரண்டு சொட்டுக் கண்ணீர் சிந்தியது.

விளக்கிச்சொல்லுங்கள்

'காமு'

'கசபுச, கசபுச' வென்று எப்பொழுது பார்த்தாலும் பாட்டுங் கூத்துமாக இருக்கும் எங்கள் அடுத்த வீடு, ஒரு மாதத்திற்கு மேலாக ஒரே அமைதிக்குள் 'அமுங்கி'ப் போய்க் கிடக்கிறது காலை மாலை என்ற பாகு பாடின்றி எந்த நேரங்களிலும் ஒரே கொம்மாளமாக விருக்கும், எங்கள் வீட்டுப் பின்புற வாய்க்கால் துறையும்,அதைப்போலவே சோபையிழந்து வெறிச் சோலை கிடக்கிறது.

காலை நேரம். சூரியனின் தோற்றம் இன்னும் உலகத்தின் மீது பட்டொளிர வில்லை. பக்ஷிஜாலங்களின் படபடப் பொலிகள், இயற்கை தேவியின் கண் விழிப்பிற்கு பூபாளம் பாடிக் கொண்டிருந்தன.

எங்களில்லத்தில் இன்னும் யாரும் கண் மலரவில்லை. நான் விழித்துக்கொண்டேன். அன்று மட்டிலுமல்ல. ஆறு மாதங்களாக, ஆம், அந்த அடுத்த வீட்டிற்கு அந்த நாடகக் கம்பெனியார்கள் குடிவந்ததிலிருந்து நான் தூக்கம் நீங்கிக் கண்மலர்ந்து பழகிப்போன - வழக்கமான - நேரம் அது தான்.

"நாடகக் கம்பெனிக்காரர்கள் பக்கத்து வீட்டிலே வந்து தங்கி இருந்ததால் அவர்கள் அதிகாலையில் மீட்டும் வீணையின், பாட்டின் ஒலிகள் அப்படி-அந்த நேரத்தில் - விழித்துப் பழகிப்போய் விட்டாயாக்கும்?" என்று நீங்கள் கேட்கலாம். உண்மை தான். 'உலகம் யெப்படி யிருக்கும்?' என்று பொட்டையனைக் கேட் என்ன சொல்லுவான்? 'ஒரே இருள் நிறைந்தது' என்பதைத் தவிர வேறு விதமான பதிலை அவனிடத்திலே யெதிர் பாக்க முடியுமா? அதைப் போன்றது தான் 'நாடகக் கம்பெனிக்காரர்களின், நடிகர்களின் பாட்டொலியில் நான் விழித்துக் கொள்வேன் என்பதும். 'பின் எப்படி, எதர்க்காக அந்தக் கம்பெனிக்காரரின் உங்கள் வீட்டிற்குப் பக்கத்து வீட்டிலே வந்து தங்கியது முதலாக நீ அந்த நேரத்தில்

விழித்துக்கொள்வது வழக்க மாகி விட்டது?' என்ற கேள்வி உங்கள் இதய மொக்கிலிருந்து வெடித்து மணம் வீசிக் கமழ்ந் திருக்கும் தான். இல்லையா? ஆம் அப்படித்தான் இருக்கும் என எண்ணுகிறேன்.

அந்த அடுத்த வீட்டில் வந்து தங்கி இருந்த நாடகக் கம்பெனி நடிகர்கள் தாம் யென்ன யெண்ணிக் கொண்டிருந்தார்கள் என்னைப் பற்றி? ...அல்லது அவர்களைப் பற்றி நான்தான் என்ன எண்ணிக்கொண்டிருந்தேன்? ....

* * *

ஆம், என்ன எண்ணினேன்? ....இந்தக் கேள்விக்குப் பதிலளிப்ப தென்பது அனேக மாக என்னால் இயலாத காரியம் தான். ஒரு வேளை இன்ன தென்று சொல்லத் தெரியாத இன்ப நிலை ஆம், அதுதான் காதல் என்கிறார்களே அது எனக்குள் புகுந்து வேலை செய்திருக்கும் என்கிறீர்களா? இருக்கலாம். ஆனால் இதுவரை காதல் என்பது இன்னதென்று எனக்குத் தெரியாது!

அன்றொரு நாள் மாலையில் அந்த நாடகக் கம்பெனியார்கள் பக்கத்து வீட்டிலே குடியிருந்த காலத்தில் தான். என் தோழி ஒருத்தி எங்கள் வீட்டிற்கு என்னைப் பார்க்க வந்திருந்தாள். நான் சொல்லையிலே கனகாம்பர மலர் பறித்துக் கொண்டிருந்தேன். கொல்லைக் கோடியிலுள்ள வாய்க்காலில் நடிகர் குழாம் கூடிக் கொம்மாளித்துக் கொண்டிருந்து அடுத்த வீட்டுக்கொல்லைக் கிணற்றடி. அங்கே, என் பார்வை அகஸ்த் மாத்தாய்ச் சென்றது. ஆணழகன்–அந்த நாடகக் கம்பெனியின் பெண் வேஷதாரி நின்று கொண்டிருந்தான். இரவிலே, 'பவுடர்' பகட்டிலே எல்லோரையும் மயக்கும் அவன் முகம் எப்படி யிருக்கிறது? என்று பார்க்கவேதான் அவன் முகத்தினிடம் என் விழிகளின் ஓட்டத்தைச் செலுத்தினேன். அவனும் அப்படியே செய்தான். இருவர் கண்களும்!....

நான் அர்த்த மில்லாமல் சிரித்தேன். அவனும் அதையே செய்து வைத்தான். அந்தச் சமயம் பார்த்து அங்கே என் தோழி வருவாளா? அவள் 'என்னடி வாஸந்தி மலர்க் கொய்யவந்த இடத்திலே!....' என்று கிண்டலாக வார்த்தையைக் குறையிலே நிறுத்திக் கூறினாள். நான் தலையைக் கவிழ்த்துக் கொண்டேன். அவன் போய் விட்டான். நாங்களும் மலர்க்

கொய்து கொண்டு சிறிது நேரத்திலே வீட்டினுள் சென்ளேம்.

கூடத்தினுள் சென்று ஊஞ்சலில் அமர்ந்தோம் 'கூத்தாடிப் பையனிடத்திலா?....' என்ருள் என் தோழி. வார்த்தை முழுமையையும் அவள் கூருவிட்டாலும் அவள் சொல்ல நினைப்பதை நான் புரிந்து கொண்டேன். ஆகவே நான் 'அப்படியெல்லாம்ஒன்றுமில்லையடி?' என்று அதட்டியே சொன்னேன். ஆனுல் என் குரலே நான் ஏதோ ஒன்றை மறைக்க முயல்வதாகக் கூறியது! இப்படி அவள் என்மற்ற தோழிகளிடத்திலே கூறிவிட்டாள்.பிறகு அது பெண்களறிந்த ரகசியமாகி எங்கள் பள்ளி மாணவிகள் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. கசமுச, கசமுசவென்று என் தோழிகள் கூட்டங் கூட்டமாகக் கூடி இதையே பேச்சாகப் பேசித் திரிந்தார்கள்.

'அவன் அழகனும்!' என்பாள் ஒருத்தி.

'அழகாகவும் பாடுவானும்!' என்பாள் இன்னெருத்தி.

'அவன் நடிப்பு அபாரமாமே!' என்பாள் அப்புறம் ஒருத்தி. இப்படியாக எல்லாப் பெண்கள் வாய்களும் அவனைப் பற்றியே பேசின. வேண்டுமென்றே என்னைப் பார்ப்பதாகக் கூறிக்கொண்டு என் தோழிகள், தினம் தினம் என் வீட்டிற்கு வந்துபோக ஆரம்பித்தனர். வரும் ஒவ்வொருத்திக்கும் எங்கள் வீட்டுக் கொல்லைத் தோட்டத்திலே வேலையிருக்கும்! அங்கு போனதும் அவர்கள் கண்களுக்கு அந்த அடுத்த வீட்டுக் கிணற்றடியில் பார்வையிருக்கும். அந்த நடிகனும் நான் அவனைப் பார்த்துச் சிரித்ததை அவனேடுள்ள மற்ற சகா நடிகர்களுக்குச் சொல்லி இருப்பான் என்று நினைக்கிறேன். ஏனென்ருல் அந்த நிகழ்ச்சிக்குப் பின் அந்தக் கிணற்றடியில் நடிகர்கள் கூட்டமாகக் கூட ஆரம்பித்து விட்டார்கள்.

ஒருவன் எங்கள் கொல்லையில் தன் பார்வைச் செலுத்துவான். உடனே மற்ருெருநடிகன் 'அங்கே என்னடா!' என்று கேட்டுக் கொண்டே தானும் பார்ப்பான். படி அங்கு கூடும் நடிகர்கள் அத்தனைபேர்களும் அதையே செய்வார்கள். விசிலடிப்பான் ஒருத்தன். பாட்டுப் பாடுவான் வேறு ஒருத்தன். நாடகக் கதைகளிலே உருப்போட்ட காதல் மொழிகளை உச்சரிக்க

வாரம்பித்து விடுவான் மூன்றுவதாக ஒருத்தன். அதுவும் அந்தப் பெண் நடிகன் இருக்கிறானே அவன் அன்றையிலிருந்து பகலிலும் தன்னை 'மேக்கப்' செய்துகொள்ள ஆரம்பித்து விட்டான். கடைகளில் விற்கும் அத்தர்களெல்லாம் அவன்மீது ஆறாக ஓட ஆரம்பித்தன! இந்தப் பித்தர்களைப்பற்றி நான் என்ன எண்ணுவது?....ஒருநாள் ஒரு கடிதத் துண்டைக்கூட எங்கள் கொல்லையிலே நான் நிற்கும் நேரம் பார்த்து அந்த நடிகன் விட்டெறிந்தான். ஆனால் அதை நான் என் காலால் கூடத் தொடவே இல்லை. எங்கள் வண்டிக்காரன், சமையற்காரன் இவர்கட்கெல்லாம் கூட ஓசு டிக்கெட்டில் ட்ராமாப் பார்க்கும் பாக்கியம் கிட்டிற்றென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். 'பையனை'க் காதல்எத்தனை தூரம் ஆட்டிப் படைத்திருக்கிற தென்பதை!

நான் என்னவோ அன்று அந்த நடிகனைப் பார்த்தது உண்மைதான். அந்தப்பார்வையிலே விபரீத அர்த்தம் தொனித்திருக்கலாம் என்பதையும் இன்று நான் மறுக்கவில்லை. ஆனால் சத்தியமாக நான் அவனைக் காதலிக்கவில்லை. அந்தச் சந்திப்பிலிருந்து எனக்குத் தூக்கம் சரியாகக் கொள்ளவில்லை. எழுந்ததும் எழுந்திருக்காததுமாக் வீட்டின் பின்புறத் தோட்டத்திற்குத் தான் என் கால்கள் என்னை இழுத்துச் செல்கின்றன. ஜாடையாக இதைப் பற்றி என் தந்தையே என்னை இரண்டோர் முறை கண்டித்தும் விட்டார்!

நாடகக் கம்பெனி எங்கள் ஊரைவிட்டு வேறு ஊருக்குச் சென்று இப்போது மாதம் ஒன்றாகி விட்டது! எனினும் அன்று ஆரம்பித்த அந்தப் பழக்கம் இன்றும் என்னை விட்டகலவே இல்லை.

எங்கோ வீணையில் ஒலிகேட்கிறது. ஆர்மோனியம், பிடில், பில்லாங்குழல் ஜலதரங்கம், புல்புல் தாரா....இப்படி எல்லா இசை வாத்தியங்களும் முழங்க அந்த நடிகன் தன் அழகிய, இனிய சாரீரத்தால் பாடுவது நன்றாகக் கேட்கிறது. என் அறையிலுள்ள 'டைம்பீ'சில் காலை மணி நாலு, அல்லது நாலரையாக இருக்கிறது! என் மனத்தில் ஏதோ ஒன்றை இழந்து விட்டது போன்ற ஏக்கம். அந்த நாடகக்கம்பெனி வீடு காலி, ஏகப் பெருமூச்சுடன் அந்த வெறும் கிணற்றடியை ஒரு முறை பார்த்துவிட்டு நான் உள்ளே செல்கிறேன். நான் யாரையும் காதலிக்கவில்லை. நான் செய்யும் இந்தச் செய்கைக்குப் பெயர்தான் என்ன? இதுதான் எனக்கு விளங்கவே இல்லை!